

# அமுது

AMUDHU

ஊற்று 1


துளி 12

SEPTEMBER 99

இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை - செப்டெம்பர் 99 -30/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷெல் கற்றுத்தந்த சுற்றாடல் பாடம் விலைமதிப்பற்றது.



ஷெல் எங்கள் பாடசாலையில் நடத்திய மீள்பாவனை பற்றிய விளக்கத் திட்டத்தின் பயனாக நானும் எனது நண்பர்களும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்கக் கற்றுக்கொண்டோம்.



குப்பைகூழங்கள் மற்றும் கழித்தொதுக்கும் பொருள்களைக் குறைத்தல், மீளப் பயன்படுத்தல், புதுப்பித்துப் பயன்படுத்தல் என்பன பற்றி ஷெல் எமக்கு விரிவாகச் சொல்லித் தந்தது. பாடசாலையிலும் வீட்டிலும் நாம் வீசியெறியும் பொருள்களை எவ்வாறு மீளப் பயன்படுத்த முடியும் என்பதை நரம் அறிந்துகொண்டோம். மீள்பாவனை முறைகளைக் கையாண்டால் பொலித்தீன் பைகளினால் வடிகால்கள் அடைபடுவதைத் தவிர்க்க முடியும். நுளம்புத் தொல்லையைக் குறைக்க முடியும். இதனால் கொழும்பு மாநகரத்தில் சுகாதாரமான வாழ்க்கைச் சூழல் உருவாகும். எமது வாழ்க்கையை மேம்படுத்துவதில் ஷெல் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது முற்றிலும் உண்மை.

***ஷமீலா செனவீரத்ன***
**ஷெல் பாடசாலைச் சுற்றாடல் திட்டத்தில் பங்குபற்றிய மாணவி**

*வாழ்வைச் சிறப்பிக்கத் தன்னை அர்ப்பணிக்கும்* **Shell GAS**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதக் கடலில்...


அமுத வாசல் . . . . . . . . . . . . . . . 2

**ஆபத்தான நிலைமை** . . . . . . . . . . . 5

நெற்றிக்கண் . . . . . . . . . . . . . . . 6

**மௌமாக்கப்பட்ட மானுடப் புயல்:**

ராஜினி . . . . . . . . . . . . . . . . . . . 8

**பேட்டி:**

சர்ச்சைக்குரிய **UTHR (J)** . . . . . . . 12

**கவிதை:**

நீங்கள் தூவிய மலர்கள் . . . . . . . . . 17

கோழிச்சண்டை சூதாட்டம் . . . . . . . . 18

**சிறுகதை:**

சந்தைக்கு வராத பண்டங்கள் . . . . . 20

**டாவின்சி:**

பொற்காலத் தூரிகை . . . . . . . . . . . 22

**குட்டிக் கதை:** முகங்கள் . . . . . . . . . 25

**புரட்சி:**

கியூபாவில் விடப்பட்ட தவறுகள் . . . . 26

முடிச்சுமாறிகளின் திருகுதாளங்கள். . 29

**2000:**

கடன்பட்டார் நெஞ்சம் ஆற . . . . . . . . 32

**குட்டிக் கதை:** நம்பிக்கை . . . . . . . . . 34

**கவிதை:** தியானம் . . . . . . . . . . . . . 35

நேரத்தைக் கைப்பற்ற. . . . . . . . . . . 36

**குங்ஃபூ:**

விடைபெறும் புரூஸ்லீ. . . . . . . . . . . 38

இரு அஞ்சலிகள் . . . . . . . . . . . . . . 41

கிரக சஞ்சாரம் . . . . . . . . . . . . . . 42

**நோயற்ற:**

நீரிழிவிற்கு பரிசோதனைகள் . . . . . . 43

**சினிமா:**

சொந்த முகம் இழந்து. . . . . . . . . . 44

நடிப்பால் வென்ற தமிழன். . . . . . . . 46

நூல் அறிமுகம் . . . . . . . . . . . . . . 48



**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை**
**அமுது வரவேற்கிறது.**
**ஆசிரியர்,**
**'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**
**தொலைபேசி: 454283, 421181** Ext 347
**ஃபக்ஸ்: 320677**
E-Mail: webmgr@sri.lanka.net





8 மௌனமாக்கப்பட்ட புயல் : ராஜினி



18 சூதாட்ட கோழிச் சண்டை



22 பொற்காலத் தூரிகை



26 புரட்சியால் விட்ட தவறுகள்



41 உன்னால் என்ன முடியும்?: நீலன்




46 அஜீத் ஏன் கவிஞரானார்?

**அட்டையில்...**

1483ல் டாவின்சி வரைந்த ஓவியம் பெண்ணின் சட்டையைக் கிழித்து நிற்கும் வெள்ளை உரோமம் கொண்ட கீரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாதியில் நின்றுவிடுமோ என்றே பயம்...

அமுதிலும் அமுது. எந்த ஏட்டைத் திருப்பி னாலும் தித்திக்கும் தேனமுது. இதில் பெண் களுக்கென ஆக்கங்களையும் சேர்த்தால் மேலும் சுவை ஏற்படாதா? மலர்ந்து வரும் தேனமுது பல்லாண்டு காலம் மலரவேண்டும்.

**வேலாயுதன் கௌசல்யா, குண்டசாலை.**

இலங்கையில் வரும் மாதாந்த சஞ்சிகைகளில் "அமுது" எம்மை மிகவும் கவர்ந்து விட்டது.... ஆரம்பம் முதல் அமுதை வாசித்தும் பாதுகாத் தும் வருகிறோம். ஆகஸ்ட் இதழில் வெளிவந்த ஆசிரியரின் "அதிகாரம்" என்ற கருத்து பலதை யும் சிந்திக்கவும் வைத்தது.... அதே போன்று சகல அம்சங்களும்... தரம் மேலும் உளது. வருகையும் முன்னேற்றம். மாதத்தின் ஆரம்பத் திலேயே வந்து விடுகிறாய்.... உன் பணி மக்க ளுக்குத் தேவை. தொடர... வாழ்த்துக்கள்....!

தமிழுக்கு நிகர் "அமுது"

**ஏ. ஏ. எப். சியானா, கற்பிட்டி.**

வாசகர் உள்ளத்திற்கு
அனைத்தும் இனிக்கிறதே
எண்ணங்களை ஈர்த்து
இதயத்துள் துடிக்க வைத்து
இமை கொட்டாமல் பார்க்க வைத்த
அமுதே அழகோ அழகு
நீங்கள் தூவிய அழைப்பு
நாங்கள் நயந்திட நீண்டு வருமா பக்கங்கள்

**ஏ. எம். ஸியாஉத்தீன், அக்கரைப்பற்று.**

தேனிலும் இனிய அமுதுவுக்கு,
வாழ்த்த என்னிடம் வார்த்தைகளில்லை. கார ணம் நான் கவிஞனில்லை. அமுதினுடைய ஆர ம்ப இதழ்கள் கைக்கு எட்டவில்லை. ஆனால் கிடைத்ததைத் தவறாமல் படிக்கும் இலட்சக் கணக்கான அபிமானிகளுள் நானும் ஒருத்தி. ஆகஸ்டில் வெளியான துளி 11 அபூர்வம். நல்லதோர் வீணை செய்தே பிரமாதம். தவளை இரகசியம் அறிந்துகொண்டேன். து(ர்)ப்பாக்கி யின் விந்தை அபாரம். மொத்தத்தில் அனைத்து விடயங்களும் சூப்பர். போட்டிகள் நடத்தி பொது அறிவினை வளர்க்க ஆவன செய்வாய் என எதிர்பார்த்து அமுதுக்காக காத்திருக்கும்....

**பிரியமுள்ள வாசகி க. டயானா.**

அமுது பொதுமக்களிடம் பிரபலமாகி வருகி றது. அதன் துணிச்சலான அதேசமயம் இன்று பலரும் மனத்துக்குள் அமுக்கிக் கொண்டிருக் கிற விஷயங்களையும் தருகிறது. அமுதின் விலையைக் குறைத்து இன்னும் பலர் வாசிக் கும் விதமாகச் செய்யவேண்டும். செய்வீர்களா?

**இராஜவரோதயன், கந்தர்மடம்.**

அமுது துளி 11 கண்டேன். சமாதானத்துக்கான யுத் தம் என்று தொடங்கப்பட்ட ரிவிரச 1, 2 இராணுவ நட வடிக்கையின் பிற்பாடு பாது காப்புப் படையின் வேண்டு கோளை நம்பிப் போன யாழ். மக்களின் நிலையான எண் ணங்களைத் தவிடுபொடியாக் கியது, செம்மணிப் புதைகுழிச் சம்பவங்கள் போன்றவற்றை குருஷேத்திரன் கட்டுரை விளக்குகிறது. இனி மேல் தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படி அமையப்போகிறது? அன்பும் அழகும் சேர்ந்து மலர்ந்த மானுட மக்களின் படம் நன்றாக உள்ளது.

**கந்த. ஞானமுத்து, கைதடிமேற்கு.**

"அமுது" தரும் அம்சங்கள் அர்த்தமுள்ளவை, ஆக்கபூர்வமானவை. அமுதின் தமிழ் இனிக்கிறது. குறிப்பாக நல்லதோர் வீணையின் நாதத் தமிழ் (நவீன செந்தமிழ்ப் பிரயோகம்) நாம் தெரிய வேண்டியது. "அமுது" என்றும் இனிக்க ஆண்டவன் ஆசிகள்.

**ரஸீனா புஹார், ஹுனுகல.**

புலம்பெயர்ந்து சென்ற எழுத்தாளர்கள், இலக் கியவாதிகளிடமிருந்தும் பேட்டிகள், ஆக்கங்க ளைப் பெற்று பிரசுரித்தால் சிறப்பாக இருக்கும்.

அமுது வாசல் கதவுதிறந்து

குரங்குப் படங்களைப் போட்டு நடுப்பக்கத்தை நாசமாக்காமல் ஈழத்து இலக்கியவாதிகளின் பேட்டி என்று ஏதும் தரலாமல்லவா? அமுது எப்போதும் அமுதாகவே இருக்கணும். ஐயா எனக்கொரு பயம் என்னவென்றால் இடையி னில் பாதியில் அமுது நின்றுவிடுமோ என்பது தான். ஐயா அது கூடாது. அமுது தொடர்ந்து வர முயற்சி செய்யுங்கள்.

**சித்தன், வாழைச்சேனை.**

இம்முறை அட்டைப்படத்தில் கவர்ச்சி இல்லை. மாறாக கலையுணர்வுமிக்க பொருள் ஆழம் பொதிந்துள்ளதை காணக்கூடியதாக இருந் தது. மிக்க மகிழ்ச்சி. ஜம்புக்காய்கள் சிறு கதையும், நெஞ்சை உலுக்கும் செம்மணி பற் றிய உண்மைகளையும் அரசியலில் உள்ளவர் களின் போக்கிரித்தனத்தையும் தெளிவாக எடு த்துக் கூறிய அமுதிற்கு எனது பாராட்டுக்கள். இந் நவீன யுகத்தில் அமுது விடும் பிழை.... கணனி அறிவை மக்களுக்குத் தருவதில் அக் கறை இன்றி இருப்பது. ஆவன செய்வாய் என எண்ணுகின்றேன்.

**த. க. பரீட்சித், பருத்தித்துறை.**

அமுது துளி 11 வரை பார்த்தேன். உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை. நமது நாட்டிலிருந்து ஒரு தரமான சஞ்சிகை வெளிவருவதையிட்டு நாம் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின் றோம். இதன் பணி இடர்களின்றி தொடர வேண்டுமென வேண்டி....

**எம். சி. சரீப் ஹுஸைன், ஓட்டமாவடி.**

'அமுது - துளி 11' அள்ளி வந்த அனைத்து அம்சங்களுமே பிரமாதம். 'எம் செல்வங்கள் புதைக்கப்பட்ட செம்மணிச் சுடலை' செம்மணி புதைகுழி பற்றிய விவகாரங்கள் பற்றி விரி வாகவும் தெரியாத பல விடயங்களையும் அறிய முடிந்தது. ஏ. சீ. எஸ். ஹமீட் அவர்களின் விரி வான பேட்டி அவரின் அரசியல் வாழ்வு முதல் நாட்டு நடப்பு பற்றி அலசியது, பிரமாதம். 'பிக்பொக்கட்டும் கைப்பழக்கம்' கட்டுரை மறை வான பல விஷயங்களைச் சொல்லியது. இது போன்ற சமூகத்தின் விளிம்புத் தகவல்களைத் தருவதைத் தொடருங்கள்.

**ஏ. சீ. எம். முஸம்மீல், குளியாப்பிட்டி.**

வித்தியாசமான வடிவமைப்போடு பல புதிய சிந்தனை செறிவுமிக்க நல் ஆக்கங்கள் தந்து - கொடுக்கும் பணத்திற்கு வஞ்சகம் செய்யாது மனத்திருப்தி அளிக்கும் சஞ்சிகை நீயே....!

**அம்ரிதா, உக்குவளை.**

அமுதின் சுவையில் திளைப்பவன் நான். வீறு நடையும், துணிவும், மிடுக்கும் அதிசயிக்க வைக்கிறது. என் பிரிய அன்னை தெரேசா - டயானா ஆகியோரின் படத்தை நடுப்பக்கத் தில் இணைத்ததற்கு என் நன்றிகள்.

**றொட்ரிக்கோ, யாழ். பல்கலைக்கழகம்.**

அமுது துளி 11.... அனைத்து அம்சங்களையும் ரசித்துச் சுவைத்தேன். கண்டி இராமன் பற்றிய குறிஞ்சித் தேனீ பயனுள்ள சுவையான இனி ப்புப் பாணியாக இருந்தது. அவருடன் நானும் கூடப் பழகியிருக்கிறேன். அவர் பேச்சு மூச்சு எல்லாமே இலக்கியம் சம்பந்தமாகத்தான் இரு க்கும். இவரைப் போலவே இன்னமும் பலர் இருட்டிலே கிடக்கின்றார்கள். அவர்களையெ ல்லாம் வெளிச்சத்துக்குக் கொண்டுவர வேண் டியது அமுதுவின் தலையாய கடமையாகும்.

**பாலா சங்குப்பிள்ளை, அட்டன்.**

"ஈரானிய நுண்ணோவியங்கள்" கட்டுரை அட் டைப் படத்தை பல மணி நேரம் நுணுகிப் பார்க்கத் தூண்டியதுடன் ஓவியத்தின் சிறப் பையும் உணர்த்தியது. அன்பு மலரும், அழகு மலரும் சேர்ந்து மலர்ந்த நடுப்பக்கம் பாது காக்கப்பட வேண்டிய பொக்கிஷம். இரு மலர் களும் ஒரே வாரத்தில் கருகிய நினைவு கண் களை ஈரமாக்கியது. நிறைவான அமுதில் ஒரு சிறு குறை! படுகொலை செய்யப்பட்ட அமரர் நீலன் திருச்செல்வத்தைப் பற்றிய சிறு குறிப் பையேனும் காணவில்லையே.

**ஏ. எம். ஹஸன், சீனன் கோட்டை.**

உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை வரவேற்கிறோம்.
ஆசிரியர், 'அமுது'
இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின்
முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை

பிரதமஆசிரியர்:
எஸ். மனோரஞ்சன்
இணையாசிரியர்:
து. பாஸ்கரன்
ஆசிரிய பீட ஆலோசகர்:
டி. பீ. எஸ். ஜெயராஜ்
கட்டுரையாசிரியர்:
சி. சிவகுமார்
ஏனைய ஆசிரிய பீடத்தினர்:
எம். எச். எம். ஷம்ஸ்
எம். எஸ். எம். ஹிஷாம்
பிரதம வடிவமைப்பாளர்:
சி. முரளிதரன்
ஓவியர், கார்டூனிஸ்ட்:
இ. ப்ரகீத்
பக்க வடிவமைப்பு (கணனி):
ஜெரால்ட் எஸ். நடேசன்
எழுத்தமைப்பு (கணனி):
எஸ். எம். பிரேம்குமார்
விளம்பர முகாமையாளர்:
வருண மல்லவஆராச்சி
தயாரிப்பு முகாமையாளர்:
அபய அமரதாஸ
அச்சமைப்பு முகாமையாளர்:
நவரட்ணம் சற்குணநாதன்
விற்பனை முகாமையாளர்:
அனுர அபேரத்ன
அச்சிட்டு வெளியிடுவோர்:
அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ்
ஒஃப் சிலோன் லிமிடெட்
இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.

**Chief Editor:**
*S. Manoranjan*
**Associate Editor:**
*T. Baskaran*
**Editorial Consultant:**
*D. B. S. Jeyaraj*
**Features Editor:**
*S. Sivakumar*
**Other Editorial Staff:**
*M.H.M. Shums*
*M.S.M. Hisam*
**Chief Designer:**
*C. Muralitharan*
**Computer Graphic Artist/Cartoonist:**
*P.R.B.Ekkneligoda*
**Computer Page make-up:**
*Gerald S. Nadesan*
**Computer Typeset:**
*S.M. Premkumar*

# நல்லதோர் வீணை செய்தே....



அடக்கம்.

அதை ஒரு நற்பண்பாகவே நாம் கொள்கிறோம். சமுதாயத்தின் ஒழுங்கைப் பேணவும் அதன் நியதிகளைமீறாமலும் நாம் நடந்துகொள்ளும் பக்குவமான ஒழுக்க முறைமையைத்தான் நாம் பொதுவாக அடக்கம் என வகைப்படுத்திக் கொள்கிறோம். ஆனால் இது எப்போதுமே சரியான, ஆரோக்கியமான பண்பாகவா செயற்படுகிறது என்பது கேள்விக்குரியதே. இவ் ஒழுக்கம் என்ற எண்ணக்கருவானது செயல்வடிவில் பல்வேறு தளங்களுக்குச் செல்கையில் வெவ்வேறு வடிவங்களைப் பெற்று, வெவ்வேறு குணாம்சங்களாக உறைகிறது. அது தயக்கம், பயம், எதிர்ப்பின்மை, சரணாகதி, கள்ளம், பொய்மை, நேர்மையின்மை, கயமை, வஞ்சகம்... என்ற பரிமாணங்களுக்கும் படிப்படியாக மாறிச்செல்லக் கூடியது. ஒரு கட்டத்துக்கப்பால் அது தனிமனிதக் குணாம்சமாக அன்றி, சமூகக் குணாம்சமாகவே ஆகியும் போகலாம். அத்தகைய ஒரு நிலையின் முதற் கட்டமாகத்தான் 'அடங்கிப் போதல்' என்பது தலைதூக்குகிறது. எந்தவித அநியாயங்களுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் வன்முறைகளுக்கும் சலனங்காட்டாத, எதிர்ப்பிழந்த, மௌனித்த ஊமைச் சமூகமாக, உறைநிலைக்கு சமூகம் தள்ளப்படுவதுதான் இந்நிலை. இதன்பின் படிப்படியாக அது தன்மீது சுமத்தப்பட்ட விதிகளையும் சுலோகங்களையும் யந்திரத் தனமான வாய்ப்பாடாக உச்சரித்து ஒழுக ஆரம்பிக்கிறது.

சுயத்தை ஒட்டுமொத்தமாக இழந்து அடங்கிப்போகும் அதன் அனுதினச் செயற்பாட்டில் இவ் ஒழுகுமுறையே நாளடைவில் பழகிப்போய் நியதியென்றாகிவிடுகிறது. இந்நிலையில் சமூக நியமங்கள் பின்நோக்கித் தள்ளப்பட்டு, தவறு, குற்றம், தீமை, அநியாயம், கொடுமை, அநீதி என்பனவெல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட்டனவாகி, சரியென்றாகிவிடுவது மட்டுமல்ல அவற்றுக்குக் கட்டுப்படாதவையெல்லாம் பிழையென்றே கருதுமளவுக்குப் போய்விடுகின்றன. இத் தன்மையை சமூகம் எய்திவிட்டபின் ஆதிக்க சக்திகளுக்கு ஏற்ப நாமாகவே 'ஒத்தோடும்' போக்கிற்கு எம்மையறியாமலே நாம் இழுபட்டுச் செல்கிறோம். இந்நிலைமையில் ஆதிக்கத்திற்கு அடிபணியாது "மறுத்தோடி" வாழ்வது எவ்வாறு என்பதை சிந்திப்பதே ஒரு பெரும் புரட்சிகர விடயமாகிவிடுகிறது. ஆனால் இன்று எம் சமூகத்தைப் பார்க்கையில் மறுத்தோடி வாழ்வதென்பது ஒருபுறமிருக்க, அதுபற்றிச் சிந்திப்பதே ஒரு பாரிய சிந்தனைக் குற்றமாக ஆகியிருப்பதை எம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறதா?

ஆ-ர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமுகவுடன் கணக்கை ஆரம்பியுங்கள்

**14%**

**சேமிப்புச் சான்றிதழ்களுக்கு**

**தினமும்**
**வங்கி அலுவலக நேரம்**

காலை 9.00 மணி முதல்
இரவு 8.00மணி வரை
சனிக்கிழமைகளில்
காலை 9.00மணி முதல்
1.00 மணி வரை

**ATM &**
**டெலிபேங்கிங்**
வசதிகளும் உண்டு

**11%**

**சேமிப்பு கணக்குகளுக்கு**

தொடர்பு கொள்ளுங்கள்: 565418, 075-331101, 565998 அல்லது 565624

பிரமுக
சேமிப்பு மற்றும் அபிவிருத்தி
வங்கி
லிமிடெட்
PRAMUKA BANK
வளமிக்க எதிர்காலத்திற்கு வழிகாட்டி

NETWORK

316, காலி வீதி, கொழும்பு - 3 பிரதான நகரக் கிளை தொலைபேசி : 565220-3
பெக்ஸ் : 565224 தலைமை அலுவலகம் தொலைபேசி : 565411-16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான நிலைமை

தமிழ் மொழி, ஒரு புலவனை உலகம் முழுவதற்குமாகத் தந்து வான்புகழ் கொண்டதாய் பாரதி பெருமைப்படுவது வள்ளுவர் குறித்துத்தான். அந்த வள்ளுவர் மனிதர்களுக்குத் தேவையான சில 'ஆமை'களைச் சொல்கிறார்.

**திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று.**

(பிறர் செய்திடும் இழிவான காரியங்களுக்காக வருந்தி, பதிலுக்கு அதே காரியங்களைச் செய்து பழிவாங்காமலிருப்பதுதான் சிறந்த பண்பாகும்.)

**இறலீனும் எண்ணாது வெ∴கின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.**

(விளைவுகளைப் பற்றி நினைக்காமல் பிறர் பொருளைக் கவர்ந்துகொள்ள விரும்பினால் அழிவும், அத்தகைய விருப்பம் கொள்ளாதிருந்தால் வாழ்க்கையில் வெற்றியும் கிட்டும்.)

**நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.**

(பண்பாளர்கள், இனிமையல்லாத சொற்களைக் கூடச் சொல்லிவிடலாம். ஆனால் பயனில்லாத சொற்களைச் சொல்லாமல் இருப்பதே நல்லது.)

**அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று.**

(ஆயிரம் வேள்விகள் நடத்துவதை விட உண்ண ஓர் உயிரைக் கொல்லாதிருப்பது நல்லது.)

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.**

செய்யக் கூடாதவற்றைச் செய்யாதிருப்பதால் விளையும் நன்மையை விட பொய் கூறாத பண்பைக் கடைப்பிடிப்பது நன்மை தருவதாகும்.)

**இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.**

(தீயினால் சுட்டெரிப்பது போன்ற துன்பங்களை ஒருவன் தொடர்ந்து செய்தாலும், அதற்காக வருந்தி அவன் உறவு கொள்ள வரும்போது சினங் கொள்ளாமல் இருப்பதே நல்லது.)

**ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.**

(அறத்தின் வரிசையில் கொல்லாமையும் அதற்கடுத்துப் பொய்யாமையும் இடம்பெறுகின்றன.)

அவை வள்ளுவரின் குறள்களில் இடம்பெறும் சில 'ஆமை'கள். இனி, உலவும் ஆமை இனம் ஒன்று பற்றி சில விபரங்களைப் பார்ப்போமா?

18 கோடி ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வாழ்ந்து வருகின்ற ஒரு உயிரினம். அதுவும் கடலுக்குள் வாழும் ஓர் ஊர்வன விலங்கு. அதுதான் கடலாமை.

பல வருடங்களுக்கு முன்பு நூற்றுக்கும் அதிகமான கடலாமையினங்கள் இருந்தாலும் இன்று உலகில் இருப்பது எட்டே எட்டு வகையான ஆமையினங்கள் மட்டுமே. அதில் ஐந்து வகை நமது நாட்டின் கரையோரங்களில் தயவு கோரிப் பதுங்கி வாழ்கின்றன.

ஆமைகள் கடற்கரையோரம் காற்று வாங்கியபடி உல்லாசமாக உலா வரும்... அதை ஆமைவேட்டைக்காரர்கள் 'லபக்'கெனப் பிடித்து வந்துவிடுகிறார்கள் என்று நினைக்கிறீர்களா?



அதுதான் இல்லை. ஆண் ஆமைகளோ தரைக்குத் தலைகாட்டுவதே இல்லை. பெண் ஆமைகள் மட்டும் வருடத்துக்கு ஒரு முறை தரைக்கு வந்து முட்டையிட்டுவிட்டுச் செல்கின்றன. அதன்பிறகு குஞ்சு பொரித்துவிட்டதா என்றுகூட எட்டியும் பார்க்காது.

ஒரு தடவையில் 300க்கு மேற்பட்ட முட்டைகளை பெண் ஆமை கடலோர மண்ணைத் தோண்டி இட்டுவிடும். குஞ்சுகள் யாருடைய தயவுமின்றி தண்ணீரை நோக்கி தத்தித் தாவியபடியே விரைந்தோடுகின்றன. அவற்றில் மூன்றில் ஒரு பங்கே கடலுக்குப் போய்ச் சேருகின்றன. மிகுதி காகங்களினாலும் கடற்கரையோரம் திரியும் நாய் போன்றபிராணிகளாலும் உண்ணப்படுகின்றன.

எமது நாட்டில் காணப்படும் கடலாமைகளில் 'பெருந்தலை ஆமை' விசேடமானதாகும். இது 3.5 மீற்றர் நீளமும் 180 கிலோ நிறையும் உடையது. இதுதவிர சேற்றாமை, தோலாமை என்பன கால நிலை மாற்றத்திற்கேற்ப உடல் உஷ்ணத்தை மாற்றக் கூடியன. உலகில் காணப்படும் ஆமைகளில் மிகப் பெரிய இனமும் இவைதான். 3 மீற்றர் உயரமும் 600 - 800 கி. கிராம் வரை நிறையையும் கொண்டிருக்கும்.

ஆனால் நமது உணவில் ருசியான கறியாகும் ஆமைகள் சிறிய ஆமைகள்தான். இவை 65 - 90 செ. மீ. நீளமும் 40 - 50 கி. கிராம் நிறையும் கொண்டவை. இந்தச் சின்ன ஆமைகளின் விசேடம் என்னவென்றால் விஷத்தையும் உண்ணக் கூடியன, விஷத்தால் சாகாதன.




இந்த ஆமைகள் யாருக்கும் தெரியாமல் கடற் சூழலைப் பாதுகாக்கின்றன. கடற் சூழலியற் சமநிலையைப் பேணுகின்றன. எப்படித் தெரியுமா? கடல், மண்ணை அரித்துக்கொண்டு தரைக்குள் வந்துவிடாமல் தடுப்பன **கோரல்கள்**. அந்தக் கோரல்களை **'இக்ரியா'** என்ற உயிரினம் நாசமாக்குகிறது. இந்த இக்ரியாவை ஆமைகள் உண்பதால் கடலரிப்பு பெரும்பாலும் தடுக்கப்படுகிறது.

பாரிய அனர்த்தத்திலிருந்து மனிதனைக் காப்பாற்றும் இந்த கடலுயிரியை நாம் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கிறோமா?

சிறிய பொலித்தீன் உறைகளே இவற்றின் உயிருக்கு உலை வைக்கிறதென்றால் ஆச்சரியமாகத்தான் இருக்கும். இந்த உறைகள் ஆமைகளுக்கு 'ஜெலி∴பிஷ்' போன்று தெரியும். அவற்றை உண்கையில் தொண்டையில் சிக்கி மரணத்தைத் தழுவுகின்றன.

வருடத்துக்கு ஒரு முறை கரைக்கு வந்து இட்டுவிட்டுப் போகும் முட்டைகளை எடுத்து மனிதன் காசுக்கு விற்றுவிடுகிறான். அதுமட்டுமல்ல இறைச்சிக்காக மட்டும் எமது நாட்டில் வருடத்துக்கு 30,000 ஆமைகள் கொல்லப்படுகின்றன. (என்ன இங்கே போரால் அழியும் இளைஞர்கள் தொகை போல் உள்ளதெனத் திகைக்கிறீர்களா?) தவிர, ஆமை ஓடுகளைக் கொண்டு அலங்கார பொருட்கள் செய்து விற்று தமது பணப்பையை நிரப்பிக் கொள்கின்றனர்.

மிக நீண்ட தூரம் கடலிலே நீந்தக்கூடிய இவை கண்டம் விட்டு கண்டமும் செல்கின்றனவாம். சில நாடுகளில் இவ்வகை ஆமைகளில் உளவுக் கருவிகளைப் பொருத்தி வேறு நாடுகளுக்கு வேவு பார்க்க அனுப்பும் முயற்சிகளும் நடைபெறுகிறதாம்!

ஆமைகளைப் பிடிப்பது, கொல்வது, முட்டைகளை நாசமாக்குவது, அவற்றின் உடற் பாகங்களை விற்பது, காட்சிக்கு வைப்பது மட்டுமன்றி அவற்றை விலைக்கு வாங்குவதுகூட நம் நாட்டில் தண்டனைக்குரிய குற்றங்களாகும். பிடிபட்டால் 10,000 - 30,000 ரூபா வரையில் தண்டம், 2 - 5 வருடங்கள் வரை சிறைவாசம்.


75 - 100 வருடங்கள் வரையில் வாழும் இந்த ஆமைகளைப் பாதுகாக்கவென்று கடுமையான சட்டங்கள் கொண்டுவரப்பட்டாலும் மனிதன் சட்டத்துக்குப் புறம்பான உலகமொன்றை மறுபுறத்தில் இயக்கிக் கொண்டு இருக்கும் வரையில் இவற்றின் அழிவும் தொடருமா?

**- எச். எஸ். டீன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுகு சொறியவா பேனாவின் முனை..




நக்கீரன்

பத்திரிகா தர்மம் என்று ஏதேனும் உண்டா? அப்படி உண்டானால் அதை எம் நாட்டுப் பத்திரிகைகள் சரிவரச் செய்கின்றனவா?

இந்தக் கேள்வி ஒரு ஆராய்ச்சிக்கான தலைப்பாகவோ அல்லது ஒரு விவாதப் பொருளாகவோ அன்றி உண்மையான ஒரு நெருக்கடியின் வினாவாக, அதி முக்கியம் வாய்ந்த பிரச்சினையாகவே உருவெடுத்துள்ள நேரம் இது.

இனப்பிரச்சினை தலையாய பிரச்சினையாகி நிற்கின்ற இந் நாட்டில்... அதில் இப் பத்திரிகைகளும் ஒரு பிரதான பங்கை ஏற்றிருக்கின்ற காரணத்தாலே இக் கேள்வி அத்துணை முக்கியம் வாய்ந்தாகியுள்ளது.

அதிலும் தமிழ் பத்திரிகைகளின் செயற்பாடு பற்றி உன்னிப்பான கவனம் செலுத்தவேண்டும் என்பது மிக அவசியமாகிவிட்டது.

இதனை எடைபோட்டுப் பார்க்க, நீலனின் கொலையை இப் பத்திரிகைகள் கையாண்ட விதமே ஒரு நல்ல (உண்மையில், கெட்ட) உதாரணமாகும்.

தமிழ் அரசியல் செயற்பாட்டில் ஆயுதக் கலாசாரம் ஊடுருவி நிற்பது யாரும் புரிந்து கொள்ளாத ஒன்றல்ல. இது எம் தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் புரியாததல்ல.

ஆனால் அவர்களின் எழுத்துக்களில் அப்படி ஒன்றை உணராதது போன்ற ஒரு நடிப்புத்தனமே தெரிகிறது. நீலனின் கொலை குறித்த செய்திகளிலும், -குறிப்பாக கட்டுரைகளிலும் இந்தப் போலிப் பூச்சு அப்பட்டமாகவே தெரியக் கூடியதாக இருந்தது.

தேசியவாத உணர்வில் செயற்படுவதான ஒரு பிரமையில் இக் கொலைக்கும் வழமையான பூசி மெழுகிய விளக்கங்களையே இவை வரிந்துகட்டத் தலைப்பட்டுள்ளன.

நீலனின் அரசியல் செயற்பாட்டுக்கு நேரடியாக 'துரோக' முத்திரை குத்தவும் முடியவில்லை, அதேவேளை கொலையுண்டபின் (கவனிக்கவும் கொலையுண்டதால் மட்டும்தான்...) துரோகி என்று தரப்பட்ட தலைப்பின்கீழ் கட்டுரையாக்கவும் வேண்டும் என்ற விழுங்கவும் முடியாமல் கக்கவும் முடியாமல் மென்றுகொண்டிருக்கும் நிலையையே காணக்கூடியதாக இருந்தது.

ஒரு தமிழ்ப் பத்திரிகை நீலனைப் பற்றிய பல தகவல்களைக் கட்டுரையாக வழங்கிவிட்டு இறுதியில் எழுதியிருந்தது: ".....அரசியலுக்கு அப்பால் பார்த்தால் நீலன் திருச்செல்வத்தின் இழப்பு தமிழ் சமூகத்துக்கு ஒரு பாரிய இழப்பாகும்" என்பதாக.

இந்தச் சளாப்பல்தனமான முடிவுரை எதைப் பூடகமாகக் காட்டுகிறது? அரசியல்படி பார்த்தால் நீலன் கொலை செய்யப்படலாம் என்பதான அர்த்தம் தொனிக்கவில்லையா?

ஏன் நீங்கள் அரசிலுக்கு அப்பால் பார்க்கவேண்டும், அவர் அரசியல்வாதி தானே நீங்கள் அரசியல்படியே பார்த்துச் சொல்லுங்கள் என்று யாரும் அப் பத்திரிகையைப் பலவந்தப் படுத்தப் போவதில்லையென்பதால் அந்தச் சுதந்திரத்தை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள்.

ஆக, அவர்களுக்கு நீலனின் நிபுணத்துவம் திறமை என்பன மட்டுமே பெறுமதியானவையாகத் தெரிந்தனவேயன்றி அரசியல் அல்ல... ஏன்?

ஏனெனில் அரசியலுக்கு இப் பத்திரிகைகள் ஏதோ ஒரு குத்தகைக்காரருக்கு மட்டும்தான் கும்பிடு போடச் சரண் புகுந்துள்ளன.

நீலன் உயிரோடு இருக்கும் காலத்தில் ஒரு சில வார ஏடுகளைத் தவிர மற்றையஎந்தத் தினப்பத்திரிகைகளும் அவரது அரசியலைச் சற்றளவேனும் விமர்சித்திருக்கவில்லை என்பது இதன் மறுதலை.

இன்னோர் பத்திரிகை நீலனின் மிதவாத அரசியலைச் சாடும் வகையில் ஒரு கார்ட்டூன் போட்டது. அதில் நேர்மையான அரசியலில் தராசின் அச்சாணி போல் இருக்கும் அதே மிதவாதம் நேர்மையற்ற அரசியலில் பாக்கு வெட்டியின் அச்சாணி போல் ஒடுக்குமுறைக்குத் துணைபோகவும் செய்யும் என்ற பொருள்பட இருந்தது.

இதை நீலனின் அரசியல் எவ்வகையானதெனக் காட்ட ஒரு 'க்ளூ' வாகப் பயன்படுத்தியது. (அதாவது நீலன் கொல்லப்படலாம் என்பதை நியாயப்படுத்தும் வகையிலான 'க்ளூ')

இன்னோர் பத்திரிகை மிக உச்சநிலைக்குச் சென்று யாரும் இப் படுகொலையால் விசனமடையக் கூடாதென்ற 'காப்பாளர்' பொறுப்பைத் தானே தனக்குச் சூடிக்கொண்டு, நீலன் துரோகி தான் என்பதைத் தமிழ் மக்களுக்குப் புரியவைக்க (தாம் ஓதுவதைத் தவிர வேறு எதையும் புரிந்துவிடாதிருக்க) பகீரதப் பிரயத்தனம் எடுத்துக் கொண்டது. அக் கொலையைப் புரிந்தோர்கூட நியாயப்படுத்தாத அளவுக்கு அது விழுந்தடித்து எழுதித் தள்ளியது.

வேடிக்கையென்னவென்றால் பாராளுமன்ற உறுப்பினரான நீலனின் மறைவுக்கு சம்பிரதாயபூர்வமாக அமைச்சர்களும் பா.உ. க்களும் விடுக்கும் அனுதாபச் செய்திகளைக்கூட அரசாங்கத்துக்கும் நீலனுக்கும் விரும்பத்தகாத உறவு நிலவியதாகச் சித்தரிக்க ஆதாரங்களாகக் கையாண்டது.

சாதாரண பொதுமக்களுக்கே இத்தகைய நிகழ்வின்போது அரசாங்கம், எதிர்க்கட்சி, வெளிநாட்டு அரசாங்கங்கள், அவற்றின் தூதரகங்கள் போன்றவை அனுதாபச் செய்திகள் வெளியிடுமென்பது சாதாரணமாகத் தெரிந்த விடயமாக இருக்க இப் பத்திரிகை, ஒரு இரகசியத்தைக் கண்டுபிடித்துவிட்டதுபோல் இவற்றைத் தொடர்புபடுத்தி எழுதியது.

ஆனால் அடிப்படையான ஒரு விடயத்தை இப் பத்திரிகைகள் புரிந்துகொள்ளவில்லை. புரியாமலல்ல, சரியாகச் சொல்வதானால் தட்டிக்கழித்து விடுகின்றன. அதாவது தமிழ் மக்களின் நலன் பற்றிச் சிந்திக்கும் ஒரு தமிழ் அரசியல்வாதிக்கோ அல்லது அரசியல் கட்சிக்கோ தனக்கென ஒரு அரசியல் கொள்கையை, வழிமுறையை வைத்துக்கொள்ள இருக்கும் தார்மீக உரிமையை இவை அங்கீகரிக்கத் தயாராக இல்லை.

தொண்டமான் தமது மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திக்கொண்டு அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கலாம், அஷ்ர.்.ப் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திக்கொண்டு அமைச்சராக இருக்கலாம், ஆனால் ஒரு வடகிழக்குத் தமிழ் அரசியல்வாதி அரசாங்கத்துடன் போராட்டமற்ற வழிமுறையொன்றைக் கைக்கொண்டு தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமா என்று முயற்சித்தும் பார்க்கக்கூடாதென்ற ஒரு சட்டத்தை யார் இப் பத்திரிகைகளுக்கு ஒழுக்கக்கோவையாக வழங்கி வைத்தது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அப்படி ஏதேனும் ஒரு வழியில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண எத்தனிக்கும் மற்றையவர்கள் யாவரும் துரோகிகள் என்ற தீர்மானத்தை பத்திரிகா தர்மத்தைப் பேணவேண்டிய இப் பத்திரிகைகளும் எப்படி உள்ளூர வரித்துக் கொண்டன?

அத்தோடு இப் பத்திரிகைகளில் இக் கொலையையடுத்து எழுதப்பட்டு வரும் மற்றொரு கருத்தும் எடுத்துநோக்கப்பட வேண்டியது. அதாவது இப் படுகொலை இனப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்பதையே வலியுறுத்துவதாக அவை எழுதுகின்றன.

அப்படியானால் நீலன் என்ன தீர்வுக்குத் தடையாக நின்றவரா, கொலை செய்யப்படுவதற்கு?

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இப் படுகொலைகள் வலியுறுத்துகின்றனவென்றால், இவ்வாறு வலியுறுத்துவதற்காக மேலும் மேலும் இத்தகைய படுகொலைகளை நடத்துவது அவசியமென்றல்லவா ஆகிறது?

வெறு வாய் மெல்லுவதைப் போன்ற இத்தகைய கூற்றுகளுக்கு அர்த்தம் ஏதும் உள்ளதா, நடந்த கொலையை தவிர்க்க முடியாதது என ஏற்கச் சொல்வதைத்தவிர....?

உண்மையில் இப் படுகொலைகள் எதை உணர்த்துகின்றன? வெறும் இனப் பிரச்சினை என்ற பொது நெருக்கடியை மட்டுமா? அதற்கு மேலான ஒரு செய்தியை இதில் பத்திரிகைகளால் வாசிக்க முடியவில்லையா?

ஏனைய தமிழ் கட்சிகளைக் கலைத்துவிட்டு உறுப்பினர்களை விலகிச் செல்லும்படி அல்லது தம்மோடு இணையும்படி விடுத்த எச்சரிக்கையும், வெளிநாடு சென்ற கூட்டணிப் பா.உ. ஒருவரிடம் கூட்டணி தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடாதென்று எச்சரிக்கை விடப்பட்டதும் அதன்பின் நிகழ்ந்த இக் கொலையும் **"தமிழ் அரசியலிலிருந்து விலகிப் போ!"** என்ற தெளிவான செய்தியைத் தெரிவிப்பதை இவர்கள் ஏன் கவனிக்கத் தவறினர்? இதை எதற்கு இவர்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வலியுறுத்தும் நடவடிக்கையாக திரித்துச் சொல்கின்றனர்?

இப்படி எழுதினால்தான் தமிழ் மக்கள் வாசிப்பார்கள் என்றா? அல்லது அப்போதுதான் பத்திரிகை விற்பனையாகுமென்றா?

அப்படியென்றால் பத்திரிகைகளுக்குப் சமூக பொறுப்புணர்வு ஏதும் இல்லையா? பத்திரிகை என்பது வெறும் வியாபாரப் பண்டம் மட்டும்தானா? •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நெடுமரங்கட்கு ஒரு அஞ்சலி**

புற்களை விரும்பிக் கால்கள் பதிப்பீர்
குட்டைச் செடிகளை உதைத்து மீதிப்பீர்
நிமிர்ந்த நெடுமரம் வணங்க மறுக்கும்
கொடுவாள் ஏந்தி அறுத்துச் சரிப்பீர்

வேரினின்றும் விதைகளினின்றும்
மரங்கள் முளைக்கும் மந்திரமறியா
மூடர் நீவிர்
கையிலேந்திய ஆயுதங் கனக்க
இரும்பு நெகிழ்ந்து கயிறாய்த் திரிந்துங்
கையைப் பிணைத்து கழுத்தை நெரிக்கையில்
விழுந்த மரங்கள் வனமெனச் சூழும்.

- சிவசேகரம்

# மௌனமாக்கப்பட்ட மானுடப் புயல் ராஜினி



ராஜினி தன் இரு பிள்ளைகளுடன்

**கொடியவர்கள் இழைக்கும் தீங்குகளிலும் பார்க்க, அவற்றை நல்ல மனிதர்கள் என்போர் அதிர்ச்சியூட்டுமளவுக்கு மௌனமாய்ச் சகித்துக் கொண்டிருப்பது பற்றியே நாம் இந்தத் தலைமுறையில் வருத்தமுற வேண்டும்.**

**- மாட்டின் லூதர் கிங்**

மேலே சொல்லப்பட்ட கூற்றுக்கிணங்க, தமிழ் சமூகத்தின் இன்றைய தலைமுறையினரின் பெறுமதியான வாழ்வுக்காக, மௌனமாக இருக்க விரும்பாது குரல் கொடுக்க விளைந்த இந்த மனுஷி 1989ம் ஆண்டு செப்டம்பர் 21ம் திகதி நிரந்தரமாக மௌனமாக்கப்பட்டார்.

ஆம்!

கலாநிதி ராஜினி திரணகம, யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உடற்கூற்றியல் துறைத் தலைவர் அதே மருத்துவ பீடத்துக்கு முன்பாக வீதியில் வைத்து துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

எந்த ஒரு தேசத்திலும் சமூகத்தின் அரசியல் செயற்பாட்டுக்கு முற்போக்கான பல பங்களிப்புகளைச் செய்வதில் அச் சமூகத்திலுள்ள பல்கலைக் கழகமும், அங்குள்ள புத்திஜீவிகளும் பிரதான பாத்திரம் வகிப்பது ஒரு பொது இயல்பு.

ஆனால் 1989ம் ஆண்டு செப்டம்பர் 21ம் திகதி நடந்த இக் கொலையானது யாழ். பல்கலைக் கழகம், தமிழ்ச் சமூகத்தின் விடுதலைக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பு வழங்குவதற்கான இறுதிச் சந்தர்ப்பத்தையும் நிறுத்தி உறையச் செய்துவிட்டது எனலாம்.

தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான போராட்டம் இன்னும் வெற்றிபெறாமல் இருப்பதற்கான காரணங்களில் பிரதானமாக சொல்லப்படுவது 'தமிழ் மக்களிடையே துரோகிகள் அதிகரித்துள்ளார்கள்' என்பதே.

கடந்த 20 வருடப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் துரோகிகள் எனப் பெயரிடப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இத் தொகையானது இலங்கை அரச படைகளால் திட்டமிட்டு சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்கள், கல்விமான்கள், அரசியல் செயற்பாட்டாளர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகின்ற பொழுது பலமடங்கு அதிகமானது என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (யுத்தத்தினால் அல்லது இயக்க மோதல்களினால் கொல்லப்பட்ட போராளிகள், பொதுமக்களின் தொகையைத் தவிர்த்து)

இத் 'துரோகிகள் படுகொலை' என்ற வரிசையில்தான் ராஜினி திரணகம என்னும் இந்தத் தமிழ் மகளின் கொலையும் நடந்தேறியது. அவர் கொல்லப்பட்டு 10 ஆவது ஆண்டு நிறையும் இத் தருணத்தில் இந்தத் 'துரோகிகள் கொலை' பற்றிச் சற்று ஆராய்வது பொருத்தமானது.

ராஜினி திராணகம ஒரு துரோகி தானா என்பதைத் தீர்மானிப்பதற்கு முன் ராஜினியின் வாழ்க்கையைப் பற்றி சில குறிப்புகள்........

ஆண் சகோதரர்களே இல்லாது, நான்கு பெண்களுள் இரண்டாவதாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராஜசிங்கம் தம்பதியினருக்குப் 1954 பெப்ரவரி 23ம் திகதி பிறந்தவர் ராஜினி.

இவருக்கு மூத்தவர் நிர்மலா. இவர், வீரஞ்செறிந்ததாகப் போற்றப்படும் தமிழ் ஆயுதப் போராட்டத்தில் ஒருகாலத்தில் **நிர்மலா நித்தியானந்தன்** எனப் பரவலாகப் பேசப்பட்டவர்.

70களின் நடுப்பகுதியில் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது ஆயுதமேந்திய இளைஞர்களை வீடுகளில் அண்ட பலரும் அஞ்சிய காலகட்டத்தில் நிர்மலாவும் அவரது முன்னாள் கணவர் நித்தியானந்தனும் இவ்விளைஞர்களுக்காகத் தம் வீட்டுக் கதவுகளைத் திறந்து வைத்திருந்தவர்கள். இருவரும் யாழ் பல்கலைக் கழகத்தின் உதவி விரிவுரையாளர்கள்.

இக் காலகட்டத்தில் ராஜினி கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட மாணவியாகக் கற்றுத் தேறி, ஹல்துமுல்லை என்னும் இடத்தில் வைத்தியராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அப்போது ராஜினிக்கு ஆயுதப் போராட்ட இயக்கங்களுடன் தொடர்பு இருக்கவில்லை. விடுமுறைக்கு யாழ் வரும்பொழுது அக்கா நிர்மலாவின் வீட்டில் நடைபெறும் அரசியல் உரையாடல்களில் கலந்து கொள்வதுண்டு.

யாழ். பல்கலைக் கழகத்திலும் அக் காலகட்டத்தில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் திசை குறித்து பல்வேறு கருத்துப் போக்குகளும் அதற்கான விவாதங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. **புதிய பாதை, உணர்வு, ஈழ மாணவர் குரல், தர்க்கீகம்**.... என பல பத்திரிகைகள் இவ் வெவ்வேறான கருத்துப்போக்குகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிபலிப்பவையாக வெளிவந்து கொண்டிருந்தன. இவைபற்றிய வாதப் பிரதிவாதங்கள் நிர்மலா, ராஜினி ஆகியோரின் வீட்டிலும் தொடர்ந்தன.

அங்குதான் யாழ். பல்கலைக் கழகத்தில் 1977க்கு முன் விரிவுரையாளராக இருந்த **தயாபால திரணகம** என்பரோடு ராஜினிக்கு நெருக்கமான ஈடுபாடு ஏற்படுகிறது.

இந் நெருக்கமானது சாதாரண அன்புறவு என்பதற்கு மேலாக அவர்களின் சமூக, அரசியல் ஈடுபாடுகள் தொடர்பான கருத்துப் பரிமாற்றமும் அதனடிப்படையில் ஏற்பட்ட பிடிப்புமே அவர்களைக் கருத்தியல் ரீதியில் இணைத்து தம்பதியினராக்கியது எனலாம்.

குறிப்பாக நிர்மலாவும் நித்தியானந்தனும் அக்காலத்தில் **உணர்வு** என்னும் பத்திரிகை தாங்கிவந்த தமிழ் தேசியவாத கருத்துப் போக்கையும் அதனடிப்படையில் வளர்ந்து வந்த விடுதலைப் புலிகள் அமைப்பினரோடுமே மிக நெருக்கமான அரசியல் உறவை வைத்திருந்தனர்.

எனவே புலிகள் அக் காலகட்டத்தில் செய்த பல அரசியல், இராணுவ நடவடிக்கைகளுக்கும் ஒத்தாசை வழங்கியிருந்தார்கள்.

இக்காலத்தில்தான் ராஜினி ஹல்துமுல்லவில் இருந்து மாற்றலாகி யாழ் பெரியாஸ்பத்திரிக்கு வைத்தியராக சேவையாற்ற வந்தார். அதன்பின் 81ல் யாழ் பல்கலைக்கழக மருத்துவ விரிவுரையாளராகச் செல்கிறார்.

மிக இக்கட்டான நேரங்களில் ஒரு வைத்தியத்துறையைச் சார்ந்தவர் என்ற வகையில், காயப்பட்ட போராளிகளுக்கு சிகிச்சை செய்யக் கேட்டபோது, ராஜினி தயங்காமல் உதவிசெய்ய முன்வந்தார்.

1981ல் முதன்முறையாக சாவகச்சேரி பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டு, அதில் காயப்பட்ட போராளிகளை (குறிப்பாக மிக மோசமாகக் காயப்பட்ட பிரபாகரனின் வலதுகையான சார்ள்ஸ் அன்ரனியை) தமது வீட்டில் மறைத்து வைத்து வைத்தியம் செய்ததற்காக நிர்மலாவும் நித்தியானந்தனும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். அங்கு ராஜினியின் பெயர் எவராலும் குறிப்பிடப்படாததால் அவர் கைதுசெய்யப்படவில்லை.

1981ல் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளராக இணைந்துகொண்ட ராஜினி 1983 ஜூலை கலவரத்தின்பின் தனது கலாநிதிப் படிப்புக்காக லண்டன் பயணமானார். அங்குதான் அவருக்கு விடுதலைப் புலிகளின் லண்டன் காரியாலயத்தோடு தொடர்பு ஏற்பட்டது.

அதன்பின் சர்வதேச அரங்கில் தமிழ் மக்களின் பிரச்சினையை மிக காத்திரமாக வெளி உலகுக்கு எடுத்துச் சொல்லியும், ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தையும் அதன் தார்மீக உரிமையைப் பற்றியும் மிக உறுதியாக பிரச்சாரம் செய்தார்.

அவரிடம் இயல்பாகவே இருந்த உயிரோட்டமான பேச்சுத் திறனும் ஆங்கில அறிவும் ஓயாது பணியாற்றும் சுறுசுறுப்பும் அவருக்கு இந்தப் பணியில் மிகவும் கைகொடுத்தன.

இதன் பயனாக அன்று தவழும் நிலையிலிருந்த விடுதலைப் புலிகள் அமைப்புக்கு தன்னை சர்வதேச ரீதியாக அறிமுகம் செய்து கொள்ளவும் அடையாளப்படுத்திக் கொள்ளவும் தனக்கான அத்திவாரத்தைப் பல நாடுகளில் இட்டுக் கொள்ளவும் வாய்ப்பாக அமைந்தன. இவைதான் ராஜினி செய்த துரோகங்களோ என்னவோ?....

இவ் வேளையில் ராஜினி இரு பெண்பிள்ளைகளுக்குத் தாயாக இருந்தார். அவருடைய கணவர் திரணகம தென்னிலங்கையில் இடதுசாரி அரசியலில் ஈடுபட்டு தலைமறைவு வாழ்க்கையில் இருந்தார்.

1984ம் ஆண்டு மட்டக்களப்பு சிறை உடைப்புகளில் வெளிக் கொணரப்பட்ட ராஜினியின் மூத்த சகோதரியான நிர்மலாவும், அவரது கணவர் நித்தியானந்தனும் இந்தியாவுக்கு கொண்டுசெல்லப் பட்டனர். அங்கு சென்றபின்புதான் தாம் அரசியல் ரீதியாகப் பாரிய தவறு விட்டுவிட்டதாக நிர்மலாவும், நித்தியானந்தனும் உணர்ந்து கொண்டனர்.

அதாவது, தாம் மிகவும் கோட்பாட்டு ரீதியில் நம்பிய, தமிழ் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தரவல்லதென எண்ணிய விடுதலைப்புலிகள் அமைப்புக்குள் உட்கொலைகளும் கருத்துச் சுதந்திர மறுப்பும், தனிமனித சர்வாதிகாரமும் வளர்ந்திருப்பதை கண்டனர். இயக்க உறுப்பினர்களே ஒருவரை ஒருவர் உளவு பார்ப்போராகவும் மாற்றப்பட்டிருப்பதை உணர்ந்தனர்.

இவ் ஆரோக்கியமற்ற நிலைமையைவிமர்சிக்க முற்பட்டபோது, தமது உயிருக்கும் ஆபத்து ஏற்படக் கூடுமென்பதையும் உணர்ந்தனர். இதனால் நிர்மலாவும், நித்தியானந்தனும் இன்னும் சில முக்கிய உயர் உறுப்பினர்களும் பல கீழ் மட்ட உறுப்பினர்களும் இயக்கத்தை விட்டு இரகசியமாக வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர். இச் செய்தியும் இயக்கத்தின் உள் நிலைமைகளும் நிர்மலாவினால் ராஜினிக்கு தெரிவிக்கப்பட்டது.

ராஜினி தனக்கேயுரிய இயல்பான பாணியில், லண்டனில் இவ் விடயங்கள் தொடர்பாக கேள்வி கேட்க ஆரம்பித்தார். அவருக்குக் கிடைத்த பதிலும் ஆச்சரியம் தருவதாகவும் அச்சுறுத்தல் மிகுந்ததாகவுமேஇருந்ததைஉணர்ந்தார். "அக்கா தேவையில்லாமல் கேள்விகள் கேட்டு ஏன் பிரச்சினையை விலைக்கு வாங்குகிறீர்கள்?" என



யாழ். பல்கலைக்கழகத்தில் 60ம் நாள் நினைவஞ்சலிக் கூட்டம்



கோழைக்கு மரத்தின் இலைகள் கூட தன்னைப் பற்றிக் கிசுகிசுப்பது போல் கேட்கும்.
– சுவிஸ் பழமொழி

### மணமகளே.....

அந்நிய தேசத்தில்
வீசப்படும்
அபரிமிதமான
கசக்கின்ற
பாண் துண்டுகளில்
வாழ மறுத்தாய்.

உன்னைத் தொடர்ந்த
மரணத்தின்
உஷ்ண மூச்சுடன்
வாழ்வதற்கென்று
தாய்மண் மீண்டாய்.

உன்னுடைய
தலை நிமிர்ந்து நின்றது.
அவர்கள் உன்னைத்
தெருவில் ஒரு நாயைச்
சுடுவதைப் போல
சுட்டார்கள்.

ஆனால் உன் சாவு
அவர்களின் அவலட்சண
வெட்க சொரூபத்தின்
வெளிப்பாடாய்....
ஆனால் -
உனது அற்புதமான
காம்பீரியமாய்
என்றும் நினைவில் வாழும்.

நான் அஞ்சலி செய்ய
மலர் வளையம் கொண்டு
வரவில்லை
மணப்பெண்ணை வாழ்த்த
மலர்களைத் தூவுகிறேன்.

ராஜினி நினைவாக:
சமூகவியலாளர் றெஜி சிறிவர்தன
தமிழில்: மு. நித்தியானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> "Come, We will give you a lift" என இந்திய இராணுவ அதிகாரிகள் அழைத்த போது "I have my two strong legs" என வெடுக்கெனக் கூறிவிட்டு ராஜினி சைக்கிளில் ஏறிச் சென்றதும் "You are a nasty woman...!" என இந்திய அதிகாரிகள் திட்டியதை ரசித்தவண்ணம் அசட்டுச் சிரிப்புடன் அவர்களின் வாகனங்களில் ஏறிச் சென்ற கல்விமான்களைக் கொண்ட ஒரு பல்கலைக் கழகச் சூழலிலேயே அன்று ராஜினி வேலை செய்ய வேண்டி இருந்தது.

பவ்வியமாகவும் ஆனால் எச்சரிக்கைத் தொனியிலும் மிக நெருக்கமாக இருந்த உறுப்பினர்கள் கூடக் கேட்கத் தொடங்கியதுமே ராஜினியின் உள்ளுணர்வு விழித்துக்கொண்டது. தனது இரு பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு அடுத்தது என்ன என்பதைப் பற்றியேசிந்திக்காதுலண்டன்தெருக்களில் இறங்கினார் ராஜினி.

1986ம் ஆண்டு கல்வியை முடித்துக் கொண்டு இலங்கைக்கு தன் இரு குழந்தைகளுடன் மீண்டும் திரும்பி யாழ். பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீட உடற்கூற்றியல் துறைத் தலைவராக பொறுப்பேற்றார்.

1986ம் ஆண்டுதான் யாழ் மண்ணில் மிக அவலமான சம்பவங்கள் நிகழ்ந்தேறின. ஒவ்வொரு இயக்கமாக விடுதலைப் புலிகளால் தடை செய்யப்பட்டதும்,அதிலிருந்தநூற்றுக் கணக்கானவர்கள் படுகொலை செய்யப்பட்டதும் நடந்தது.

தொடர்ந்து 1987ம் ஆண்டு எதிர்பார்த்தபடி இலங்கை அரசாங்கம் யாழ். தீபகற்பத்தைக் கைப்பற்ற பாரிய இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விட்டது. அதன்பின் இந்தியத் தலையீடு.

இவ் எல்லா நிகழ்வுகளும் ராஜினியின் மனதை மோசமாகப் பாதித்தன. அழிவை நோக்கிச் செல்லும் தமிழ்ச் சமூகத்தை மீட்டெடுக்க என்ன செய்யவேண்டும் என்று அவர் மண்டையை உடைத்துக் கொண்டார். ஆத்திரப்பட்டார்.

விளைவாக, 1987ம் ஆண்டு இந்திய இராணுவத்துக்கும் புலிகளுக்கும் யுத்தம் ஆரம்பித்த நாட்களில் நடந்த மனித உரிமை மீறல்களைப் பற்றி தகவல்களைத் திரட்டவேண்டும் என்ற எண்ணம் தோன்றியதால், ஏற்கெனவே யாழ். பல்கலைக் கழகத்தில் இதனைச் செய்ய ஆரம்பித்திருந்த சில விரிவுரையாளர்களுடன் ராஜினியும் இணைந்து கொண்டார்.

அவ்வாறு சேர்க்கப்பட்ட தகவல்களைத்தான் பின்னர் இன்னும் பல அரசியல் ரீதியான ஆய்வுகளுடன் இணைத்து **The Broken Palmyra** (முறிந்த பனை) என்னும் ஆங்கில நூலுருப் பெற்றது.

அது தமிழ் போராட்டத்தின் காத்திரமான, ஆய்வுரீதியான, உள்ளார்ந்த விமர்சனமாகவே அமைந்தது.

இந்திய இராணுவத்துடனான மோதலில் முழு யாழ். நகருமேயுத்தகளமாகமாறியதுடன் யாழ். பல்கலைக் கழகம் மோசமாகப் பாதிக்கப்பட்டது. அது எப்போது திறக்கப்படுமோ என்ற நம்பிக்கையீனமே மேலோங்கியிருந்தபோது 1987 ஒக்டோபர் 10ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மோதல் 26ம் திகதி ஓரளவுக்குத் தணிந்ததும், ராஜினியும் இன்னும் சில விரிவுரையாளர்களும் சேர்ந்து, சில தனிப்பட்டவர்களிடம் கையேந்திப் பணம் வாங்கி, பல்கலைக்கழகத்துக்குள் உடைத்து நொருக்கப்பட்டு எஞ்சியிருந்த உபகரணங்களைப் பத்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தனர்.

ராஜினியும் அவரது நண்பர்களும் ஓடியோடி எடுத்த சிரமத்தைக் கண்ணுற்ற ஓர் இந்திய அதிகாரி, "இந்த உடைசல் பல்கலைக்கழகத்துக்காக ஏன் இவ்வளவு சிரமப்படுகிறீர்கள், இது எமது நாட்டிலுள்ள ஒரு சாதாரண பாடசாலையின் தரத்தில்கூட இல்லை. இந்த உடைசல்களை விட்டுவிட்டு இந்திய அரசிடம் கேட்டால் இதை விடப்பலமடங்கு பெறுமதியானபல்கலைக்கழகத்தை அமைத்துத் தருமே..." எனக் கூறினார்.

அதற்கு ராஜினியின் பதில், "இந்தப் பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு அங்கமும் எங்கள் இரத்தத்தாலும் கண்ணீராலும் உருவாக்கப்பட்டது, உங்களைப்போன்ற ஒரு அகம்பாவம் கொண்ட தேசத்தவர்களால் அதைப் புரிந்துகொள்ள முடியாது. இதன் பெறுமதி எங்களுக்குத்தான் தெரியும்" என்பதாகவே அமைந்திருந்தது.

இக் கட்டத்தில் யாழ். பல்கலைக்கழகத்தின் பல மூத்த கல்விமான்களும் பேராசிரியர்களும் தம் தனிப்பட்ட தேவைகளுக்காக இந்தியஇராணுவஅதிகாரிகளை *"Sir... Sir....Can you please do this favour...?"* எனக் கேட்டவண்ணம் நசிந்து குழைந்து அதிகாரிகள் தயவை நாடி நின்றனர்.

அக் கல்விமான்களுக்கு ராஜினியின் நடவடிக்கைகள் ஆத்திரமூட்டுவனவாகவும் நெருடலாகவும் அமைந்தன.

இப் பேராசிரியர்களையும் ராஜினியையும் *"Come, We will give you a lift"* என இந்திய இராணுவ அதிகாரிகள் அழைத்தபோது *"I have my two strong legs"* என வெடுக்கெனக் கூறி, ராஜினி சைக்கிளில் ஏறிச் சென்றதும் *"You are a nasty woman...!"* என இந்திய அதிகாரிகள் திட்டியதை ரசித்தவண்ணம் அசட்டுச் சிரிப்புடன் அவர்களின் வாகனங்களில் ஏறிச்சென்ற கல்விமான்களைக் கொண்ட பல்கலைக் கழகச் சூழலிலேயே அன்றுராஜினி வேலைசெய்ய வேண்டி இருந்தது.



ராஜினியின் படங்களைத் தாங்கியபடி சென்ற ஜனநாயகத்திற்கான இறுதி யாத்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கே போகிறோம்...?

**....ஈனத்தனமாக படுகொலை செய்யப்படுமளவிற்கு இவர் செய்த குற்றம்தான் என்ன?**

**கொண்ட கொள்கையே கண்ணாக மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராக சேர்ந்து பின்னர் இங்கிலாந்தில் உடல் அமைப்பியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்று, எமது நாட்டுப் புத்திஜீவிகள் பலரும் எமது நாட்டில் நிகழும் நிகழ்கால நிகழ்வுகளை எதிர்நோக்கப் பயந்து வெளிநாடுகளில் தமது சுக போகங்களை மட்டுமே நோக்கமாகக் கொண்டு வாழும்போது 3 வருடங்களின் முன் மீண்டும் வந்து சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றியதா?**

**எமது மருத்துவபீடம் எத்தனையோ தமிழ் வைத்திய கலாநிதிகள் வெளிநாடுகளில் இருக்கும் நிலையில் மூடப்படுகின்ற அபாயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற வேளையில், தனியொருத்தியாக தனது இரண்டு பெண் குழந்தைகளுடனும், மருத்துவத்துறையில் சுவை மிகுந்த ஒரு துறையான உடலமைப்பியல் துறையினை மிகத் திறம்பட நடத்திக் கொண்டு வந்ததா?**

**மாணவர்களின் கண்டிப்பு நிறைந்த ஒரு விரிவுரையாளராகவும், இடர் நேரிடுகையில் ஓர் தாயைப் போலவும், விழாக்களில் ஒரு தோழியைப் போன்றும் அன்புடனும் பட்சத்துடனும் திறந்த மனத்துடனும் எளிமையுடனும் நெருங்கிப் பழகியதா?**

**மாணவர் பிரச்சினையில் ஓர் விரிவுரையாளர் என்ற உயர்நிலையில் நின்று பாராமல் தானும் ஓர் மாணவி போல் பிரச்சினைகளை அணுகி சக விரிவுரையாளர்களுடன் வாதாடி மாணவர் பிரச்சினையைத் தீர்த்து வைத்ததா?**

**எமது பீடம், எமது சமுதாயம் இவரைப் போன்ற ஓர் விரிவுரையாளரை இனி ஒருபோதும் பெற முடியாது.**

**யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் -22-09-1989.**

1987ல் எழுத ஆரம்பிக்கப் பட்ட "The Broken Palmyra" நூல் 89ம் ஆண்டு முற்பகுதியில் முடிவுற்றது.

அதனை அச்சுக்கு அனுப்புவதற்கு முன்னர் முன்னச்சுப் பிரதிகள் *(Pre print copies)* சில எடுக்கப்பட்டு வாசித்து அபிப்பிராயம் தெரிவிக்கும்படி சில நெருக்கமான நண்பர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

1989ம் ஆண்டு ஜுலை மாதம் இரண்டு மாத கல்வி விடுமுறையில் *(Research Leave)* ராஜினி இங்கிலாந்து சென்றார். அந்த நேரம் அவரது யாழ்ப்பாண இல்லத்தை முற்றுகையிட்ட இந்திய இராணுவத்தினர், அங்கு தமக்கு எதிராக ராஜினியும் ஏனைய பல்கலைக் கழக ஆசிரியர்களும் சேர்ந்து எழுதிய பல அறிக்கைகளையும் *"The Broken Palmyra"* வின் *Pre print copy* ஒன்றையும் எடுத்துச் சென்றனர்.

இதை ஃபோட்டோ பிரதி எடுப்பதற்காக அரியாலையிலிருந்த இந்திய இராணுவ மேஜர் யாழ்ப்பாணத்திலிருந்த ஒரு தமிழ் பத்திரிகைக் காரியாலயத்துக்கு எடுத்துச் சென்று, அங்கிருந்த ஒரு உதவியாசிரியரிடம் கொடுத்தார்.

அவர் அதில் இராணுவ மேஜருக்கு ஒரு ஃபோட்டோ பிரதியும் தனக்கு ஒன்றுமாக இரண்டு ஃபோட்டோ பிரதிகள் எடுத்தார்.

தனது பிரதியை அவ் உதவியாசிரியர் தன் உறவினர் வீட்டில் மறைத்து வைத்திருந்தார்.

விடுதலைப் புலிகளோடு தொடர்புள்ள ஒருவருக்கு அவ் உறவினர் அப் பிரதியைக் காட்டினார்.

அவர் இப் பிரதி பற்றி விடுதலைப் புலிகளின் உளவுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மானுக்குத் தெரிவித்தார்.

உடனே அவரைத் திருப்பி அனுப்பி அப் பிரதியை எடுப்பித்தார் பொட்டம்மான்.

அதனை மொழிபெயர்ப்பதற்காக வடமராட்சியிலிருந்து ஒரு பிரபல மொழிபெயர்ப்பாளர் கடத்திச் செல்லப்பட்டு ஒரு வாரம்வரை தடுத்து வைக்கப்பட்டு அதில் புலிகளை விமர்சித்து எழுதப்பட்ட விடயங்கள் மொழிபெயர்க்கப்பட்டன. இது நடந்தது 1989 செப்டம்பர் முதல் வாரத்தில். (பாதுகாப்புக் கருதி சம்பந்தப்பட்ட நபர்களது பெயர்கள் தவிர்க்கப்பட்டுள்ளன)

முன்னச்சுப் பிரதிகளை வாசித்த பலர் இந் நூல் வெளிவந்தால் எழுதியவர்களின் உயிர்களுக்கு பல முனைகளிலிருந்தும் ஆபத்து ஏற்படலாம் என எச்சரித்தனர். குறிப்பாக விடுதலைப் புலிகளைப் பற்றி இருக்கும் கடுமையான விமர்சனங்களை அவர்கள் தாங்க மாட்டார்கள் என்பதால் ஆத்திரமுறலாம் எனவும் கூறப்பட்டது.

ராஜினி தனது கல்வி விடுமுறையை முடித்துக்கொண்டு செப்டம்பர் 3ம் திகதி கொழும்புக்கு வந்தார். அப்போது கொழும்பில் தலைமறைவு வாழ்க்கையிலிருந்த தன் கணவரை இரகசியமாகச் சந்தித்துவிட்டு யாழ்ப்பாணம் வர ஆயத்தமானார்.

"இப்போது யாழ். வரவேண்டாம். கொழும்பில் சிலநாள் தங்கியிருங்கள்'' என பல நண்பர்கள் கூறியும் 2nd MBBS மாணவர்களுக்கு வைவா *(Viva)* பரீட்சையை உடனடியாக நடத்த வேண்டும், இவ் யுத்தச் சூழ்நிலையில் மாணவர்களின் கல்வியைப் பின்தள்ளுவது மிக மோசமானது என அவர் கருதியதால் எதையும் பொருட்படுத்தாமல் 1989 செப்டம்பர் 10ம் திகதி யாழ்ப்பாணம் வந்தார். திட்டமிட்டபடி மாணவர்களுக்கான பரீட்சையை அவர் நடத்தி முடித்தார்.

பரீட்சை நடந்து கொண்டிருந்த வாரம் முழுவதும் பல்கலைக்கழகத்துள் ராஜினியின் நடமாட்டங்கள் சில மருத்துவபீட மாணவர்களாலேயே வேவு பார்க்கப்பட்டன. பரீட்சையின் இறுதிநாளான செப். 21ம் திகதி காலை முதல் மருத்துவ பீட வளவுக்குள் புதிய சில முகங்கள் நடமாடுவதை மாணவர்கள் கண்டனர்.

மாலை 4.30 மணிக்கு பரீட்சை முடிவுற்றது. 5.45 வரை எஞ்சியிருந்த தன் காரியங்களை முடித்துவிட்டு பெரியதோர் காரியம் நிறைவேறிவிட்டது என்ற உணர்வுடன் தன் இரு பிள்ளைகளையும் பார்ப்பதற்காக சைக்கிளை எடுத்துக் கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டார்.

லண்டனிலிருந்து வந்ததிலிருந்து, பல்கலைக் கழகப் பரீட்சையில் முழுமையாக ஈடுபட்டதால் தனது பிள்ளைகளுடன் சரிவரப் பேசவும் இல்லை. பரீட்சை முடிந்துவிட்ட திருப்தியில் பிள்ளைகளைக் காண ஆவலுடன் அவர் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறினார்.

மருத்துவபீட வாசலைத் தாண்டி சைக்கிளை திருநெல்வேலிச் சந்தியை நோக்கி வலப்புறமாகத் திரும்பி ஒரு சில யார் தூரம் சென்றிருக்க மாட்டார்....

அவருக்குப் பின்புறமிருந்து அவரது வலப்புறத்தை நெருங்கிய மற்றொரு சைக்கிளில் வந்த கொலையாளி அவரது வலது நெற்றியில் பிஸ்டலால் வெடி வைத்தான்.

ராஜினி சூடுபட்டு கீழே விழ கொலையாளி தன் சைக்கிளை விட்டு இறங்கி அவரது தலையில் மேலும் மூன்று வெடிகள் தீர்த்தான். அந்த இடத்திலேயே எந்த வார்த்தையும் உதிர்க்காமல் ராஜினியின் உயிர் பிரிந்தது.

பின் நிதானமாக சைக்கிளில் ஏறி இடதுபக்கம் இருந்த ஒழுங்கையொன்றால் திரும்பி வடதிசையில் சென்று மறைந்தான் கொலையாளி.

அந்த அந்திநேர வெளிச்சத்தில் அங்கு நின்ற மக்களும்(!) பல்கலைக்கழக மாணவர்களும் பார்த்திருக்க இது நடந்தது.

பார்த்திருந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு அன்று மருத்துவபீட வளவுக்குள் உலவிய புதிய முகங்களில் ஒன்றே அந்தக் கொலையாளி என்று அடையாளம் தெரிந்திருந்தது.

அவன் புலிகளின் உளவுப் பிரிவைச் சேர்ந்த **பொஸ்கோ** என்பவன்தான் எனப் பின்னர் உறுதி செய்யப்பட்டது.

ஆனால் அச்சம்பவத்தைக் கண்ணால் கண்ட மாணவர்கள் கொலையாளியை நேருக்கு நேர் பார்த்துள்ளனர். அதேவேளை கொலையாளியும் அவர்களைப் பார்த்துவிட்டான். அதனால் கொலையாளி யாரெனத் தெரியவந்தால் தம் உயிருக்கு ஆபத்தென அவர்கள் அஞ்சியதால் இதுவரை இத் தகவல் வெளியிடப்படவில்லையென ராஜினியின் பணியைத் தொடர்ந்து செய்துவரும் சில விரிவுரையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

லண்டனிலிருந்து திரும்பியதும் மருத்துவ பீடத்தின் பீடாதிபதிக்கு *"I have no life without my people... Here I am back again"* என கடிதம் எழுதிய அந்த -

ராஜினிதான் இப்படிக் கொலை செய்யப்பட்டார். அதைச் செய்தது என்னமோ புலிகள்தான். ஆனல் அவரது இருப்பும் செயற்பாடும் அவர்களுக்கு மட்டும்தான் நெருடலாக இருந்தது என்றில்லை.

தமிழ் சமூகத்தின் உயர் ஸ்தானத்தை வகிக்க விழையும் சில படித்த குழாத்தினருக்கும் அவர் உறுத்தலாக விளங்கினார்.

ஏனெனில், உயர் ஸ்தானத்தின் இருப்பிட ஆதங்கமும், இயல்பாகவே அமைந்த ஆதிக்க சக்திகளுக்கு அடிவருடிகளாகிப் போகும் நசுங்கல் போக்கும் அவர்களுக்கு இருந்தது.

தற்துணிவுடன் தவறுகளைச் சுட்டிக்காட்டி, மனசாட்சிப்படி வாழ நினைக்கும் ஒரு நேர்மையான துடிப்புள்ள செயற்பாட்டாளரை நேரடியாக முகம்கொடுக்க முடியாத அவர்கள் முள்ளந்தண்டற்றவர்களாக இருந்தார்கள்.

அவ்வாறான நிலையில் தமிழ் சமுதாயத்தின் விடிவுக்காக அந்தக் குயில் கூவியது. அந்தக் கூவலின் உறுத்தலைத் தாங்கமுடியாத வன்முறையாளர்களால் அதன் கழுத்துத் திருகப்பட்டு வீதியில் வீசப்பட்டது.

அவரின் உடல் யாழ்ப்பாணத்தில் புதைக்கப்பட்டது. கொலை செய்யப்பட்ட உடனடியாக அக் கொலைக்கு எதிப்பைத் தெரிவிக்க முடியாது போய்விட்டாலும், அவரது மறைவின் 60ம் நாள் யாழ்க் குடாநாட்டில் பல கண்டனக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

யாழ்ப்பாணமெங்கும் ராஜினியின் முகம் பொறிக்கப்பட்ட பெரிய அளவிலான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.


அன்றைய தினம் சுமார் நாலாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களும் பொதுமக்களும் நடத்திய கண்டன ஊர்வலத்திலும் அவரின் முகம் பொறித்த பதாகைகள் ஏந்திச்செல்லப்பட்டன. அவற்றில் ஒரு வாசகம் துலக்கமாக எழுதப்பட்டிருந்தது.

***"ராஜினி! நீ புதைக்கப்படவில்லை, விதைக்கப்பட்டிருக்கிறாய்!"***

**– குருக்ஷேத்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்ச்சைக்குரிய UTHR(J)*

## அமுதுக்குப் பிரத்தியேக பேட்டி

**UTHR(J)* என அழைக்கப்படும் மனித உரிமைகளுக்கான யாழ் பல்பலைக்கழக ஆசிரியர்களின் அமைப்பு 1987ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1981ல் அதன் ஸ்தாபக உறுப்பினர்களின் ஒருவரான ராஜினி புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். 1990ம் ஆண்டில் அதன் ஏனைய உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற நேர்ந்தது. அதிலிருந்து இன்று வரை கொழும்பில் தலைமறைவாக வாழ்ந்த வண்ணம் அரசாங்கம், புலிகள். ஏனைய தமிழ் ஆயுதமேந்திய அமைப்புக்கள் ஆகியவற்றின் மனித உரிமை மீறல்களைப் பற்றி 35க்கு மேற்பட்ட அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர். அவற்றில் உள்ள தகவல்கள் மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்தன என சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன அவர்களின் மறைவிடத்திற்கு நாம் அனுப்பிய கேள்விகளுக்கு அவர்கள் எழுதி அனுப்பிய பதில்களை இங்கே தருகிறோம்.**

### உங்கள் அமைப்பின் நோக்கம் என்ன?

மனித உரிமையென்பது மனித மாண்பு சம்பந்தப்பட்டதொன்றாகும். அது எந்தப் போராட்டங்களிலும் அடிப்படையான ஒரு விடயமென நாம் கருதுகிறோம்.

தமிழ் மக்களின் போராட்டங்கள் தொடங்கிய ஆரம்ப காலகட்டத்தில் அரசாங்கங்களது ஒடுக்குமுறைகளே மனித உரிமை மீறல்களின் அடிப்படை என்று புரிந்து கொள்வதில் எவருக்கும் பிரச்சினை இருக்கவில்லை. அப்போது அரசு செய்கின்ற மனித உரிமை மீறல்களே பிரதானமாகப் பார்க்கப்பட்டது. அரசு எவ்வாறு மனித உரிமைகளை மீறுகிறது, அரசை எவ்வாறு கேள்விக்குட்படுத்தலாம். எவ்வாறு சர்வதேச சட்டங்களுக்கு அமைய அதைக் கட்டுப்படுத்தலாம் என்று பார்ப்பதே எந்த மனித உரிமையாளர்களுக்கும் பிரதான விடயமாக இருந்தது.

ஆனால் இதற்கு அப்பாலும் மனித உரிமையாளர்கள் சிந்திக்க வேண்டிய சூழ்நிலையும், அவசியங்களும் பின்னர் எழுந்தன.

எங்கள் போராட்டத்தின் போக்குகளைப்பற்றிபலருக்கும்பலவிதமான கருத்து வேறுபாடுகள் இருந்தது. தமிழ் மக்கள் மத்தியிலே அரசியல் ரீதியான பல குழுக்கள், பல போக்குகள் இருந்தன.

இலங்கை அரசுக்கெதிரான போராட்டமொன்றை நடத்த வேண்டும் என்பதில் இவர்களிடையே பிரச்சினை இருக்காவிடினும், அதை எப்படி நடத்துவது, எந்த அடிப்படையில் நடத்துவது, எதை நோக்கி நடத்துவது என்று பல, மார்க்கங்கள், வழிமுறைகள் பற்றிய பிரச்சினைகள் இருந்தன. அதனால் பல்வேறு செயற்பாடுகளைக் கண்டித்து, விமர்சித்து விவாதங்கள் நடந்து கொண்டிருந்தன.

அப்போதும் தனிநபர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். காலப்போக்கில் அரசியல்வாதிகளைத் தாண்டி அரசியல் இயக்கங்களுக்கு எதிரான கொலைகள் நடந்திருக்கின்றன. இயக்கங்களுக்குள் கொலைகள் நடந்திருக்கின்றன. இவ்வாறு ஒரு அராஜகப் போக்கு வளர்ந்து வருகின்றபோது ஆரம்ப காலங்களில் அதை ஒரு உள் வீட்டுப் பிரச்சினையாகவே மக்கள் கருதி கையாள முனைந்தனர்.

அதாவது எங்கள் சமூகத்துக்குள்ளே இருக்கின்ற சில ஆரோக்கியமற்ற போக்குகளாகக் கருதி இவற்றைக் கண்டாலும் இவற்றை நாம் காலப்போக்கில் கட்டுப்படுத்தியிருக்க வேண்டும் என்ற அவாதான் சாதாரண மக்களிடையே இருந்தது. அவற்றுக்குக்கெதிரான விமர்சனங்கள் கூட வெவ்வேறு மட்டங்களில் வித்தியாசப்பட்டிருந்தன.

அரசியல் ரீதியாக தனிநபர் பயங்கரவாதம் என்ற அடிப்படையில் இது தவிர்க்கப்பட வேண்டுமென்றும், இவ்வாறான அழிவுகள் போராட்டத்தை எங்கே கொண்டு செல்லும் என்றும் சிலர் பார்த்தனர். வேறு சிலர் தார்மீக அடிப்படையில் இப்பிழைகளின் பாதகமான பக்கங்களைப் பார்த்தனர்.

ஆனால் இவற்றிற்கெல்லாம் மேலாக பிரதானமான பிரச்சினையாக இருந்தது இலங்கை அரசின் ஒடுக்குமுறையும் அதிலிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதும்.

இப்பின்புலத்தில் எமது போராட்டத்தில் ஏற்பட்ட அராஜகப் போக்குகள் பிரச்சினைகளாக இருந்தாலும் அவை பிரதான பிரச்சினைகளாகப் பார்க்கப்படவில்லை.

ஆனால் ஆயுதப் போராட்டங்கள் வளர்ச்சியடைந்த விதம் குறிப்பாக 1983ற்குப் பின் ஏற்பட்ட துரித மாற்றங்கள் என்பவற்றை அவதானித்தபோது இவ்வாறு நடந்த மனித உரிமை மீறல்கள் புதியதொரு மட்டத்துக்குச் சென்றது.

அரசியல் ரீதியாகக் கருத்துக்களை வெளியில் கொண்டுவர முடியாதவாறு இடைவெளிகளை அடைக்கின்ற நிலைமை ஏற்பட்டது. அவ்வாறு அடைத்து, மாற்று அரசியல் கருத்துக்களுக்கோ, சமூக இயக்கங்களுக்கோ எந்தவிதமான பங்களிப்பும் செய்ய இயலாத நிலைமைக்கு வந்துசேர்ந்தது. பல்வேறு இயக்கங்களும் தடை செய்யப்பட்டு, சிவில் சமூகத்தில் ஓரளவாவது சுயாதீனமாக இயங்கக்கூடிய சக்திகளெல்லாம்முடக்கப்பட்டநிலையில்தான் எமது போராட்டத்தில் ஒரு குணாம்ச ரீதியான மாற்றம் ஏற்பட்டது.

அந்தக் கட்டத்தில் ஒரு இயக்கம் -அதாவதுவிடுதலைப்புலிகள் ஆதிக்கத்துக்கு வந்த விதம், கருத்து ரீதியான வென்றெடுப்பாலோ அல்லது பல்வேறு சக்திகளை ஐக்கியப்படுத்தியதாலோ வரவில்லை.

முக்கியமாக ஒருவித பீதியையும் பயங்கரத்தையும் மக்களிடம் உருவாக்கி, வெறும் குறுகிய தமிழ் தேசியவாத உணர்வை மையப்படுத்தியே ஆதிக்கத்துக்கு வரும் வழியைக் கையாண்டது.

மக்கள் சடுதியாக ஒரு பொறிக்குள் சிக்குண்ட நிலைக்கு உள்ளாகினர். இக்கட்டத்தில் கருத்துத் தெரிவிப்பது, உண்மையைக் கதைப்பது, மாற்று வழிகளைத் தேடுவது, நடந்து வந்த வரலாற்றை ஆராய்ந்து பார்ப்பது என்ற எதையுமே செய்ய முடியாத சூழல் சமூகத்தில் உருவாகியிருந்தது.

இந்நிலையில், இராணுவம் முன்னேறியாழ். நகரை கைப்பற்ற முனைந்த வேளையில் இந்திய இலங்கை ஒப்பந்தம் நிகழ்ந்தது.

ஏதோ ஒரு வகையில் தாம் தப்பிப்பிழைத்தோம் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட்டது. அழிவுகள் தடுத்துநிறுத்தப்பட்டுபுதிய ஒரு மாற்றம் ஏற்படலாம் என்றும், அம்மாற்றம் பற்றிப் பலவாறாகச் சிந்திக்கக்கூடிய சூழலும் ஏற்பட்டது.

ஆனால் அதுவும் குழப்பப்பட்டு திரும்பவும் யுத்தம் தொடங்கப்பட்டது. இந்த யுத்தம் தொடங்கியதில் ஒரு முக்கியமான தன்மையை அவதானிக்க வேண்டியுள்ளது.

அதாவது மக்களின் உணர்வுகளோடு சம்பந்தப்படாமல் யுத்தமொன்று ஆரம்பிக்கிறது. ஆனால் மக்கள் ஏதோ ஒரு வழியாக இந்த யுத்தத்தின் பின்னால் இழுத்துச் செல்லப்படுகிறார்கள். இதில் தமது விருப்பு வெறுப்புக்கள் பற்றி மக்கள் தம் கருத்துக்களை முன்வைக்க முடியாதவாறும் எவ்வித தாக்கத்தையும் செலுத்த முடியாதவாறுமாக அவர்களை மீறிய யுத்தமாக அது திரும்பத் திரும்ப முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

அக்கட்டத்தில்தான் நாம் அப்போது வடிவம் பெற்ற புதியதொரு புலப்பாட்டைக் கவனிக்க வேண்டியவர்களானோம். மக்களை இரு புறத்திலும் அச்சுறுத்தும் அதாவது இலங்கை அரசு தமிழ் மக்கள் மீது செலுத்திய பயங்கரம் வெளிப் பயங்கரமாக இதுவரை இருந்துவர, தமிழ் சமூகத்தின் உள்ளிருந்து வளர்ந்து வந்த பயங்கரவாதம் உட்பயங்கரவாதமாக உருவெடுத்திருந்தது.

அரசின் பயங்கரத்தை மக்கள் எதிர்கொண்டபோது, அதன் செயற்பாடு அவர்களுக்கு வெளியேதான் இருந்தது. அதற்கு எதிராக மக்கள் போராடிய போராட்டங்களில் கருத்து மற்றும் செயற்பாட்டுச் சுதந்திரத்துக்கான பல இடைவெளிகள் இருந்தன. அரசின் வெளிப் பயங்கரவாதத்தால் உடற்பயம், உயிர்ப்பயம், பாதுகாப்பின்மை போன்றவை ஏற்பட்டபோதும் ஏதோ ஒரு வகையில் தமிழ் மக்கள் சமூக ரீதியாகத் தமக்குள்ளே அந்நியோன்யமாக இணைந்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு தமக்குள் இணைந்த நிலையில் அரச பயங்கரத்திற்கு முகம் கொடுப்பதெப்படி என்று சிந்திப்பதற்கு இருந்த இடைவெளிகளை அழித்துவிட முடியவில்லை.

ஆனால் சமூகத்தின் உள்ளேயிருந்து வளர்ந்துவந்த பயங்கரவாதமும் அதன் பீதியும் சமூகத்திலே மக்களின் ஆன்மாவையே உறையச் செய்து உண்மைகளைக் கதைக்க முடியாத நிலைமை உருவாக்கியது. அவர்கள் இந்நிலையில்தான் பொய்மையில் வாழ தள்ளப்பட்டார்கள்.

அரசின் கொடுமைகளை மட்டும் எதிர்ப்பதாக இருந்த நிலையிலிருந்து மனித உரிமைகளுக்கான செயற்பாடு இவ் உட்பயங்கரவாதத்தின் செயற்பாடுகளையும் எதிர்க்க வேண்டியதாக மாற்றமடைகிறது.

நியாயாதிக்கமுள்ள அரசு ஒன்றை மட்டும்தான் மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களாகக் கண்டநிலைமைமாறிவிட்டது.

ஏனெனில் இப்போராட்டமும் அரசாட்சியொன்றைச் செலுத்துகின்ற பாங்கிலான கட்டுப்பாடுகளையும் அதிகாரத்தையும் தன் மக்கள் மீது கேள்விக்கிடமற்றவாறு செலுத்தியது, இச்செயல்பாடுகளின் பொறுப்பை தனியே அரசின்மீது சுமத்த முடியாதென்பதையும் அந்தப் பொறுப்பு, போராட்டம் என்ற பெயரில் பலமிழந்த மக்களை பகடைக்காய்களாக மாற்றிய குழுக்களையும் சார்ந்தது என்பது புலப்படும்.

முஸ்லீம் மக்களை விரட்டியது, படுகொலை செய்வது, ஆயிரக்கணக்கானவர்களை வதை முகாமுக்குள் முடக்கியது என இன்னோரன்ன செயற்பாடுகளைக் கண்டும் குரல் கொடுக்கலாயக்கற்றவர்களாகதமிழ் சிவில் சமூகம் போனதற்கு காரணம் என்ன?

இவ்வாறு அடிப்படையான எல்லா உரிமைகளும் இவ்விருவகைப் பயங்கரங்களாலும்மீறப்படுகின்றபொழுது இறுதியில் இவ்வாறான அழிவுகளுக்கு நாம் எங்கு கொணர்ந்து விடப்பட்டிருக்கிறோம்,எங்குதள்ளிச்செல்லப்படுகிறோம் என்று கேட்க வேண்டிய கட்டம் மக்களுக்கு வருகிறது.

ஆனால் அதை வெளிப்படையாகக் கேட்டு விவாதிப்பதற்கு மக்களுக்கு சூழ்நிலை இல்லை. அதே வேளை கேட்காதிருந்தால் தொடர்ச்சியாக அழிவைச் சந்தித்து வருகிறார்கள். இவ்வாறான ஒரு சிக்கலான நிலைமையில்தான் மக்களுக்கு கேள்வி கேட்கவும் சிந்திக்கவுமான இடைவெளிகளை ஏற்படுத்தி தம்மைத் தக்கவைத்துக்கொள்ள வகை செய்யவேநாம் - அரசு, இயக்கங்கள் ஆகிய இரு புறத்து நடவடிக்கைகளையும் வெளிப்படுத்தி கேள்விக்குள்ளாக்கி வருகிறோம்.

## உங்கள் அமைப்பு எப்போதிருந்து செயற்படுகிறது?

எமது செயற்பாடு 1987ல் ஆரம்பித்திருந்தாலும் 88ல்தான் அமைப்பாக நிறுவப்பட்டது. 87ல் எம்மில் சிலரால் **முறிந்த பனை** என்ற புத்தகம் எழுதப்பட்டது.

அது இந்திய அமைதிப் படையின் பிரசன்னம் இருந்தபோது நிகழ்ந்த யுத்தத்தில் மக்கள் பலஹீனமாக இருந்த நிலையில், மக்களின் கண்களினூடாக இதுவரை நிகழ்ந்த அரசியல் வரலாறு எவ்வாறு இருந்தது, விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் எம்மத்தியில் என்ன நடந்து வந்தது, இதில் இந்தியா, இலங்கை அரசு, அல்லது விடுதலை இயக்கங்களின் பங்களிப்பு என்ன என்று ஆராய்வதாகத்தான் முறிந்த பனை என்ற புத்தகம் எம்மால் எழுதப்பட்டது.

## உங்கள் வேலைத் திட்டம் என்ன?

பின்னர் 1988ம் ஆண்டு - வடக்கு கிழக்கில் இந்திய அமைதிப் படைக்கும், புலிகளுக்குமிடையிலான யுத்தத்தின் அனர்த்தங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தது.

அதேவேளை தென் பகுதியில் ஜே. வி. பி. யினது வளர்ச்சியின் காரணமாகவும் அரசாங்கம் படுமோசமான ஒடுக்கு முறையைக் கையாண்டதனாலும் பயங்கரமான மனித உரிமை மீறல்கள் நடந்து கொண்டிருந்தன. அந்தக் கட்டத்தில் பலர் - குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் நூற்றுக்கணக்கில் காணாமல் போகும் நிகழ்வுகள் தென் பகுதியில் நடந்து கொண்டிருந்தன.

இந்நிலையில் பொதுவான பிரச்சினையில் **பல்கலைக்கழக ஆசிரியர்கள்** என்ற ஒரு அமைப்பு இலங்கை முழுவதற்கும் பொதுவானதாக ஆக்கப்பட்டது. அதனுடைய கிளையாகத்தான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் **மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் - யாழ்.** என்ற அடிப்படையில் நாங்கள் செயற்பட ஆரம்பித்தோம்.

பலர் வெளிப்படையாகவே அங்கத்தவர்களாகச்செயற்பட்டனர். மனித மாண்பை மீறுகின்ற எந்த நடவடிக்கைகளையும்ஆராய்ந்துஎமது அறிக்கைகளை வெளியிட்டு வருகிறோம்.

எமக்குக் குறிப்பாக பாரம்பரிய வழக்கில் கருதப்படும் வேலைத்திட்டம் என்று எதுவும் கிடையாது.

குறிப்பான அரசியல் சூழ்நிலையின் நெருக்குவாரத்திற்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தால் உருவாகிய செயற்பாடே எங்கள் செயற்பாடாகும்.

மக்கள் கதைக்க முடியாமல் எதிர்காலத்தைச் சிந்திக்க விவாதிக்க இடைவெளியில்லாமல் இருக்கும் இவ்வாறான ஒரு இக்கட்டான சூழ்நிலையில் சமூகப் பொறுப்புணர்வு உள்ளவர்கள் எப்படிச் செயற்படுவது என்ற ஒரு கேள்வி எழுகிறது.

ஒரு தனி நபர் இரண்டு விதமான முடிவை எடுக்கலாம். ஒன்று அந்த சூழ்நிலையின் யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகமௌனமாகஇருந்து தங்கள் தனிப்பட்ட நலன்களை மட்டும் பேணிக்கொண்டு வாழ்வது.

மற்றையது, அதற்கு எதிரான தனது கருத்தை வைத்து சமூகத்தில் அந்த உணர்வைக் கொண்டு வரப் பண்ணி அந்த அழிவைத் தடுத்து நிறுத்துவது. இந்த இரண்டாவது விஷயம் ஆபத்தானது.

ஆனால் முதலாவது விஷயத்திலும் தனி நபர்களாகத் தப்பி வாழலாமென்ற மாயை இருந்தாலும் மொத்த சமூகமும் அழிவைச் சந்திப்பதைத் தடுத்து நிறுத்த இயலாத போது அவ்வழிவுக்குள் அவர்களும் உள்ளாக வேண்டியிருக்கும் என்ற உண்மையை அவர்கள் உணரத்தான் வேண்டும். (1995 யாழ். இடம் பெயர்வு இதனைப் பலருக்கு உணர்த்தியது) இந்நிலையில்தான் நாம் இரண்டாவது வழியைச் சரியானதெனத் தேர்ந்தெடுத்துச் செயற்படுகிறோம்.

## மனித உரிமை மீறல்களைப் பதிவுசெய்து வெளிப்படுத்துவது மட்டும்தான் உங்கள் அமைப்பின் செயற்பாடா?

நாம் மனித உரிமை மீறல்களை இவ்வாறு பதிவு செய்து வெளிப்படுத்துவதினூடாக இன்றைய இக்கட்டான சூழலில் சில பாதிப்புகளை ஏற்படுத்த விரும்புகின்றோம்.

இவ்வாறான விடயங்களை கதைக்க முடியாது, கதைக்கக் கூடாது, கதைத்தால் ஆபத்து என்ற ஒரு கட்டம் வந்துவிட்டது.

மாறாக நாங்களும் ஆரோக்கியமான வழியில் போராடலாம். எங்களது எதிர்ப்புணர்வை வெளிக்கொணரலாம் என்று உணர்த்துவது ஒரு நோக்கம்.

இரண்டாவதாக இந்த ஆவணப்படுத்தலின் உள்ளடக்கத்தை எடுத்துப் பார்த்தீர்களானால் நாங்கள் பல அம்சங்களைத் தொட விரும்புவதைக் காணலாம். ஏனெனில் யுத்தத்தின் காரணமாக மக்கள் மனிதாம்சத்தை இழந்த ஒரு சமூகமாக்கப்பட்டுள்ளார்கள். அதாவது கொலை செய்யப்படும் மனிதர்களுடைய எண்ணிக்கை வெறும் எண்களாகிப் போய் இருந்தன. நாளாந்தம் எல்லா இடங்களிலும் கொலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மக்கள் அதற்கு ஏற்றவாறு பழகிக் கொண்டு விட்டார்கள்.

**இக்கொலைகள் பற்றிய உணர்வு, இக்கொலைகளது பின்னணி என்ன, இதை எவ்வாறு தடுத்து நிறுத்தலாம், இவைதேவைதானா என்றஎதையுமே கேட்காமல் இதுதான் சாதாரண வாழ்க்கை, இதைவிட வேறு வழி இல்லை என்ற அடிப்படையில் மக்கள் போய்க்கொண்டிருக்கிற சூழல் ஏற்பட்டுள்ளது.**

இதன் விபரீதமான ஒரு கட்டமாக, சர்வதேச ரீதியில் எங்கள் போராட்டத்தைப் பிரசாரப்படுத்துவதற்கு ஏதுவாகக் கூட எங்கள் மக்கள் மத்தியிலே கூடுதலான அழிவுநிகழ வேண்டுமென்ற விருப்பு எமக்குத் தெரியாமலே, எம்மை இட்டுச் செல்லுகின்ற அளவுக்கு நிலைமை மிகக் கேவலமாகியுள்ளது.

கூடுதலான அழிவு நடந்தால் அது கூடுதலான பிரசாரத்துக்கு உதவுமென வெறும் பிரசாரத்துக்காகவே அழிவுகளை விரும்புகின்ற மனவிருப்பு போராட்ட இயக்கங்கள் மத்தியிலும் உருவாகியுள்ள நிலை அருவருக்கத்தக்கதாகும்.

அவ்வாறு அழிவுகளுக்காக எதிரியைத் தூண்டும் நோக்கிலான இராணுவ நடவடிக்கைகளும் இயக்கங்களால் குறிப்பாக விடுதலைப் புலிகளால் எடுக்கப்பட்டு வருகின்றன.

**ஆயுதப் போராட்டத்தில் அழிவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது என்பது ஒரு விடயம். ஆனால் அழிவுகள் கட்டாயம் ஏற்பட வேண்டும், எவ்வளவு அழிவுகள் ஏற்படுகிறதோ அவ்வளவுக்கு நல்லதென உணர்வு ரீதியாக அழிவுகளை வேண்டி போராட்டத்தை நடத்துவது மற்றொரு விடயம்.** இது எங்களுடைய போராட்டத்தில் பிரதான அம்சமாக உள்ளது. இந்த மக்களுக்கு இதுதான் சரி என்றஒருவிதமானவெறுப்புணர்வுடன் இந்த மக்கள் விடுதலை பெறுவதற்குலாயக்கானவர்களல்ல, ஆனால் நாங்கள்தான் இவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்கப் போகிறோம். அதனால் இவர்களை இப்படி நடத்தினால்தான் விடுதலை அடையலாம் என்ற ஒரு உணர்வுதான் இங்கிருக்கிறது.

யார் இதை கூடுதலாக செய்தார்களோ அவர்கள்தான் தலைமைக்கு வருகிறார்கள்.

எனவே மக்களின் விடுதலை என்பது தலைமைக்கு, அதிகாரத்திற்கு வருவதுடன் சம்பந்தப்படுகிறது. இதனால் எம் அறிக்கையின் உள்ளடக்கத்தில் ஒரு தனிப்பட்ட கொலை நடந்தால் கூட கொலையுண்ட அந்தத் தனி நபருடைய பின்னணி என்ன, அவர் ஏன் கொலை செய்யப்பட்டார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கொலைக்குப் பின்னாலிருந்த சமூகக் காரணமென்ன, அவரது குடும்ப நிலவரமென்ன என்று அவரைத் தனி நபராக மட்டும் கணிக்காமல் அவரைச் சுற்றியிருந்த சமூக உறவுகளையும் வெளிக்கொணரும் ஒரு அடிப்படையாக உள்ளது.

இந்த அழிவுகளை நாம் வெறும் கறுப்பும் வெள்ளையுமாகப் பார்க்காமல் இந்த அழிவுகளுக்குப் பின்னால் அவை சமூகத்தில் என்ன தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. குணாம்ச ரீதியாக சமூகம் எந்தளவு மனிதாம்சத்தை இழந்து கொண்டு வருகிறது. எவ்வளவு தூரத்துக்கு விடுதலைஎன்றபெயரைவெளியேசொல்லிக் கொண்டு சமூகம் பின்னால் போய்க் கொண்டிருக்கிறது போன்ற விடயங்களைக் கொணர்வதும் எமது அறிக்கைகளின் மற்றொரு அம்சமாக இருக்கிறது.

**நீங்கள் யாழ்ப்பாணத்திலும் இல்லை, யாழ். பல்கலைக்கழகத்திலும் இல்லை. எப்படி யாழ். பல்கலைக் கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி மனித உரிமைக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்று சொல்லிக் கொள்ள முடியும்?**

***மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்ற அமைப்பு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டு பல்கலைக் கழக ஆசிரியர்களது அங்கத்துவத்துடன்தான் 1988 முதல் 1989 வரை இயங்கிக் கொண்டிருந்தது.***

ஆனால் எமது மூன்றாவது அறிக்கை வெளியிடப்பட முன்னர் எமது முக்கிய உறுப்பினரான கலாநிதி ராஜினி திரணகம கொலை செய்யப்பட்டார்.

அக் கொலையால் விடுக்கப்பட்ட ஒரேயொரு செய்தி என்னவென்றால், இவ்வாறான செயற்பாடுகள் சமூகத்தில் நடைபெற முடியாது என்பதேயாகும்.

ஆனால் நாங்கள் ஆரம்பித்ததன் நோக்கமே இவ்வாறான இடைவெளிகளை உருவாக்குவதற்காகத்தான். அதை மூடுவதற்கான கொலை இது. ஆகவே, நாங்களும் அதே வழியில் ஆரம்பித்த பணியை மூடிவிடுவதன் மூலம் எமது சமூகம் அழிவுக்குப் போவதற்கு உடந்தையாக இருப்பதா என்ற கேள்வியை எதிர்நோக்கினோம். அதனால் நாம் தொடர்ந்து செயற்பட தீர்மானித்து அங்கிருந்து செயற்பட்டோம்.

தொடர்ந்தும் 1990ம் ஆண்டுவரை அங்கிருந்து எமது அறிக்கைகள் வெளிவந்தன. மீண்டும் இலங்கை அரசுடன் யுத்தம் தொடங்கிவிட்டது. செப்டெம்பர் மாதமளவில் எம்மில் முக்கியமான ஒருவருக்கு ஆயுத அச்சுறுத்தலால் உயிராபத்து ஏற்படக்கூடிய நிலையில் அவர் அங்கிருந்து தப்பி தென் பகுதிக்கு வர நேர்ந்தது. அதனால் நாம் தென் பகுதியிலிருந்து செயலாற்ற வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

அப்போதும் நாம் பல்கலைக்கழக ஆசிரியர் பதவியிலிருந்து நீக்கப்படவில்லை. எமக்குப் பிரத்தியேகமான பிரச்சினைகள் இருப்பதன் காரணமாக எம்மை வேலை நீக்கம் செய்யவில்லை.

இதே போல் முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்திலிருந்து விரப்பட்ட பின் அங்கு விரிவுரையாளராக இருந்து வெளியேற நேர்ந்த கலாநிதி நுஹ்மானுக்கும் வேலை நீக்கம் அறிவிக்கப்படவில்லை. அத்தோடு யாழ் பல்கலைக்கழகத்தில் பயின்ற முஸ்லிம் மாணவர்களுக்கும், அவர்கள் வெளியேற்றப்பட்ட நிலையில் மாணவர் உறுப்புரிமையை நீக்கவில்லை.

**மிகவும் உறுதியான இறுமாப்புடன் அல்லது வெற்றிக் களிப்புடன் ஆயிரக்கணக்கான மனித உயிர்களை 'தூரே தெரியும் ஒளிமயமான எதிர்கால வாழ்விற்காக' எனக்கூறி மரணத்திற்குள் தள்ளும் அரசியல் தலைவனின் செய்கை மிகவும் வெறுக்கத்தக்கது. அதேபோல் பயங்கரவாதத்தினை மக்கள் மீது ஏவிவிடுவதை சகித்துக் கொள்ளும், மெதுவான மாற்றங்களின் மகிமை பற்றி அதிகமாகப் பேசிக் கொள்ளும் மிதவாதிகளும் வெறுக்கத்தக்கவர்களே.**
**மிகவும் கேவலமான முறையில், திட மனப்பாங்குடன் தமது நடவடிக்கைகளை புனித கைங்கரியமாகப் பிரகடனப்படுத்தும் தன்மை குறுகிய மனப்பான்மையினால் வெறிகொண்ட குழுவிற்கு மாத்திரம் உரித்தான இயல்பொன்றல்ல. விளைவுகள் எவ்வாறு இருக்கும் எனத் தெளிவாகத் தெரிந்த ஓர் வெளிப்படையான சூழ்நிலையிலும் நாம் அதற்காக எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதும் இறுதியில் மிகவும் அவலமான முடிவுகளையே கொண்டுவரும்.**
*- பரிங்டன் மூர்*

எனவே தென் பகுதியில் இருந்தபோதும் நாம் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் பதவி வகித்து வந்தோம்.

7ம் அறிக்கை வரை வெளிவந்திருந்தது. ஆனால் 91ஆம் ஆண்டு ஏதோ சில நெருக்குதல்களின் காரணமாகயாழ்.பல்கலைக்கழககவுன்சில் எம்மை பல்கலைக்கழகத்திலிருந்து நீங்கியவர்களாக அறிவித்தது. அதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

ஏனெனில் முன்னர் எமக்குப் பிரச்சினை இருக்கிறதென்று கூறிய அவர்கள் இப்போது அது நீங்கிவிட்டதாகத் தெரிவித்து நடந்துகொண்டதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. நாம் வேலையை விட்டு விலகியவர்களாக கருதவில்லை.

அம்முடிவுக்கு எதிராக நாம் சட்டபூர்வமாக நடவடிக்கை எடுத்திருக்கலாமாயினும் நாம் அம்மார்க்கத்தை விரும்பவில்லை.

ஆனாலும் இலங்கை பல்கலைக் கழக ஆசிரியர்கள் சம்மேளனம் இதற்குஎதிராக,யாழ்.பல்கலைக்கழகக் கவுன்சிலின் முடிவு பிழையென பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது. அதற்கான ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு இருக்கிறது. அது இன்னும் தனது அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை.

நாங்கள் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து தனிப்பட்ட நோக்கத்தில் வெளியேறவுமில்லை. உயிராபத்து ஏற்பட்டதால்தான்வெளியேறினாலும் இச்செயற்பாட்டை தொடர்ச்சியாக செய்கிறோம்.

இவ்வகையான செயற்பாடுகளையும் இல்லாமல் செய்வதால் சமூகத்தின் எல்லாக் கதவுகளையும் அடைக்கின்ற முயற்சிக்கு இடங்கொடுத்தலாகாது என்ற காரணத்திற்காகவே அதே பெயரில் தொடர்ந்து இயங்குகின்றோம். அதற்கு உரித்துடையவர்களாகவும் கருதுகின்றோம்.

எமது நிலைப்பாட்டைப் புரிந்து கொள்வதில்சர்வதேசமனிதஉரிமை ஸ்தாபனங்களுக்கு எந்தவித குழப்பமுமில்லை.

ஓர் ஆயுதப் போராட்டத்தில் தாக்குதல்களும் கொலைகளும் கைதுகளும் சித்திரவதைகளும் பல்வேறு கெடுபிடிச் சட்டங்களும் நிகழ்வது எதிர்பார்க்கப்படக்கூடிய ஒன்றுதான். ஆனால் இந் நிலைமையில் மனித உரிமைகள் செல்லுபடியற்றவையென்றோ, பேணப்பட முடியாதவை, பேணப்படக் கூடாதவை என்றோ பொருள்கொள்ளலாகாது. மாறாக இம் மனித உரிமைகளை வென்றெடுப்பதற்கும், நிலைநாட்டுவதற்குமே இப் போராட்டங்களை முன்னெடுக்கும் சக்திகள் அக்கறைகாட்ட வேண்டும். மனித மாண்பை மதிப்பதாகவே போராட்டங்கள் இருக்க வேண்டும்.

ஆகவே போராட்டங்கள் நடக்கின்ற காலத்தில் மக்களுக்கு தங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஏதோ சில இடைவெளிகளை தொடர்ச்சியாகக் கொடுத்துக் கொண்டு இருக்க வேண்டும். அப்படியானால் தொல்லைகள் ஒன்றுமே நடக்காதென்பதல்ல, நடந்தால் அவற்றைக் கண்டிப்பதற்கான, அவ்வாறான நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்துவதற்கான உரிமைகள் மக்களுக்கு இருக்க வேண்டும்.

சில கட்டங்களில் சில நடவடிக்கைகளை மக்கள் சரியென்று கருதலாம், - அது வேறு விடயம். ஆனால் முக்கியமானது என்னவென்றால் எக்கட்டத்திலும் அவர்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான உரிமை அவர்களுக்கு இருக்க வேண்டும்.

அப்படி மக்கள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான இடமிருக்குமென்றால் காலப்போக்கில் போராட்டங்கள் தவறாகச் செல்லும்போது அவற்றைத் திருத்தியமைக்க முடியுமாக இருக்கும்.

ஆதலால் போராட்டங்களை நிகழ்த்துகின்ற சக்திகளின் மனநிலையில் தங்கியிருக்காமல் புறநிலையாக சமூகத்தில் இந்த மனித மாண்புபற்றியும் மனித உரிமைகள் பற்றியுமான உணர்வு நிலைபெற்று இருக்கச் செய்வதற்கான இடைவெளி இருக்க வேண்டுமென்பது அடிப்படையான விடயமாகும்.

எமது போராட்டத்தில் ஆரம்பத்தில் இந்த அம்சம் ஓரளவு காணப்பட்டது. ஒரு இயக்கம் தவறு செய்தால் மற்ற இயக்கம் கண்டிக்கவோ, மக்கள் ஏதோ ஒரு வகையில் தம் எதிர்ப்புணர்வைக் காட்டவோ, அவ் எதிர்ப்பை ஓரளவுக்கேனும் பொருட்டாக மதித்து இயக்கங்கள் தம் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி திருத்திக் கொள்ளவோ வாய்ப்பு இருந்தது. ஆனால் அதற்கு அப்பால் தாண்டிச் சென்று இவை யாவும் அற்றுப்போன இன்றைய நிலைமை எப்படி ஏற்பட்டது என்பதைத்தான் நாம் திரும்பிப் பார்க்க வேண்டி இருக்கிறது.

**ஒரு போரா்ட்டத்தில் எதிரிகளை, துரோகிகளை அழிக்கும் செயற்பாட்டில் மனித உரிமைகள் செல்லுபடியாகுமா?**

ஒரு அமைப்பு தனது கோட்பாட்டை அடைவதற்காக மக்களைப் பீதிக்குட்படுத்தும்போது அது பயங்கரவாதமாக மாறுகிறது. அரசைப் பயமுறுத்துவது என்பது ஒரு நிலை. சமூகத்தைப் பயமுறுத்துவது என்பது அதன் அடுத்த நிலை. இறுதியில் தன் சொந்த சமூகத்தையே பயமுறுத்துவது என்பது இறுதி நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி அதன் வட்டங்களை விஸ்தரித்து மக்களையும் தன் பிடிக்கு உள்ளாக்கும்போதுதான் பயங்கரவாதம் என்பதன் அர்த்தம் கூடுதலாக உணரப்படும்.

ஆகவே இந்த ஆயுதப் போராட்டங்களைப் பற்றிக் கதைக்கின்ற போது இவ்வாறான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் என்ன என்பதில் நாம் அக்கறை செலுத்துவது அவசியமாகும். இவற்றுக்கான சர்வதேசப் படிப்பினைகள் எமக்கு ஏற்கெனவே உள்ளது.

இப்படி இருக்கையில் எங்களது குரலானது இக் கணிப்பீடுகளை மாற்றுமுகமாகவே சர்வதேச ரீதியில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இப் போராட்டத்தில் தொனிக்கும் சில அபாயகரமான போக்குகளை, மொத்த மக்களுடைய எண்ணப்பாங்காகப் பொருள்கொள்ளக் கூடாதென வலியுறுத்துவதாகவே எமது செயற்பாடு அங்கு அமைந்துள்ளது.

## இப்படியான உங்கள் செயற்பாடு தமிழர் போராட்டத்தை சர்வதேச மட்டத்தில் காட்டிக் கொடுப்பதாக அமையவில்லையா?

தாமே கண்ணை மூடிக்கொண்டு உலகம் இருட்டாக இருக்கிறது என்று நினைப்பவர்களுக்குத்தான், போராட்டத்தில் மனித உரிமைகளுக்காக குரலெழுப்புவது சர்வதேச மட்டத்தில் போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பதாகத் தோன்றும்.

உலகெங்கும் இருப்பவர்களுக்கு இந்தப் போராட்டத்தில் என்ன நடந்துகொண்டிருக்கின்றதென்பது நன்றாகத் தெரியும். ஒரு சில மட்டங்களில் இது உரிமைகளைப் பெறுவதற்குக்கூட அருகதையற்ற சமூகமென வெளிநாட்டு ஆய்வாளர்கள் மதிப்பிடும் அளவுக்கு நிலைமை போய்க் கொண்டிருக்கிறது.

> விடுதலைப் போராட்டத்திலே பொய்கள் மூலம் மக்களையும் உலகையும் ஏமாற்றி வெற்றி பெற்று விடலாம் என்று யாரும் நம்ப முடியாது. அவ்வாறான "வெற்றி" விடுதலைக்கு அத்திவாரமிடாது ஒரு "பாசிச ஆட்சிக்கே" அத்திவாரமிடும். எம்மைப் பொறுத்தளவில் விடுதலை எனும் பெயரில் பாசிச அரசியலுக்கு உறுதுணை செய்வதே நாம் செய்யும் துரோகமாகும்.

போராட்டங்களை நாங்கள் நினைப்பது போல்தான் உலகம் பார்க்க வேண்டுமென்று இல்லை. உலகில் பல்வேறு அனுபவங்கள் இருக்கின்றன. அதோடுபோராட்டத்தின் வெற்றி தோல்வி பல்வேறு விடயங்களில் தங்கியுள்ளது. ஆகவே உண்மைகளைக் கதைப்பது எங்கள் போராட்டத்தைப் பலஹீனப்படுத்துமென்று கருதினால் அது உண்மையில் ஒரு ஆரோக்கியமான போராட்டமேயல்ல. பொய்களைக் கதைப்பதுதான் எங்களைப் பலஹீனப் படுத்தும் என்பதே ஒரு போராட்டத்தின் அடிப்படைக் கோட்பாடாக இருத்தல் வேண்டும். பொய்களைக் கதைப்பது எம்மைப் பலபடுத்தும் என்று எண்ணினால் அதுவே ஒரு பொய்யான கற்பனை தான். அதை ஒரு திருட்டுக் குழு அல்லது மா·பியா குழு வைத்திருப்பவர்களே செய்வார்களேயொழிய, விடுதலைப் போராட்டத்திலே பொய்கள் மூலம் மக்களையும் உலகையும் ஏமாற்றி வெற்றி பெற்றுவிடலாம் என்று யாரும் நம்ப முடியாது. அவ்வாறான ''வெற்றி'' விடுதலைக்கு அத்திவாரமிடாதுஒரு''பாசிசஆட்சிக்கே'' அத்திவாரமிடும்.

எம்மைப் பொறுத்தளவில் விடுதலை எனும் பெயரில் பாசிச அரசியலுக்கு உறுதுணை செய்வதே நாம் செய்யும் துரோகமாகும்.

## நீங்கள் அரசாங்கத்தை அதிகம் கண்டிப்பதில்லையாமே?

எங்கள் அறிக்கைகளை அதிகம் வாசிக்காதவர்களே எம்மைக் குறை கூறுகின்றனர். அவற்றை வாசித்தால் நாம் எவ்வளவுதூரம் அரசாங்கத்தின் தவறுகளை வெளிக் கொணர்ந்து விமர்சித்துள்ளோமென்பது புரியும். ஆனால் எமது அறிக்கைகள் அதிகம் ஆங்கிலத்தில் வெளிவருவதால் சாதாரண தமிழ் மக்களுக்கு அதன் விடயங்களை நேரடியாக வாசித்து அறிய முடிவதில்லை என்பதனை ஏற்றுக்கொள்கிறோம்.

தமிழில் மொழிபெயர்ப்புச் செய்து வெளியிடப்பட்ட எமது ஆவணங்கள் கூட பரந்துபட்ட தமிழ் மக்களிடம் சென்றடைவதில் பலதடைகள் காணப்படுகின்றன.

தமிழ்ப்பத்திரிகைகளின் சுயதணிக்கை ஒருபுறம். அதனால் எமக்கு எதிராக ஒருசிலர் வேண்டுமென்றே சொல்லும் இவ்வாறான கூற்றுக்களை வெறும் கூற்றுக்களாக மட்டுமே மக்கள் கேட்கக்கூடியதாக இருக்கிறதேயன்றி உண்மையில் அப்படியாவென சீர்தூக்கிப் பார்க்க அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுவதில்லை.

அப்படி எமது அறிக்கைகளை முழுமையாகப் படித்துவிட்டு அதில் என்ன குறை உள்ளதென யாரும் குறிப்பாகச் சுட்டிக்காட்ட முன்வந்தால் அது ஆரோக்கியமானதாக இருக்கும். இப்படி பொதுப்படையாக குற்றஞ்சாட்டுவது அர்த்தமற்றது.

இதேவேளை இன்னொரு உண்மை என்னவென்றால் அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களைப் பற்றி நாம் மட்டுமன்றி பல ஸ்தாபனங்கள் இலங்கை முழுவதும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

ஆனால் மறுபுறம் இந்தப் போராட்டத்தின் காரணமாக தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள பயங்கரமான சூழலில் அதன் போக்குகளையும் மனித உரிமை மீறல்களையும் பற்றி ஆராயும் பொறுப்பை ஏற்க சுயாதீனமான எந்த அமைப்போ நபர்களோ தமிழ் மக்கள் மத்தியிலிருந்து முன்வரத் தயாராக இல்லை.

ஆகவே நாம் மட்டுமே சொற்ப அளவிலாவது இவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு முனையும்போது அதையும் தடுத்து நிறுத்தி மௌனித்துவிடச் செய்ய முனையும் சக்திகள் எம்மை அரசாங்கத்தோடு அடையாளப்படுத்தி அந்நியப்படுத்தவே தம்மால் இயன்றவரை முயல்வார்களென்பது தெரிந்த விடயமே.

விரும்பியோ விரும்பாமலோ நாம் ஒரு உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அது என்னவெனில் இந்தப் போராட்டத்தின் வளர்ச்சியை நாம் பார்த்தோமானால் அதன் ஆரம்ப காலகட்டங்கள் போலல்லாமல், அரசாங்கத்தின் மீது மட்டுமே தொடர்ச்சியாகப் பழியைப் போட்டுக்கொண்டு பிரச்சினைகளை ஒருபக்கமாக மட்டுமே பார்க்கிற நிலையில் இன்று இந்தப் போராட்டம் இல்லை.

இங்கு மட்டுமல்ல சர்வதேச ரீதியிலேயே ஆயுதக் குழுக்களின் மனித உரிமை மீறல்களை எவ்வாறு கையாளுவது என்பதில் இப்போது பாரிய கவனம் திரும்பியுள்ளது. அதுபற்றி நீண்ட விவாதங்கள் சர்வதேச மட்டத்தில் நடந்து வருகின்றன.

அத்தோடு நாம் அரசாங்கத்தை மட்டுமே பார்க்காது தென்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டு வருகின்ற எந்தவொரு ஆரோக்கியமான மாற்றத்தையும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

அத்தகைய ஆரோக்கியமான அம்சங்களை அங்கு மேலும் வளர்த்துச் செல்வதற்கு உறுதுணையான வகையிலும் எமது அரசியல், சமூக செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்பது தமிழ் மக்களின் நலனில் அக்கறை செலுத்துவோர் கருத்திலெடுக்க வேண்டிய முக்கியமான விடயம்.

## தினமுரசு பத்திரிகை ராஜினி திரணகமவின் கொலையை ஈ.பி.ஆர்.எல்.எப். தான் செய்ததாகக் கூறுகிறதே?

ராஜினி திரணகமவின் கொலை நடந்த காலகட்டத்தில் நாம் பல முனைகளில் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியிருந்தோம். அப்போது நாம் **'முறிந்த பனை'** என்ற நூலை எழுதி முடித்திருந்தோம். இந்திய அமைதிப்படை, இலங்கை அரசு, தமிழ் இயக்கங்களின் நடவடிக்கைகள் யாவற்றையும் அதில் விமர்சனத்துக்கு உள்ளாக்கியிருந்தோம்.

இதையறிந்து இந்திய அமைதிப் படையினர் எம்மைப் பிரச்சினைப்படுத்திக்கொண்டும் இருந்தனர். அதனால் ராஜினியின் கொலை நிகழ்ந்தபோது இது யாரால் செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் பலருக்கும் இருந்தது.

ஆனால் அக் கொலை நடந்து மிகச் சில நாட்களுக்குள்ளேயே அதைச் செய்தது புலிகள்தான் என்பதற்குரிய ஆதாரங்கள் சில மாணவர்களால் எமக்குத் தரப்பட்டன.

காலப்போக்கில் அந்தக் கொலையில் செயற்பட்ட நபர்கள் பற்றிய மேலதிகதகவல்கள்-அவர்கள்எங்கு கூடினார்கள், எங்கிருந்து செயற்பட்டார்கள், அவர்கள் திட்டமிட்ட இடங்கள் போன்ற விடயங்கள் எமக்கு ஆதாரபூர்வமாகக் கிடைத்துள்ளன.

அதனால்தான் இக் கொலைக்கு புலிகள்தான் காரணமென ஆணித்தரமாகச் சொல்கிறோம். அத் தகவல்களை நாம் வெளியிட விரும்பவில்லை. ஆனால் சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்களுக்கு சமர்ப்பித்துள்ளோம். அதனால் அப் பத்திரிகை வெளியிட்ட கருத்து தவறு என்பதே எங்கள் பதிலாகும்.

அக்காலத்தில் ஏனைய சக்திகளுக்கும் எம்மீது கோபதாபங்கள் இருந்ததால், எம்மீது நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களில் எவரும் திட்டமிட்டிருக்கக் கூடும். அவை இவ்வாறான வேறு ஊகங்களை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் அதை யார் செய்தார்களென்பது எமக்கு நிச்சயமாகத் தெரியும்.

**தொகுப்பு : எஸ். மனோரஞ்சன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேநீர் ஒரு மருந்து

தேநீர் குடித்தால் பல வகையான மருந்துகள் பாவிக்கத் தேவையில்லையென முதியவர்கள் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். தற்பொழுது இந்தக் கதைகளில் உண்மை இருப்பதாக விஞ்ஞானிகளும் கூறுகின்றனர்.

சுவீடன் விஞ்ஞானிகள் சிலர் தேநீரில் புற்றுநோயைத் தடுப்பதற்கான சக்தி இருப்பதாகக் கூறியுள்ளனர். ஆனால் அது கறுப்புத் தேயிலையில் அல்ல, பச்சைத் தேயிலையில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

பச்சைத் தேயிலையிலுள்ள விசேட இரசாயனப் பதார்த்தமொன்று புதிய இரத்தக் கலங்கள் உருவாவதைத் தடுக்கும். இம்முறையைப் பின்பற்றி புற்றுநோய் உருவாகியிருக்கும் அங்கத்தில் கலங்கள் உருவாவதைத் தடுத்து புற்றுநோய்க் கலங்களைக் கொல்லும் முறை தற்போது மேற்கொள்ளப்படுகிறது. அது மட்டுமன்றி சுவீடன் விஞ்ஞானிகள் இன்னுமொன்றையும் கூறியுள்ளார்கள். அது பச்சைத் தேயிலை நீரிழிவு நோயின் தாக்கத்தைக் குறைக்கவும் உதவுகிறதாம்.

அப்படியாயின் நாம் தேநீர்ப் பிரியர்களாக வேண்டும். குறைந்தது ஒரு நாளைக்கு மூன்று முறையாவது பருக வேண்டும்.

ஆனால் எமது நாட்டில் பச்சைத் தேயிலை கிடைப்பது அபூர்வம்.

ஒன்றை நினைவில் வைத்திருக்க வேண்டும். காயமேற்பட்டவர்களும், கர்ப்பிணித் தாய்மார்களும் தேநீர் அருந்தாமலிருப்பது நல்லது. ஏனெனில் இவர்களுக்கு புதிய இரத்தக் கலங்கள் உருவாக வேண்டும்.

# தேர்தல் வெற்றி...



ஐக்கிய அமெரிக்காவின் பிரபல ஜனாதிபதிகளுள் ஒருவரான ஜோன் எ∴ப் கென்னடி ஒருமுறை தேர்தல் வேலைகளைக் கவனிப்பதற்காக அமெரிக்காவிலுள்ள பொஸ்டன் நகரம் நோக்கி தனக்கு நெருக்கமானவர்கள் சிலருடன் காரில் சென்று கொண்டிருந்தார்.

இப்படிச் சென்றுகொண்டிருந்த பொழுது ஒரு வயோதிபப் பெண் பாதையைக் கடக்க முயற்சிப்பதைக் கண்ட கென்னடி உடனடியாக காரை நிறுத்துமாறு கூறினார்.

காரிலிருந்து இறங்கிச் சென்ற கென்னடி அந்த வயோதிபப் பெண்ணிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, மூதாட்டியை பாதையின் மறுபுறத்துக்கு கூட்டிச் சென்று விட்டுவிட்டு வந்தார்.

இதைக் கண்ட அவருடன் சென்றவர்கள் "எல்லா வாக்குகளையும் அள்ளி எடுக்கப் போகிறீர்களாக்கும்" என்று கேலியாகக் கேட்டனர்.

அதற்கு கென்னடி, "இல்லை... தற்செயலாக பொஸ்டன் நகரில் நான் ஒரு வாக்கால் தோற்றுவிட்டால் அந்த வயோதிபப் பெண்ணுக்கு உதவி செய்ய முடியாமல் போனதையிட்டு வருத்தப்பட நேரிடுமே என்றுதான் அவ்வாறு செய்தேன் என்றார். நம் நாட்டுத் தலைவர்களின் கதி?......




## பேசும் வீதி விளக்கு

போக்குவரத்து மிகுதியாகவுள்ள வீதிகளில் மறுபக்கம் கடப்பதென்பது இலகுவான காரியமல்ல. உயிருக்கே ஆபத்து நேரலாம். வீதி விளக்குகளைப் பார்க்காமலே ஓடிச்செல்ல முனைபவர்களுக்காக பேசும் விளக்குகள் இப்போது தயாரிக்கப்பட்டுவிட்டன.

ஆம். இங்கிலாந்திலுள்ள ரிச்மண்ட் என்ற நகரத்தில் இந்த பேசும் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

சிவப்பு விளக்கு எரியும் போது "நில் இப்போது சாலையைக் கடக்க முடியாது" என்ற குரல் (ஆங்கிலத்தில்) கேட்கும்.


அது அணைந்து பச்சை விளக்கு எரியும்போது "வலப் பக்கம் பார், அடுத்து இடப்பக்கம் நோக்கு - இன்னுமொரு முறை வலப்பக்கம் கவனி" என்ற குரல் எச்சரிக்கிறதாம்.

பிறகு சற்று நேரம் கழித்து "சரி இப்போது போகலாம்" என்று அந்தக் குரல் கட்டளையிடுகிறது.


ஒளியையும் ஒலியையும் ஒரு பக்குவமான நிலையில் இணைத்து இந்த வித்தையைச் சாதித்திருக்கிறார்கள்.

இங்கிலாந்திலும் தலையில் குட்டிச் சொன்னால்தான் கேட்பார்கள் போலும்.


அதுசரி, நம் நாட்டில் பேசும் விளக்குகளை பொருத்தினால் பெண் குரல்களைப் போட்டால் தான் கேட்போமாக்கும்.



**இதயம் வலுவாக இருந்தால் ஒரு சுண்டெலியால் யானையைக்கூடத் தூக்கமுடியும்.**
**– தீபெத் பழமொழி**




**ஒருவர் சிலுவையில் அறையப்படுவதில்லை, தன்னைத் தானே சிலுவையில் அறைந்து கொள்கிறார்.**
**– பல்கேரியன் பழமொழி**



**ஒரு கோழை எப்போதும் தன்னைப் பின் தொடரும் ஒருவனை வைத்திருக்கிறான்.**
**– ஸ்காட்டிஷ் பழமொழி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### விழுதல்

பூ விழுகிறது
மரத்திற்கு எருவாக...

ஆதவன் மறைகிறது
அம்புலிக்கு ஒளி கொடுக்க

நா வளைகிறது
உணவை உட்தள்ள...

மழை வருகிறது
மீண்டும் முகிலாக

மனிதன் விழுகிறான்
மற்றவனும் விழுவதற்காக!

வி. உதேஸ்
நாவற்குழி.



### மௌனம்

எழுதிக்கொள்ள
முடியாத கவிதை!

மனம் மட்டும் எழுதும்
ஸர்வார்த்த சாதனம்!

சிந்தை வயலின்
ஞான வரம்பு!

யோக்கியம் உள்ளவனின்
நாக்கு!

புத்தி ஜீவிகளின்
புனித புத்தகம்!

ஆத்மீகமும் அறிவும்
ஆத்மாவுக்குள் இட்டுக்கொள்ளும்
இன்ப வேலி!

குற்றங்களிலிருந்து விடுதலை
பெற
குணங்களுக்குச் சொல்லிக்
கொடுக்கும் ஆசான்!

யதார்த்தங்களின் கவிஞன்
மௌனம்.

- 'சித்தன்' எம். ஏ. எம். மஹ்றூப்
வாழைச்சேனை.

என் உயிர்ப் பல்லக்கு மேல்
உன்னைச் சுமக்கத்
தேடுகிறேன்....

நட்சத்திரங்களைப் போல்
சிந்திக் கிடக்கும்
உன் எண்ணங்களை
மாலையாகக் கோர்த்து
மாட்டிவிட நினைக்கிறேன்....

மிதந்து கொண்டிருக்கும்
நிலாத்துண்டு போல்
உன் எழில் வதனம்
கண்ணெதிரே வந்து வாட்டும்!

என் கண்களெனும்
கடலினுள் கிடக்கும்
கண்ணீர்த் துளிகளை
உன் கரங்களெனும்
மேகக் கூட்டங்களால்
ஒற்றி எடுக்க மாட்டாயா...?

நான் உன்னுடன்
முதலில் பேசிய மொழி
போலவே என் வாழ்வும் இன்று
மௌனித்துப் போனதடி!

முற்றத்தில் முளைக்க
வேண்டிய புற்களெல்லாம்
என் முகச் சுற்றத்தில்
முளைத்துக் கிடக்குதடி

குற்றம் நான் செய்திருந்தால்
சொல்... வந்து
பற்றவைத்து விடுகிறேன்
என் உயிரை!

தேய்பிறையாகிச் சென்று
என்னைத் தீய்த்துவிடாதே!
பௌர்ணமியாக வா!
என் அமாவாசை வாழ்க்கைக்கு
ஒளியூட்டு!

- ஆ. ஜென்சன் றொனால்ட்
ஈச்சமோட்டை.



## பௌர்ணமியாக வா!

## நீங்கள் தூவிய மகரந்தங்கள்

### மாற வேண்டும்

அழுதால் சிரிப்பாய்
எழுந்தால் மணியாய்
விழுந்தால் மலராய்
மாறவேண்டும்!

வரைந்தால் விரலாய்
அசைந்தால் நிலமாய்
விரித்தால் சிறகாய்
மாறவேண்டும்

பார்த்தால் சோலையாய்
கேட்டால் ராகமாய்
சுவைத்தால் இனிப்பாய்
மாறவேண்டும்!

பிறந்தால் தாயாய்
நடந்தால் கால்களாய்
இறந்தால் சுவர்க்கமாய்
மாறவேண்டும் நானுனக்கு....

அப்போ... நீயெனக்கு!?
கொஞ்சம் நிஜமாய்....
நீயாய்....

பிருந்தாவனன் - கொழும்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கர கொக்கோ...!

## சூதாட்டம்

## கோழிச் சண்டை



இரண்டு பறவைகள் ஒன்றுடனொன்று மோதிக் கொண்டுகுரூரமாகத்தாக்கிக்கொண்டு ஏன், ஒன்று மற்றையதை கொலைகூட செய்துவிடும். இது இயற்கையாக வந்ததில்லை. ஆனால் இது ஒரு விளையாட்டு.

எல்லோரும் கண்டு களிக்கும் ஒரு பிரபல்ய விளையாட்டு மட்டுமல்ல, மிக மிக இரகசியமாகவே நடைபெறும் ஒரு பந்தயம் கோழிச் சண்டை.

நமதுவீடுகளில் நாம் வளர்க்கும் நாட்டுக் கோழிகளில் சேவல்கள் சில நேரத்தில் சண்டைபிடித்துக் கொள்வதைக் கண்டிருப்போம் தானே... ஆசையாய் ரசிக்கலாம் போல் தோன்றினாலும் அவை வெகு நேரம் நீடிப்பதில்லை. ஒன்றை இன்னொன்று கொல்வதில்லை. சண்டை பிடித்து சிறிது நேரத்திலேயே ஒன்றாய்ப் போய் உணவு தேடுகின்றன.

ஆனால் நாம் இங்கே சொல்லப்போவது பந்தயத்துக்கு நடைபெறும் கோழிச் சண்டையைப் பற்றித்தான்.

பந்தயத்துக்குக் கோழிச் சண்டை என்றால் ஆச்சரியமாயிருக்கிறதுதானே... ஆச்சரியப்படுவதற்கு இது ஒன்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டும் அல்ல. மிகப் பழமையான ஒரு விளையாட்டு.

சுமார் கி.மு. 524 இலிருந்து இவ்விளையாட்டு மனிதனால் ரசிக்கப்பட்டு வந்தாலும்கூட, இரு பறவைகளை மோதவிட்டு அதை மனிதன் ரசிப்பது மட்டுமல்லாமல் பந்தயம் பிடித்து சூதாட்டமாக்கிக் கொள்வதாலோ என்னவோ அன்றிலிருந்தே இவ் விளையாட்டு சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு விளையாட்டாக மாறவில்லை.

முதன் முதலாக இந்தக் கோழிச் சண்டை ஆரம்பிக்கப்பட்டது கிரேக்கத்தில். அதுபின் படிப்படியாக இத்தாலி, ஜேர்மனி, ஸ்கொட்லாந்து, ஸ்பெயின் போன்ற நாடுகளுக்கும் பரவியது.

**16 - 19 நூற்றாண்டு காலப்பகுதியில் இங்கிலாந்தில் அரச குடும்பம் பார்த்து ரசிக்கும் விளையாட்டாக இந்தக் கோழிச் சண்டை இருந்து வந்துள்ளது.**

பின்னர் மேலைத்தேய நாடுகளில் இவ் விளையாட்டு அருகிப் போய்விட, அந்த மேலைத்தேய நாகரீகங்களில் மோகங் கொண்டு அவற்றைப் பின்பற்றும் கீழைத் தேய நாடுகளில் சிலவும் இவ் விளையாட்டைப் பற்றிப் பிடித்துக் கொண்டன.

சுமார் 20 அடிப் பரப்பில் இரண்டு சேவல்களை மோத விடுவார்கள். அவற்றின் கால்களில் 4-6 செ. மீற்றர் வரை நீளமுள்ள கூர்மையான கம்பி அல்லது கத்தி செருகப்பட்டிருக்கும்.

மூர்க்கத்தனமாகஇரண்டும்கராட்டே வீரர்கள் மோதுவதைப் போல் சீறிப்பாய்ந்து, ஒன்றையொன்று குத்திக் கிழித்து... இறுதியில் ஒன்று மற்றதைக் கொன்றுவிடும். அல்லது படுகாயப் படுத்தி விடும். பந்தயக்காரர்கள் இருபுறமும் நின்று அவற்றுக்கு வைக்கப்பட்டிருக்கும் பெயர்களைக் கூறி உற்சாகமும் எரிச்சலும் ஊட்ட, ஊட்ட மோதல் உக்கிரமாகும்.

கடைசியில் வெல்லும் சேவல்களுக்குரிய பந்தயக்காரர்கள் இலட்சக்கணக்கில் உழைத்துக் கொள்வார்கள்.

2 - 3 வருடங்கள் நிரம்பிய சேவல்களே இந்தப் போட்டியில் கலந்துகொள்ளத் தகுதியானவை. அது தவிர சர்வதேசப் போட்டிகளில் வெல்லும் சேவல்களுக்கு 1000 டொலர்கள் பரிசாக வழங்கப்படும். இது ஒரு கம்போடியப் பிரஜையின் 7 வருடச் சம்பளத்துக்குச் சமனாகும்.

கம்போடியாவில் இவ்விளையாட்டு தடை செய்யப்பட்டுள்ளது. என்றாலும் அங்குமிகஇரகசியமாக இப்போட்டியும் பந்தயமும் நடைபெறத்தான் செய்கிறது.

புராதன காலத்தில் இவ்விளையாட்டு இந்தியா, சீனா, பேர்ஸியா மற்றும் கீழைத்தேய நாடுகளில் இருந்து வந்தது. பிரிட்டனில் இவ்விளையாட்டு 1836 இலேயே தடை செய்யப்பட்டது.

இரண்டு முறைகளில் இப்போட்டி நடைபெறும். ஒன்று மற்றைய சேவலை போட்டியிட முடியாதவாறு கொல்லும் வரை தாக்குதல். மற்றையது ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் தாக்கி காயப்படுத்தி போட்டியைத் தொடர முடியாதவாறு செய்தல்.

உலகிலேயேமுதல் முறையாக சர்வதேச கோழிச்சண்டை இந்த வருடம் மாசி மாதம் 7ம் திகதி நடைபெற்றது. என்ன விழிக்கிறீர்களா? இது நடந்தது தாய்லாந்தில்.

தாய்லாந்து தேசிய கோழிகள் அகடமிதான் இச்சண்டையை நடத்தியது. (*Thai Native Chiken Acadamic & Demontration Centre*) இந்தப் போட்டியில் எட்டு நாடுகள் கலந்துகொண்டன. எல்லாமே ஆசிய நாடுகள். தாய்லாந்து, சீனா, ஜப்பான், வியட்நாம், மியன்மார், லாபோஸ், இந்தோனேசியா மற்றும் கம்போடியா ஆகிய நாடுகள் கலந்து கொண்டன.



**அவற்றின் கால்களில் 4-6 செ. மீற்றர் வரை நீளமான கூர்மையான கம்பி அல்லது கத்தி செருகப்பட்டிருக்கும். மூர்க்கத்தனமாக இரண்டும் ஒன்றையொன்று கராட்டே வீரர்கள் மோதுவதைப் போல் சீறிப்பாய்ந்து, குத்திக் கிழித்து... இறுதியில் ஒன்று மற்றதைக் கொன்றுவிடும். அல்லது படுகாயப்படுத்தி விடும். பந்தயக்காரர்கள் இருபுறமும் நின்று அவற்றுக்கு வைக்கப்பட்டிருக்கும் பெயர்களைக் கூறி உற்சாகமும் எரிச்சலும் ஊட்ட, ஊட்ட மோதல் உக்கிரமாகும். கடைசியில் வெல்லும் சேவல்களுக்குரிய பந்தயக்காரர்கள் இலட்சக்கணக்கில் உழைத்துக் கொள்வார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஜென் கதை**

## சுய தரிசனம்

ஞான வேட்கை மிகுந்த ஒருவர், உண்மையான குருவைத் தேடி மெய்ஞ்ஞானம் அறிய, குதிரையில் ஏறி காடு, நாடாய் அலைந்தார்.

ஒரு மாத காலத்திற்குப் பிறகு, ஒரு மெய்ஞ்ஞான குருவை மலைக் குகை ஒன்றில் கண்டு பிடித்தார்.

வந்தவரின் ஆவலைக் குரு கேட்டறிந்தார்.

பிறகு நீண்ட நேரம் மௌனமாக அமர்ந்திருந்தார்.

வந்தவர் காத்திருந்தார்.

குரு கண் விழித்தார். பயணி ஏறி வந்த குதிரையை உற்று நோக்கினார்.

"குதிரையைத் தேடாமல், ஞானத்தைத் தேடி ஏன் வந்தாய்?" என்று கேட்டார்.

"என்னிடம் குதிரை இருக்கிறது, சுவாமி!" என்றார் பயணி.

குரு லேசாகச் சிரித்தார்.

பிறகு, "நீ ஏன் குதிரையைத் தேடிப் பிடிக்கக் கூடாது. புத்தனாவது எதற்கு?" என்றார்.

அந்த மனிதருக்குக் கோபம் வந்தது.

"என்னிடம் குதிரை இருக்கிறது என்று சொன்னேனே! அப்புறம் ஏன் குதிரையைத் தேட வேண்டும்?" என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

குரு சிரித்தபடி சிறிது நேரம் மௌனமாக அமர்ந்திருந்தார்.

பிறகு, மெல்ல எழுந்து குகைக்குள் போய்விட்டார்!

அவ்வளவுதான்! அவருடைய ஞானோபதேசம் முடிந்து விட்டது!

'நீயே புத்தனாக இருக்கையில், எதைத் தேடி அலைகிறாய் முட்டாளே?' என்பது அதன் அர்த்தம்.

**தன்னைத் தானறிதலே மெய்ஞ்ஞானம் என்கிறது ஜென்.**

தாய்லாந்தில் இது தடை செய்யப்பட்ட ஒரு போட்டியாக இருந்த போதிலும் அத்தடையையும் மீறி இது மிக இரகசியமாக நடத்தப்பட்டது. சர்வதேச போட்டியில் பங்குபற்றாவிட்டாலும் இலங்கையிலும் கோழிச் சண்டையும் பந்தயமும் சில இடங்களிலேனும் நடைபெறத்தான் செய்கிறது.

கொழும்பை அண்டிய பிரதேசங்களான ஜா-எல, ஏகல, மாபாகே, கடான, வெலிசற, வென்னப்புவ போன்ற பிரதேசங்களில் இது இன்றும் நடைபெறுகிறது. பெரும் பெரும்புள்ளிகள், பாதாளஉலகக் கோஷ்டியினர் போன்றவர்களே இதன் அங்கத்தவர்கள்.

இப் போட்டிகள் நடைபெறும் இடங்களுக்கு அங்கத்தவர்கள் மாத்திரம்தான் செல்லலாம், பார்வையிடலாம். பந்தயம் பிடிப்பதும் அங்கத்தவர்கள் மட்டுமே. அதனால்தான் சாதாரணமாக இப்போட்டியை பொதுசனங்களாகிய நாம் காண முடியாமலுள்ளது.



நமது நாட்டில் பெரும்பாலும் சூதாட்டத்தளங்களிலேயே இவை நடைபெறும். லட்சக்கணக்கில் பணம் எடுத்து வருபவர்கள் ஒரு சதமும் இன்றிச் செல்வதையும், சில நூறு ரூபா கொண்டு வந்தவர்கள் இலட்சக்கணக்காகக் கொண்டு செல்வதையும் இங்கே காணமுடியும். எமது நாட்டிலும் இது தடை செய்யப்பட்டுள்ளது.

எல்லா நாடுகளிலும் சண்டைக்குப் போகுமுன் சேவல்களுக்கு சிறந்த முறையில் பயிற்சியளிக்கப்படும். எந்தக் குறையும் இல்லாமல் சிறந்த உணவு வகைகளை வழங்கி அதனைப் பராமரிப்பார்கள். வயது சென்றுவிட்ட, போட்டியில் பங்குபற்ற முடியாத சேவல்களை பல டொலர்கள் கொடுத்து வாங்குபவர்களும் உண்டு. எமது நாட்டில் அவ்வாறான சேவல் 2000 - 3000 ரூபா வரையில் விலை போகும்.

தாய்லாந்தில்தான் இந்தப் போட்டி அதிகமாக இரகசியமாக நடைபெற்று வருகிறது. தாய்லாந்தில் கோழி வளர்க்கும் பண்ணையொன்றிலிருந்து இந்தச் சேவல்கள் போட்டிக்காக வாடகைக்கு விடப்படுகின்றன. அதனால் அந்தப் பண்ணை முகாமையாளருக்கு ஒரு வருடத்துக்கு 100 மில்லியன் டொலருக்கு மேல் இந்தச் சேவல்களினால் வருமானம் கிடைக்கிறது.

அது தவிர இந்தப் பண்ணையிலிருந்து ஒரு வருடத்துக்கு ஒரு பில்லியன் முட்டைகளும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பொதுவாக எல்லா நாடுகளிலும் இந்த விளையாட்டைப் பார்க்க வருபவர்கள் எண்ணிக்கை 200 க்கும் குறைவாகவே இருக்கும். தவிர எல்லா நாடுகளிலும் இது தடை செய்யப்பட்டும் இருக்கிறது.

இருந்தாலும் மனிதனுக்கு எவ்வகையிலேனும் தேவை பணம்தான்.... அதிலும் விறுவிறுப்பான பந்தயக் களங்களில் இவ்வாறு ஈட்டிக்கொள்கிறபணம் அவனுக்கு உடலுழைப்பின்றிக் கிடைக்கும் வெற்றிக் கிளர்ச்சியையும் தருகிறது. ஆனால் இது நேர்மையான பணம் தேடும் வழியல்லவே. எனவேதான் இதற்குத் தடை.

தன் சுகபோக வாழ்க்கைக்காக மனிதன் மனிதனை அழித்துக் கொள்ளும் காலத்தில் அவன் இவ்வாறான பறவைகளை ஈடுபடுத்துகிறான் என்பது ஒன்றும் வியக்கத்தக்க விடயமுமல்ல. •

**தாய்லாந்து தேசிய கோழிகள் அகடமி நடத்திய கோழிச் சண்டை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைத்த வாழ பண்டங்கள்

தீக்குவல்லை கமால்

"தண்ணி கொஞ்சம் தாரா?''

புதுக் குரலாயிற்றே... சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள் நிஸ்மியா. கணவனின் நண்பனொருவன்தான்.

கிளாஸில் தண்ணீர் வார்த்துக் கொண்டு வந்து மேசையில் வைத்தாள்.

"ஒங்கட கையால தந்தா எவளவு நல்லமன்''

'இதென்ன தொல்லை' என்ற கோபத்தோடுஉற்றுநோக்கினாள்.

இரக்கமும் புன்னகையும் ஒன்றாகக் கலந்த ஸீனத்தில்லாத முகம்.

"அவரில்லாத டைமில வந்து கரச்சல் படுத்தாமப் போங்கொ''

எரி வீச்சாய்ப் பாய்ந்த வார்த்தைகள் அவனது எதிர்ப்பார்ப்பை தகர்த்துவிட்டது போலும். இனி இந்தத் தண்ணீரைக் குடித்து 'தாகமா' தீரப் போகிறது. அவன் வெளியேறி நடந்தான்.

அவளது நெஞ்சப் பதற்றம் சற்றே குறைந்தது. 'சீ... இதென்ன கரைச்சல்' அவள் சலித்துக்கொண்டாள்.

நிஸ்மியாவுக்கு திருமணமாகி ஒரு மாதமும் சரியாக ஏழு நாட்களுந்தான். இதற்குள் அவளது மகிழ்ச்சி வரைபு உச்சியிலிருந்து பூச்சியத்தை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருந்தது.

தகரக் கூரையும் பூசி மெழுகப்படாத சுவர்களுமாக ஓர் இடைச் சுவரால் பிரிக்கப்பட்ட இரண்டு துண்டு வீடு. அதையிட்டு அவள் அதிருப்திப்படவில்லை.

அப்படிப்பட்ட இன்னும் நாலைந்து வீடுகள் அங்கே தெரிந்தன. சிலதுக்கு கூரைகளே இல்லை. இன்னும் சில திருத்தப்படாத இடிபாடுகளோடு.... இன்னும் சில கிடுகுகளெல்லாம் இற்றுப் போய் கம்பு தடிகள் மாத்திரம் எலும்புக் கூடுகளாய் இருப்புக்குச் சாட்சி கூறின.

அது ஊருக்குள் ஒரு மேட்டு நிலப்பகுதி. சனத்தொகைப் பரம்பலை ஈடுசெய்ய அரசால் ஒரு காலத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலம். நிலத்துண்டும் ஐயாயிரத்துக்கு மேற்படாத நிதியுதவியும், வீடமைப்புப் புள்ளிவிபரத்தில் எண்ணிக்கையை உயர்த்த மட்டுமே உதவியிருந்தது.

பெரும் நம்பிக்கையோடு ஆரம்பத்தில் குடியமர்ந்த முப்பது குடும்பத்தவர்களும் குடிநீர், மின்சாரம், போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் எவ்வளவு காலத்துக்குத்தான் தாக்குப் பிடிக்க முடியும்?

வந்தவர்கள் காலப்போக்கில் விட்டுவிட்டு ஓடினார்கள். புது நம்பிக்கையோடு புகுந்த புதியவர்கள் காலப்போக்கில் அந்த இடத்தையே மறந்தார்கள்.

வெளியே பேச்சுக்குரல் கேட்டு எட்டிப் பார்த்தாள் நிஸ்மியா.

முழங்காலுக்கு மேல் சாரத்தை உயர்த்திக் கட்டியபடி இருவர் புகை கக்கிக்கொண்டு மேலே போய்க் கொண்டிருந்தார்கள். எங்குதான் போகிறார்களோ!

அவளது கணவனின் வாப்பாவுக்குக் கிடைத்த நிலத்துண்டுதானாம் இது. சில காலம் இங்கே குடியிருந்திருக்கிறார்கள். பின்னர் மகனுக்குக் கொடுத்து.... அவர்களும் மூன்றே மாதத்தோடு சரி. அதற்குப் பின் ஒரு பெரிய பட்டியல். யாரையும் வாழவைக்கும் இடமாக இது நிஸ்மியாவுக்குப் படவில்லை.

வரவர கணவனின் போக்கு அவளுக்குப் பிடிப்பற்றதாக இருந்தது. பதினெட்டே வயதில் நாலைந்து நாள் அவகாசத்தில் நிக்காஹ் நடந்தபோது பெரிய அதிர்ஷ்டம் கிட்டிவிட்டதாகவே அவள் நினைத்தாள்.

இது அவளது சொந்த ஊர் அல்ல. சுமார் ஐம்பது மைல் தொலைவில் ஒரு கிராமத்தில் அவள் பிறந்து வளர்ந்தாள். கொட்டைப்பாக்குஉச்சவிலைக்கேறிய அந்நாட்களில் வியாபார நோக்கோடு பல வாலிபர்கள் வந்து சேர்ந்தார்கள்.

பள்ளிவாசல் கடைக் காம்பராவில் தங்கிநின்று ஊருக்குள் திரிந்து பாக்குச் சேர்த்த இளைஞர்களில் இவனும் ஒருவன். பணப் பரிமாற்றமும் அடிக்கடி பள்ளிவாசலுக்கு வந்து போகும் அறிமுகமும் சேர்ந்து இந்தக் 'கொமரு காரிய'த்தை சாத்தியமாக்கிற்று.

மாப்பிள்ளைமார் லட்சக்கணக்கில் விலைபோகும் காலத்தில் பத்தாயிரத்தோடு திருமணம் சித்தித்ததென்றால் அது பெரிய விஷயமில்லையா?

மாப்பிள்ளையோடு இங்கு வந்து குடியேறியபின் அவன் எந்தத் தொழிலிலும் ஈடுபடுவதை அவளால் கண்டுகொள்ள முடியவில்லை. ∴போட்டோ கொப்பி போல் ஒரே முகவாக்கில் நாலைந்து கூட்டாளிகள் வந்து போவதும், மாறி மாறி அவர்களோடு போய் வருவதிலும் காலம் கரைந்தது.

யாரிடம் சொல்லி அழுவதென்று அவளுக்குத் தெரியவில்லை.

பக்கத்திலிருந்தால் உம்மா வாப்பாவோடாவது சொல்லி மனப் பாரத்தைக் குறைத்திருக்கலாம்.

"நசக்கார பொம்புள. வந்தும் ஒரு மாஸமாகுது. எனக்கு உம்மவப் பாத்திட்டு வரோணும் போலீக்கி....'' தந்திரமாகத்தான் இப்படிக் கேட்டு வைத்தாள்.

"இவ்வளவு நாளாகீம் அவங்க வந்து பாத்தா ஒங்கள?''

"வந்திட்டு ஒடனே பொகேலுமா.... உம்மக்கு சொகமில்ல. தம்பி தங்கச்சிமாரு ஸ்கூலுக்குப். போற... வாப்பஅன்டயன்டக்கிதேடித்தின்னிய மனிசன்'' அவள் நியாயம் கற்பித்தாள்.

"சரிசரி கூட்டிக்கொணு போறனே. சும்ம பொகேலுமா... புதிய மாப்பிள எனத்தியன் கொணந்தென்டு அசல் மனிசரு கேப்பாங்க....''

ஏதோ பெரிய சம்பாதிப்பு நடாத்துவபவர் போல பேசிப் பேரட்டான் அவன்.

அவளும் இடைவிடாது கரைந்து கொண்டே இருந்தாள்.

பாணும் சாப்பாட்டுப் பார்சலுமாக பொழுதுகள் நகர்ந்த வண்ணமிருந்தன. சமையல் நடந்தது இரண்டொரு நாட்கள்தான்.

வரவர கணவனைப் பற்றி அறிந்துகொள்ளும்ஆவல்பிரவகித்தது அவளுக்கு. கதைப்பதற்கு யாருமில்லாதது அடுத்த பிரச்சினை.

அந்த மேட்டுப் பகுதியின் அடிவாரத்தில் குளிக்கும் கிணறுகள் அமைந்திருந்தன. அங்கு சென்றால்தான் கொஞ்சம் மனித நடமாட்டத்தைக் காண முடியும். கிணற்றடியில் சில அறிமுகங்கள் அவளுக்கு.

"இவதான் ஸலீம் தாத்தட மருமகள். மலேல இருப்பிடம்'' ஒருத்தி நிஸ்மியாவைக் காட்டிச் சொன்னாள்.

"ஆ... அஸீனட பொணாட்டியோ. புதிசா கலியாணம் நடந்தென்ட'' இது அடுத்தவள்.

"ம்...''

அவளும் மெல்லச் சிரித்து அதனை ஆமோதித்தாள்.

அந்த இருவரும் திருமணத்துக்காகக் காத்திருக்கும் இளசுகள்.

"எப்பிடியன் ஒங்கட தொர நல்லமா?'' குறும்புத்தனமாக கேட்டாள் ஒருத்தி.

"எனக்கு நல்லந்தான். ஒங்கடரு ஆள்களப் பத்தி ஒங்களுக்குத்தானே தெரீம்'' இதுதான் சந்தர்ப்பமென்று இரை போட்டாள்.

"பொகப் பொகத் தெரீமாகும்'' என்றபடி ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

அதிலே ஒருவித ஏளனம் தொக்கி நின்றது.

நிஸ்மியாவுக்கு லேசாகத் தலை சுற்றியது.

கணவனை இதே போக்கில் இனியும் விட்டுவிடுவது புத்திசாலித்தனமாக அவளுக்குப் படவில்லை. கூர்மையாக ஒவ்வொரு விடயமாக அவதானிக்கத் தொடங்கினாள்.

புதுமாப்பிள்ளையென்ற துடிதுடிப்போடு அவன் பெரும்பாலும் கட்டிலுக்கு வருவதேயில்லை. அவளை விழிப்பிலே மிதக்க வைத்துவிட்டு, சொற்ப நேரத்தில் குறட்டை விடுவதிலேயே இரவுகள் தொலைந்தன.

அன்று . தற்செயலாகக் கழுத்துப் பகுதியைத் தடவியவன், திடுக்கிட்டு "சவடியக் காணல்ல'' என்றான்.

வழமை போல் கெட்ட வாடை வாயில் மணத்தது.

"நீங்கில்லாத டைமுக்கு தனிய நீக்கோணும். நான் கழட்டி வெச்ச''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாயிரமும் கரைந்து போன பின் கழுத்தில்தான் கைவிழும் என்பதை எதிர்பார்த்துத்தான் அவள் இப்படிச் செய்தாளென்பது அவனுக்கெங்கேபுரியப்போகிறது.

"அடியேய்"

திடுக்கிட்டவள் எழும்ப முற்பட்டாள். முடியவில்லை. அவளது அடர்த்தியான கொண்டை அவனது கைக்குள் சிக்கியிருந்தது.

"ஏண்ட கூட்டாளிமாரோட ஒனக்கு மொறயா நடந்துகொளத் தெரியவாடீ"

"அவங்க மொறயா நடந்துகொளோணுமேன்" - அவளும் விட்டுக் கொடுக்கவில்லை.

"இன்டேச் செலவுக்கு இருநூறு ரூவத் தந்த மனிசன்" அவன் கத்தினான்.



"சீ... நீங்க ஒரு மாப்பிளயா"

"பளார்"

அவள் ஒப்பாரி வைக்கவில்லை. அழுதால் யாருக்குத்தான் கேட்கப்போகிறது.

"ஓ இதுக்கு முந்தீம் தாரோ ஒத்திய கொணந்து வெச்சிகோ நிண்டதெல்லாம் எனேத்தெரீம்"

"பொத்துடீ வாய கொன்டு போடுவன்"

அவனது முரட்டுக் கரங்கள் இரண்டும் அவள் கழுத்தை நெரித்தபடி....

"இதுக்குப் பொறகு வாயடிக்கியா?"

"இல்ல"

"ஏன்ட கூட்டாளிமாரோட அது போல நடந்து கொளுகியா?"

"ஓ..."

அவனது பிடி தளர்ந்தது.

அவள் அப்படியே சாய்ந்தாள்.

அவன் கொண்டு வந்த பாணும் பழமும் சொப்பிங் பேக்கில் அப்படியே அநாதையாகக் கிடந்தது.

தன்னையே நொந்தபடி அவள் அழுதழுது.... நாய்கள் ஊளையிடும் ஜாம வேளையில் கண்ணயர்ந்து போனாள்.

"அல்லாஹு அக்பர்"

பள்ளிவாசலிலிருந்து எழுந்த சுபஹுத் தொழுகைக்கான அதான் அவளது காதுகளை வந்து தட்டியது. எழுந்தமர்ந்தாள்.

அந்தப் பள்ளிவாசலையும் அதைச் சுற்றிச் சுழலும் ஜமாஅத்தாரையும் பார்த்து மகிழும் ஆசை இன்றுவரை கைகூடவில்லைதான்.

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அடுப்பில் தண்ணீர் வைத்தாள்.

"இந்தாங்கோ கோப்பி. எழும்புங்கோ"

அவன் வாய் அலம்பிக்கொண்டு கோப்பி பருகத் தயாரானான்.

கிழக்கு வெளுத்துக்கொண்டு வந்தது.

## சிறுகதை

வீட்டுத் தேவைக்கு மாத்திரம் பயன்படுத்த சற்று கீழே ஒரு ஆழமான கிணறு. ஐந்தாவது குடம் தண்ணீரைச் சுமந்து வரும்போது அவன் வெளியேறிக் கொண்டிருந்தான்.

"இங்க ராவு கொணுவந்த பாண் அப்பிடியே... தின்டிட்டு போங்கொ"

அவன் ஏதோ ஞாபகம் வந்தது போல் உள்ளே வந்தான்.

பாய் விரிந்தது. இருவரும் அமர்ந்து பாண் சாப்பிட்டார்கள். அதற்கு மேல் அவனுக்கு எப்படி நேரம் போதும்? வேலையில்லாத வேலைக்கு புறப்பட்டுவிட்டான்.

எஞ்சிய பாணைச் சுற்றி எடுத்து வைத்தாள். சில வேளை அதுதான் அவளுக்குப் பகலுணவு.

ளுஹர்... அஸர்.... மஃரிபு....

இப்படி அதான் ஒலியே அவளுக்கு நேரம் காட்டிக் கொண்டிருந்தது.

மாலைவெள்ளி தனியாகப் பூத்திருந்தது அவளைப் போலவே.

"டக்... டக்"

"மஃரிபியாக முந்தி ஊட்டுக்கு வரோனேன்" என்றவாறு கதவைத் திறந்தாள்.

கணவனல்ல!

"அவரில்ல" அவள் சொன்னாள்.

"அஸீன்தான் வரச்சென்ன" - வந்தவன் சொன்னான்.

கழுத்தை இரண்டு கைகள் நெருக்குவது போன்ற பிரமை அவளுக்கு.

அவள் சிரித்தாள்

ஒரு தேவதையின் சிரிப்பாக இனித்தது அவனுக்கு.

கதவை மெல்லத் தள்ளியபடி உள்ளே வந்தான் அவன். கண்கள் சிவப்பாக மின்னின.

அவள் சிரித்தாள்.

அவன் கதவுக்கு தாளிட்டுவிட்டு அவளை நெருங்கினான்.

"இரிங்கோ நான் வெட்டக்கி பெய்த்திட்டு வாரன்"

"ரெடியாகி வரப்போகிறாளே" அவன் குளிர்ந்துபோனான்.

குசுனிக்கு வந்தவள் ஏலவே தயாராய் வைத்திருந்த சொபிங் பேக்கை எடுத்தபடி பின் கதவால் வெளியேறி எட்டிப் பார்த்தாள். இருட்டு. மரந்தளிர்களின் மெல்லிய அசைவாட்டம்.

ஒரே ஓட்டமாய்க் கீழ் நோக்கி ஓடத்தொடங்கினாள்.

"அடியேய்"

மரக்குற்றியில் குந்தியிருந்த அஸீன் மின்னலாய்ப் பாய்ந்தான்.

"என்னைக் காப்பாத்துங்கோ.. என்ன...."

எங்கிருந்து வந்த வேகமோ தெரியவில்லை. ஓடினாள். கரடும் முரடும் காலைக் கிழிக்கக் கிழிக்க கத்தியபடியே கீழ் நோக்கி ஓடினாள்.

அடிவாரத்துக்கே வந்துவிட்டாள். அதோ ஒரு வீடுதான்.

ஓட்ட வேகத்தில் அவனுக்கும் அவளுக்குமிடையே ஒரு பத்தடி இடைவெளிதான். பாய்ந்து அந்த வீட்டுக்குள் புகுந்தாள்.

"என்னக் காப்பாத்துங்கோ"

வீட்டுக்காரர்கள் அதிர்ந்து போய்.... என்னவென்று விசாரிக்கவும் நேரமில்லாமல்....

"அடியேய் வாடீ வெட்டக்கி" முற்றத்தில் முரட்டுக் குரல்.

அவளுக்கு வீட்டுக்காரரைத் தெரியாவிட்டாலும் அவர்களுக்கு அவளைத் தெரிந்துதானிருந்தது.

"பயவென்ன எபா துவே" - என்றவன் மூலையில் சாத்தியிருந்த கோடாரியைத் தூக்கிக்கொண்டு வெளியே பாய்ந்தான்.

"துண்டு துண்டா வெட்டிப் போடுவன்... உள்ளுக்கு அடி வைக்காதே"

பின்வாங்கிப் பின்வாங்கி அவன் எங்கே மறைந்தானோ தெரியவில்லை.

பெருமூச்சோடு அவள் கண்கள் மேலே உயர்ந்தபோது, புத்தர் படத்துக்கு முன்னால் விளக்கொன்று ஒளிர்ந்து கொண்டிருந்தது.

அவளை பொலீஸுக்கு அழைத்துச் செல்ல வேண்டும். அல்லது ஊர் முக்கியஸ்தர்களோடு கதைத்து உரிய பரிகாரம் தேட வேண்டும்.

இரண்டிலொன்றைச் செய்வதற்காக வீட்டிலிருந்து வெளியிறங்கினான் ஜீன் அப்பு. •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லியனார்டோ டாவின்சி

# பொற்காலத் தூரிகை



ஏ.எச்.எம் நவாஸ்
பேராதனை
பல்கலைக்கழகம்

மறுமலர்ச்சி (*Renaissance*) இலட்சியத்தின்சார்பான'பிரபஞ்ச மனிதன்' (*Universal man*) என்ற கருத்து லியனார்டோ டாவின்சி (*Leonardo davinci 1452 - 1519*) யின் கலைப் படைப்புக்களில் ஒளிர்ந்தது.

ஏனெனில், அதற்கு முந்திய காலத்தை விட மறுமலர்ச்சி யுகம் புதிய மனித யுகத்தைப் பிரதிபலித்தது. இக்காலப்பகுதியில் மனிதனின் அறிவியல் தேடல்கள் மிகத் தீவிரமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

பேர்டன் ரஸல் (*Bertrand Russell*) குறிப்பிடுவது போல் மறுமலர்ச்சியின் சிறந்த சிருஷ்டிகள் அறத்தின் வரம்புக்கு வெளியே இருந்தன. அது மிகச் சிறந்த மனிதனை உற்பத்தி செய்தது. (*It produced very great man*) மறுமலர்ச்சி கலாசாரம் மத்தியகால சமய ஒடுக்கத்தில் இருந்து அறிவியல் மனிதனை விடுதலை செய்தது.

தாலிய மறுமலர்ச்சியின் பொற்காலத்தை **ஜியார்ஜியோ வாஸரி** என்ற ஆய்வாளர் மூன்றாகப் பிரித்தார். அவையாவன....

**முதல் பொற்காலம்:** ஜியோட்டோவும் பிஸானோவும் வாழ்ந்தகாலம்.

**இரண்டாம் பொற்காலம்:** டொனடெல்லோ மசோக்கியோ வாழ்ந்த காலம்.

**மூன்றாம் பொற்காலம்:** லியனார்டோ டாவின்சி, ரபேல், மைக்கேலேஞ்சலோ வாழ்ந்த காலம்.

பிரபஞ்ச மனிதனின் தேடல்களில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியே மறுமலர்ச்சியை மலர்வித்தது.

ஐரோப்பிய மறுமலர்ச்சியின் முதல் வித்து இத்தாலியிலேயே வெளிப்பட்டது. இதுபற்றி பிரெடெரிக் ஏங்கெல்ஸ் **"இயற்கையின் இயக்கவியல்"** (1969: 37) நூலில் பின்வருமாறு எழுதுகின்றார்:

**"பைஸான்திய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றப்பட்ட கையெழுத்துப் பிரதிகளும் ரோமாபுரியின் இடிபாடுகளிடை இருந்து தோண்டியெடுக்கப்பட்ட பண்டைய சிற்பங்களும், மேற்கு நாடுகளைத் திகைப்பிலாழ்த்தும்படியான ஒரு புதிய உலகத்தை.... பண்டைய கிரேக்க உலகத்தை வெளிப்படுத்தின. அதனுடைய ஒளி பொங்கும் வடிவங்களின் முன்னே மத்திய காலத்தின் ஆவிக் கணங்கள் மறைந்தொழிந்தன. கலைகளின் மறுமலர்ச்சியில் கற்பனைக்கும் எட்டாத சிகரங்களை இத்தாலி எட்டிப் பிடித்தது. ஆதாரச் சிறப்பெய்திய பண்டைய காலத்தின் பிரதிபிம்பம் போல் அது இருந்தது."**

"எனவே, மறுமலர்ச்சி என்பது அதற்கேயுரிய அர்த்தத்தில் இத்தாலியிலேயே தோன்றியது. இத்

லியனார்டோ டாவின்சி, ரபேல், மைக்கேலேஞ்சலோ ஆகியோர் வாழ்ந்த மூன்றாவது பொற்காலமே கலை முழுமை தன் சிகரத்தை அடைந்த காலமாகும்.

**"சொர்க்கம் அடிக்கடி தன் அரிய பொக்கிஷங்களை மனிதர்கள் மீது பொழிவதுண்டு. அபரிமிதமான அழகை சில மனிதர்கள் மீது அள்ளி வழங்கியதுண்டு. சொர்க்கத்தின் பேரழகாய்ப் பரிணமித்தவன்தான் லியனார்டோ டாவின்சி. இது வெறும் புகழ்ச்சி இல்லை. டாவின்சியின் நெஞ்சுரமும், நிமிர்ந்த பார்வையும் பேரழகும் நம்மால் வர்ணிக்க இயலாது. அவன் எதைச் செய்தாலும் அது பேரழகாய் விளங்கியது. அதில் தெய்வீக மணம் கவிழ்ந்தது. லியனார்டோ தன் வருங்காலத்திலும், இறந்த பின்னும் பேரும் புகழும் அடைவான். இது உறுதி."**

**- ஜியார்ஜியோ வாஸரி -**

ரபேலும் மைக்கேலேஞ்சலோவும் தெய்வீக அருள் பெற்ற கலைஞர்கள்தான் என்று குறிப்பிடும் ஜியார்ஜியோ வாஸரி, இவர்களை இம்மண்ணில் காலூன்றி நின்ற நல்ல தொழில் கலைஞர்கள் என்றளவில் மட்டுமே ஏற்றுக் கொண்டார்.

ஆனால் லியனார்டோ டாவின்சியோ அதை விட மேலானவர் என வர்ணிக்கப்பட்டவர்.

விமர்சகர் ஜியார்ஜியோ வாஸரி மட்டுமல்ல, அவர் காலத்தில் வாழ்ந்த சிற்பிகள், ஓவியர்கள் அனைவருமே இப்படி ஆச்சரியம் கொள்ளும் விதத்தில்தான் லியனார்டோவை வர்ணிக்கத் தொடங்கினர் என்று **'லியனார்டோ டாவின்சி'** (1991) என்ற நூலில் 'தேனுகா' குறிப்பிடுகின்றார்.

லியனார்டோ அவரது காலத்தவர்களால் இவ்வாறு ஆச்சரியம் கொள்ளும் விதத்தில் பார்க்கப்பட்டதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில், பிரபஞ்சத்தை தர்க்கக் கண் கொண்டு பார்க்கப் புறப்பட்ட முதல் இத்தாலியக் கலைஞர் அவர். மெய்யியல், ஓவியம், சிற்பம், உயிரியல், கட்டிடக் கலை ஆகிய எல்லா பிரிவிலும் அவருடைய ஆளுமை பரந்து விரிந்திருந்தது. பிரெடெரிக் எங்கெல்ஸின் மொழியில் சொல்வதானால், **லியனார்டோ டாவின்சி ஒரு மகத்தான ஓவியக் கலைஞன் மட்டுமல்ல, அவன் கணிதவியல், யந்திர அமைப்பு, பொறியியல் ஆகிய துறைகளிலும் ஒரு மேதை, பௌதிகவியலின் பல்வேறு கிளைகளும் அவனுக்கு முக்கியமான கண்டுபிடிப்புகளால் கடமைப்பட்டுள்ளன.** (1969: 38)

லியனார்டோ டாவின்சி இத்தாலியின் 'வின்சி' என்னும் கிராமத்தில் 1452ஆம் ஆண்டு ஏப்ரல் 15ம் நாள் பிறந்தார். **ஸெர்பியரோ** தன் பண்ணையில் வேலை செய்த பணிப்பெண் **கேடரினா**வுடன் வைத்திருந்த தொடர்பில் பிறந்தவர் தான் டாவின்சி. ஸெர்பியரோ டாவின்சியை சட்டபூர்வமான மகனாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஸெர்பியரோவுக்கு தான் திருமணம் செய்து கொண்ட மூன்றாவது பெண் மூலம் பிறந்த பிள்ளைகளே சட்டபூர்வ பிள்ளைகளாயிருந்தனர்.

லியனார்டோவுக்கு ஐந்து வயதாகையில், தாய் கேடரினா, பண்ணைப் பணியாளன் ஒருவனோடு குடும்பம் நடத்தினாள். லியனார்டோ தன் தாத்தா வீட்டில் தந்தையுடனும் தந்தையின் மனைவி **அல்பீரியா**வுடனும் வசித்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1943ம் ஆண்டு தாய் கேட்டரினாவுடன் வாழத் தொடங்கினார். ஆனால் தாய் கேட்டரினா இரண்டாண்டுகளில் இறந்து போனார். லியனார்டோவுக்கு பதினாறு வயதாகும் போது அவருடைய தாத்தாவும் இறந்துபோனார். இளமைக் கால வாழ்வு துயர் சூழ்ந்ததாகவும் சோதனை மிக்கதாகவுமே அமைந்திருந்தது.

சிக்மண்ட் ∴பிராய்ட் (*Sigmund Freud*) *Leonardo Davinci and A memory of his Child hood (1910)* என்ற ஒரு முக்கியமான உளவியல் கட்டுரையில் டாவின்சியைப் பற்றியும் அவருடைய குழந்தைப் பருவ நினைவுகள் பற்றியும் பகுப்பாய்வு செய்துள்ளார்.

**“நான்தொட்டிலில்இருந்தபோது பட்டம் ஒன்று அதன் வாலால் எனது வாயைத் திறந்து என் உதடுகளில் பலமுறை அடித்தது”**

**“1493ம் ஆண்டு ஜுலை 16ம் திகதி... கேட்டரினா வருகை. 1504ம் ஆண்டு ஜுலை 6ம் திகதி புதன்கிழமை 7 மணிக்கு ஸர்பியரோ இறந்தார்”**

டாவின்சி பதிவு செய்திருந்த குழந்தைப் பருவ நினைவுகள் பற்றிய இதுபோன்ற குறிப்புக்களை, தன்னுடைய உளவியல் ஆய்வுக்கான முக்கிய ஆவணமாக சிக்மண்ட ∴பிராய்ட் பயன்படுத்தினார். சிறு வயதில் தாய் இல்லாத சூழலில் வளர்ந்ததால் லியனார்டோவிற்கு எந்த விடயத்தையும் கூர்மையுடன் அணுகும் அறிவை அது தந்தது என்று ∴பிராய்ட் குறிப்பிடுகின்றார்.

லியனார்டோவின் இளமைக் காலம் குடும்பப் பண்ணையிலேயே கழிந்தது. சுற்றியிருந்த கழனிகளையும்பாய்ந்தோடும்அருவிகளையும் சுதந்திரமாக அனுபவித்தார். இயற்கைக் காட்சிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். பொருள்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதைக் கண்டறிவதில் கண்ணும் கருத்துமாயிருந்தார். கூடுகளில் அடைபட்டிருந்த பறவைகளைச் சந்தையில் விலை கொடுத்து வாங்கி, வெளியே பறக்கவிட்டுப் பார்த்து மகிழ்ந்தார்.

பறவைகள் கூடுகளில் அடைபட்டுக் கிடப்பதைக் காணப் பொறுக்காமையினாலும் பறவைகள் எப்படிப் பறக்கின்றன என்பதைக் கற்றுக் கொள்ளவும் இவர் அப்படிச் செய்தார் என்று கூறுவர்.

லியனார்டோ சிறுவனாக இருந்த போது, 'பிளாரன்ஸ்' நகரம் மனிதப் பண்பாட்டின் மையமாகத் திகழ்ந்தது. பிளாரன்சில் இருந்த **“பொட்டிகா”** என்னும் கலைப்பட்டறை தான் லியனார்டோவிற்கு தத்துவ மற்றும் செயன்முறைகளில் வழிகாட்டியாய் அமைந்தது.

இப்பட்டறையில்தான் லியனார்டோவின் மனதில் கலைக்கும் அறிவியலுக்குமான தர்க்கச் சிந்தனைகள் வளர்ந்து அவரை உலகுக்கு இனம் காட்டின.

1482ம் ஆண்டில் பிளாரன்ஸ் நகரை விட்டு மிலான் சென்றார். அங்கு **லோடோவிகோ ஸ்∴பார்சா** என்பவரோடு இணைந்தார்.

மிலானில் அவர் அரண்மனைப் படங்களை வரைந்தும் விழாக் காட்சிகளைக் கண்காணித்தும், பலவண்ண உடைகளுக்கு வடிவம் கொடுத்தும், போர் கருவிகளை அமைப்பதற்கு வழிகாட்டியும், மாளிகையில் மைய வெப்பமூட்டும் சாதனத்தை உருவாக்கியும் தன் அரிய காலத்தைச் செலவிட்டார்.



லெடா

மிலானில் வாழ்ந்த போதுதான் தம்முடைய புகழ்மிக்க ஓவியமான **“இறுதி இரவுணவு”** (*The Last Supper*) என்னும் ஓவியத்தை தீட்டினார். இவ்வோவியத்தை ஈரமான சுவரில் வண்ணங்களில் வரைந்தார். இவ்வோவியம் இன்றுமிகவும் சிதைந்த நிலையிலும் தலைசிறந்ததெனக் கருதப்படுகின்றது.



மோனாலிஸா

உலகியல் உண்மைகளின் முழு மதிப்பைத் தேட முனைந்தார் டாவின்சி. மாயப் புராணங்களில் அவர் நம்பிக்கை காட்டவில்லை. இதனால்அவருடையஓவியங்கள் உலகியல் சார்ந்த புதிய பொலிவுகளாக மினுக்க முறுகின்றன.

**பாறைகளில் கன்னி, புனித ஆன்னியுடன் கன்னி** முதலான ஓவியங்கள் டாவின்சியின் சிறந்த கலைப்படைப்புக்களாகும். **'லிட்டா மடோனா'** என்னும் ஓவியத்தை பின்னாட்களில் இரண்டாம் ஜார் மன்னர் அலெக்சாண்டர் வாங்கி தன் பொக்கிஷமாகக் காத்தார்.

டாவின்சி வரைந்த **'மோனாலிஸா', 'லெடா'** போன்ற ஓவியங்கள் அவருக்கு பெரும் புகழைச் சேர்த்தன. இவை மானுட வடிவங்களைத் தீட்டுவதில் மரபை மீறிய பாங்கினையும் மனித நேயத்தின் மீது டாவின்சி கொண்ட பேரார்வத்தையும் காட்டுகின்ற ஓவியங்களாகும்.

19ம் நூற்றாண்டிலிருந்து இன்று வரை மிகப் பிரபல்யம் அடைந்து வரும் “மோனாலிஸா” ஓவியத்திற்கு கிடைத்த புகழுரைகளைப் போல் உலகில் வேறு எந்த ஓவியமும் பெற்றதில்லை.

இத்தாலியில் இதன் மூல ஓவியம் களவு போனதாக அறிவிக்கப் பட்டபோது, மக்கள் பீதிகொண்டலைந்தனர். எதையும் மறுதலிக்கும் வக்கிர மனம் படைத்தவர்களும் மரபை எதிர்ப்பவர்களும் கூட இவ்வோவியத்தைப் புகழத் தொடங்கினர்.

மோனாலிஸாவின் புன்னகையின் சூட்சுமம் குறித்து நூல்கள் நூற்றுக்கணக்கில் வரத்தொடங்கின.

வால்டர் பேட்டர் பின்வருமாறு எழுதினார்:

**“மோனாலிஸா மயானங்களை வென்று சாகாவரம் பெற்ற நங்கை. அவள் அருகிலுள்ள பாறையினை விடவும் அவள் நீண்ட நாட்கள் வாழ்வாள்”**

சர்ரியலிஸ்டுகள் (*Surrealist*) இவ்வோவியத்தின் தாக்கத்திற்கு உள்ளானார்கள். இவ்வோவியத்தில் காணப்படும் மரபெதிர்ப்பு சர்ரியலிஸ்டுகளுக்கு மிகவும் பிடித்திருந்தது. **பௌல் ஆண்டர்சன்** என்பவர் மோனலிஸா ஓவியத்தினால் உணர்வு பெற்று **“ஒளி”** என்னும் அறிவியல் நாவல் எழுதினார்.

டாவின்சி கிறிஸ்துவத்திற்கு எதிரான தத்துவங்களைப் பரப்புவதில் அதிக நாட்டம் கொண்டிருந்தார். அதனால் மனிதனைப் பற்றியும், மனிதனோடு இயற்கைக்கு உள்ள பிடிப்பு பற்றியும் ஓவியங்களில் சூட்சுமமாக தன் கருத்துக்களை வெளிப்படுத்தினார்.

மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவு பற்றிய மாயாவாதத்தில் அவர் நம்பிக்கை கொள்ளவில்லை. மாறாக ஆக்கும் சக்தியிலும், அழிக்கும் சக்தியிலும் மனிதன் இயற்கையின் பிரதிநிதி என்ற கருத்தினைக் கொண்டிருந்தார்.

இக்காலங்களில் அவர் வரைந்ததுதான் **“லெடா”** எனும் நிர்வாண நங்கையின் ஓவியமாகும்.



**தோண்டும் கலையில் ஒரு சுண்டெலி கூட தத்துவ ஞானிக்கே போதிக்கலாம்**

சீனப் பழமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வோவியத்தில் 'லெடா' என்னும் மங்கை அன்னப் பறவை ஒன்றை அணைத்துக் கொண்டுள்ளாள். லெடாவின் காலடியில் இரண்டு முட்டைகள் உடைந்து கிடக்கின்றன. உடைந்த இரண்டு முட்டைகளிலிருந்து ஹெலன், கிளைடேமன்ஸ்ரா, கேஸ்டர், போலக்ஸ் ஆகிய நான்கு குழந்தைகள் வெளிப்படுகின்றன. லெடாவையும் அன்னத்தையும் அழகிய தாவரங்கள் சூழ்ந்துள்ளன.

தாவர இனங்களும், மனித இனமும் உயிர்த்தெழுவது போல் தோன்றும் இவ்வோவியத்தில் பின்புலக் காட்சிகளாக மலை, ஆறு, நிலம் காட்சி தருகிறது. மரபு வழியிலிருந்து மாறிய புதுவிதமான கருத்தமைவுக் குறியீட்டு ஓவியமாய் 'லெடா' விளங்கியது.

இதன் சூட்சுமத்தை அறிந்தவர்கள் லியனார்டோவை ஒரு 'மாந்திரீகவாதி' என்றே அழைத்தனர். இவ்வோவியம் அக்காலத்தில் வாழ்ந்த கலைஞர்களிடம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. 'லெடா' ஓவியத்தில் மனதைப் பறிகொடுத்த ரபேல் அதன் பாதிப்பில் "கலிடாவின் வெற்றி" என்னும் பூச்சோவியம் ஒன்றைச் செய்தார்.

மனித உடலுறுப்புக்கள் பற்றிய டாவின்சியின் ஆய்வுகள் மிக முக்கியமானவை. 15ம் நூற்றாண்டுக் கலைஞர்களைப் போல், உடலமைப்பின் புறத்தோற்றத்தையே முதலில் நுட்பமாக ஆராய்ந்தார். பின்னர், உடலுறுப்புக்களின் உள்தோற்ற அமைப்பில் மிக்க ஆர்வம் கொண்டவராய், பிணங்களை அறுத்துப் பார்த்து அங்கங்கள் எப்படி ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்வதில் கருத்தூன்றிச் செயற்பட்டார்.

இருதயத்தைப் பற்றிய இவருடைய ஆய்வுகள் மிகுந்த முற்போக்கானவை. துபற்றி எம். எஸ். எம். அனஸ் அவர்கள் **"விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானங்களும் ஒரு முறையியல் நோக்கு"** (1996: 44,45) என்ற நூலில் பின்வருமாறு விளக்குகின்றார்:

"ஓவியர் என்ற வகையில், உடற்கூற்றியல் அறிவை முக்கியமான தென அவர் மதித்தார். உடல்களை அறுவை செய்து மனித உடற்கூற்றியல் அமைப்பு பற்றிய நுணுக்கங்களைக் கோட்டோவியங்களாக்கியதுடன் அவை பற்றிய குறிப்புக்களையும் வரைந்தார்.

பின்னர் உடற்கூற்றியலிலிருந்து உடலியலை ஆய்வு செய்வதில் ஈடுபட்டார். இருதயத் தசைகளை ஆய்வு செய்து அடைப்பிதழ்களின் (Valves) செயற்பாட்டினை கோட்டோவியங்களைக் கொண்டு விளக்கினார். ஹார்வேயின் இரத்தச் சுற்றோட்டம் அறிமுகமாவதற்கு முன்னரே இரத்தச் சுற்றோட்டத்தின் விதிகளை டாவின்சி அறிந்திருந்தார். இரத்த ஓட்டத்தை மலையிலிருந்து தண்ணீர் ஆற்றுக்கும் கடலுக்கும் சென்று பின்னர் கடலிலிருந்து ஆவியாகி மீண்டும் மலைகளில் மழையாகப் பெய்வதுடன் அவர் ஒப்பிட்டார்.

கிட்டத்தட்ட 4000 பக்கங்களுக்கு மேற்பட்ட டாவின்சியின் எழுத்துக்களும் கோட்டோவியங்களும்அடங்கிய கைப் பிரதிகள் தற்போது ஆய்வுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றில் வார்த்தைகளாலும், விளக்கப் படங்களாலும் தான் உணர்ந்து அறிந்த பௌதீகச் சோதனைகள், பொறியியல் கருத்துக்கள், இயற்கையைப் பற்றிய தனது கவனிப்புகள் போன்றவற்றை அவ்வப்போது குறித்து வைத்தார். லியனார்டோவின் குறிப்புப் புத்தகங்களைப் படித்தால் அதில் அவர் பல்வேறுபட்ட பொருள்களைப் பற்றி, வேறுயாரும் கூறாத செய்திகளை அறிவியல் நோக்கத்துடன் குறித்துள்ளதைக் காணலாம்.

தாம் விளக்க முற்பட்ட கோட்பாடுகளுக்கு அழகானதும் திட்டவட்டமானதுமானவரை படங்களை வரைந்து விளக்கிக் காட்டியுள்ளார். இயந்திரங்களைப் பற்றிடாவின்சி எழுதியவரை படங்களை ஆராய்ந்த இருபதாம் நூற்றாண்டுப் பொறியியலாளர்கள், இக்காலப் பொருள்களுக்கேற்ற திட்டவட்டமான முன்மாதிரிகளைச் சரியானபடி உருவாக்கியுள்ளார் என்று கூறியுள்ளனர்.

டாவின்சியின் குறிப்புப் புத்தகங்களைப் படிப்பது கடினம். ஏனெனில் இவர் அதனைத் தலைகீழாகவும், இடப்புறமிருந்து வலப்புறமாகவும் எழுதியுள்ளார். அதனைக் கண்ணாடியில் பார்த்துத்தான் படிக்க வேண்டும்.

இதைக் கண்ணாடி எழுத்து முறை (*Mirror Writing*) என அழைப்பர். தம் கருத்துக்களை ஒருவரும் திருடக் கூடாது என்னும் காரணத்துக்காக அம்முறையைக் கையாண்டார்.

லியனார்டோவின் கைப் பிரதிகளில் உள்ள குறிப்புக்களும் கோட்டோவியங்களும் அவரது பன்முகத் திறன்களை பறைசாற்றுகின்றன.

ஒரு நிபுணன்!
புதுவிதமான போர்க் கருவிகளைக் கண்டுபிடித்தவன்!
ஒரு கட்டிடக் கலைஞன்!
சிறந்த சிற்பி!
மாபெரும் ஓவியன்!
நீரியல், பொறியியல் வல்லுநன்!
சலவைக் கல்லாலும், வெண்கலத்தாலும் சிலை வடிக்கும் சிற்பி!....

இவ்வாறெல்லாம் தன் கடிதங்களில் தன்னைத்தானே புகழ்ந்து எழுதிக் கொள்வார் டாவின்சி. ஆனால் இவை வெறும் வெற்றுப் புகழ்ச்சிகள் அல்ல. உண்மையிலேயே அவை மிகச் சரியானவை, உறுதியானவை என்பது வரலாற்றில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

நன்னூற் சூத்திரமொன்று பின்வருமாறு சொல்கின்றது:

**"தம்மைப் புகழ்தலும் தகும் புலவோர்க்கே"**



ஒரு தேவதை



டாவின்சி வரைந்த உடற்கூறுகள்

**அவள் அவனை ஆளக்கூடாது என்பதற்காக கடவுள் ஆணின் தலையில் இருந்து பெண்ணை படைக்கவில்லை. அவள் அவனுடைய அடிமையாக இருக்கக் கூடாது என்பதற்காக ஆணின் காலில் இருந்து பெண்ணை படைக்கவில்லை. அவள் அவனின் அருகே இருக்க வேண்டும் என்பதற்காகவே கடவுள் ஆணின் விலா எலும்பில் இருந்து பெண்ணை படைத்தார்**

ஹிப்ரு பழமொழி

**ஓர் அழகுள்ள தாரமாரே கலையின் நிறைவேற்றம்**

ஃப்ரென்ச் பழமொழி

**மேதைத் தன்மை ஒரு பரம்பரை உரிமையன்று**

அமெரிக்கப் பழமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கான
"சென்றல்"
இடம்
வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

# கவர்ச்சியான வட்டி

லீசிங்

காப்புறுதி வசதிகள்

வாடகை உரித்து

கழிவு பற்றுச் சீட்டு (பில்):

ஃபினான்ஸ் வர்த்தகம்

செயற்பாட்டு வரி

வீடு, சொத்து கடன்

## வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

தலைமை அலுவலகம்
84, இராஜ வீதி, கண்டி. தொலைபேசி: 08-234278, 234247, 234394, 223842, 227000

நகர அலுவலகம்
270, வக்சோல் வீதி, கொழும்பு -02. தொலைபேசி: 448573, 300555

காட்சியறை
254, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொலைபேசி: 08-234234, 08-234235

கிளை அலுவலகம்
அநுராதபுரம், பதுளை, தெஹிஅத்தகண்டிய, காலி, கம்பஹா, குருநாகல், மாத்தளை, மாத்தறை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை

செழிப்பாய் வளரவும் சுபீட்சம் பெறவும் நாம் உங்களுக்கு உதவுவோம்

10814


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏதாவதொரு துப்பாக்கி என்னை ஒருநாள் மௌனிக்கப் பண்ணிவிடும். அது ஒரு அந்நியனால் ஏந்தப்பட்ட துப்பாக்கியாக இருக்காது. மாறாக எனது வரலாற்றைப் பகிர்ந்துகொள்ளும் இதே சமூகத்துப் பெண்ணொருத்தியின் கருப்பையிலிருந்து உதித்த மகனொருவனாலேயே அது நிகழும்!"

15.09.1989 அன்று ராஜனி இறுதியாகத் தன் சகோதரிக்கு எழுதிய கடிதத்திலிருந்து....

மண்ணில் புதைத்தது
உன் உடலையல்ல.
சுதந்திரத்துக்கான வித்து
ஒன்றையே....!

அயல்நாட்டிலிருந்து
ஓடிவந்ததும்,
அந்திசாயும்வரை
உழைத்ததும்
அரக்கர்களால்
சரிக்கப்படவா...?

தமிழினத்தின்
விஷ வேர்களை
விசாரித்த ஓர் அன்னை
இரத்தம் வடிய
தெருக்களில்
பிணமானாய்....!

நீ
கூவ நினைத்ததால்
குரள்வளை இழந்தவள்
தாவ நினைத்தாதல்
தட்டப்பட்டவள்
வீரமாய் எழுந்ததால்
வீழ்த்தப்பட்டவள் -
நியாயத்தை
விதைக்க நினைத்ததால்
(அதனுடன்)
புதைக்கப்பட்டவள்.

யாழ் மருத்துவபீட
மாணவர்கள்
(22-09-1989)

இதிலுள்ளவை
ஊர்வலத்தில் ஏந்திச்
செல்லப்பட்ட சுலோகங்கள்
மற்றும் விடப்பட்ட
அஞ்சலி செய்திகளில் சில

## எங்கே போகிறோம்.....

...... இவர் ஈனத்தனமாக படுகொலை செய்யப்படுமளவிற்கு இவர் செய்த குற்றம்தான் என்ன?

கொண்ட கொள்கையே கண்ணாக, மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராக சேர்ந்து பின்னர் இங்கிலாந்தில் உடல் அமைப்பியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்று, எமது நாட்டுப் புத்திஜீவிகள் பலரும் எமது நாட்டில் நிகழும் நிகழ்கால நிகழ்வுகளை எதிர்நோக்கப் பயந்து வெளிநாடுகளில் தமது சுக போகங்களை மட்டுமே நோக்கமாகக் கொண்டு வாழும்போது 3 வருடங்களின் முன் மீண்டும் வந்து சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றியதா?

எத்தனையோ தமிழ் வைத்திய கலாநிதிகள் வெளிநாடுகளில் இருக்கும் நிலையில், எமது மருத்துவபீடம் முடப்படுகின்றன அபாயத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்ற வேளையில், தனியொருத்தியாக தனது இரண்டு பெண் குழந்தைகளுடனும், மருத்துவத்துறையில் சுவை மிகுந்த ஒரு துறையான உடலமைப்பியல் துறையினை மிகத் திறம்பட நடத்திக் கொண்டு வந்ததா?

மாணவர்களிடம் கண்டிப்பு நிறைந்த ஒரு விரிவுரையாளராகவும், இடர் நேரிடுகையில் ஓர் தாயைப் போலவும், விழாக்களில் ஒரு தோழியைப் போன்றும் அன்புடனும் பட்சத்துடனும் திறந்த மனத்துடனும் எளிமையுடனும் நெருங்கிப் பழகியதா?

மாணவர் பிரச்சினையில் ஓர் விரிவுரையாளர் என்ற உயர்நிலையில் நின்று பாராமல் தானும் ஓர் மாணவி போல் பிரச்சினைகளை அணுகி சக விரிவுரையாளர்களுடன் வாதாடி மாணவர் பிரச்சினையைத் தீர்த்து வைத்ததா?

எமது சமுதாயம் இவரைப் போன்ற ஓர் விரிவுரையாளரை எமது பீடம் இனி ஒருபோதும் பெற முடியாது.

யாழ். பல். மாணவர் ஒன்றியம் (22-09-1989)

முறிந்த சமுதாயத்தை
நிமிர்த்த நினைத்தாய்.
முதுகெலும்பு
இல்லாதவரால்
முடிக்கப் பட்டாய்!

உறங்கும்
உண்மைகளை
எழுப்பினாய்.
அதனால் நீ
உறங்குகிறாய்!

சிந்தித்தவளே, நீ சிந்திய
இரத்தத்தால்
சிந்தனைகள் பல
உருப்பெற்றன.

Madam, your
body has left us.
But your sprit
leads us.

செய்ததெல்லாம்
என்ன?
ஆக ஒன்றே
ஒன்றுதான்......

செய்த கொலையின்
அலுப்புத்தீர
குளித்துச் சாப்பிட்டுவிட்டு
யாதொரு கலக்கமும்
இன்றி
சேமமாய் உறங்கும் உலகு

பல்குத்தும் துரும்பு
பாதையோரத்தில்
ஆறுதலாய்....
கழிவுகள் தேங்கும்
குட்டையில்
ஈரம் தோய்ந்த கடதாசியும்
ஈரமாய்... தானாய்....
எல்லாமும் அது அதுவாய்
இது இதுவாய்
ஆனாலும்......
நீ எதற்காக நீயாக
இருந்தாய்?
நீ மனிதனல்லவா!

இப்படி நேரும்படிக்கு
நீ செய்ததெல்லாம்
ஒன்றே ஒன்றுதான்.....
வாழ்ந்தது....
வாழ்ந்தது....
உண்மையாய்
வாழ்ந்தது....

யாழ். பல். கலைப்பீட
மாணவர் மன்றம்
(22-09-1989)

We salute a martyr for
the greatest
strivings of the human sprit.
The anger of mankind
will consume the killers.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதினங்கள்

புகைத்துக் கொண்டிருந்த அடுப்பை ஊதிப் பற்ற வைப்பதில் முனைந்திருந்தாள் கனகம்மாள்.

"கனகம்! கனகம்!"

வாசலில் யாரோ அழைக்கும் சத்தம்.

"உனக்கொரு புதினம் தெரியுமே இவள் தங்கத்தின்ரை பெட்டையல்லோ, மனேச்சர்ரை பெடியனோடை ஓடிவிட்டாள்" வாசலில் நின்றபடியே கூறி முடித்தாள் காமாட்சி.

கனகம்மாவின் இமைகள், அப்படியோ! என்ற ஆச்சரியத்துடன் மேலுயர்ந்தன. தனக்கு முன் காமாட்சிக்கு இது தெரிந்துவிட்டது என்பதில் மனவருத்தம், எனினும் காட்டிக் கொள்ளவில்லை.

"அப்ப நான் வாறன் நீ பின்னேரம் அருணா வீட்டை வாவன்" கூறியபடி நடந்தாள் காமாட்சி.

கனகம் கைகளைப் பிசைந்தபடியே வீட்டினுள் நுழைந்தாள். உள்ளம் பட்டாம்பூச்சியாய் சிறகடித்தது. அயல் வீட்டு அருணாவுக்குச் சொல்லிவிட வேண்டுமென்று மனதுக்குள் ஒரு வேகம். தலைக்கு மேல் வேலை. வேலைகள் துரித கதியில் நடந்தன.

வீடு திரும்பிய கணவன் தம்பித்துரைக்கு உணவு பரிமாறியபடி கேட்டாள், "இவள் தங்கத்தின்ரை பெடிச்சி ஓடீட்டாளாம் மெய்யே..?" தான் அறிந்ததை உறுதி செய்து கொள்ள விரும்பினாள்.

"உந்த விண்ணாணங்கள் ஒன்றும் எனக்குத் தெரியாது. உதுகளை ஆரும் உன்னை மாதிரி பெண்டுகளிட்டைக் கேள்" சூள் கொட்டிய குரலுடன் உணவில் ஆர்வம் காட்டினார் தம்பித்துரை...

"நான் உதிலை அருணா வீட்டை போட்டுவாறன்" கனகத்தின் குரல் தம்பித்துரையின் காதில் புகுந்ததோ தெரியாது, அவரிடம் இருந்து பதிலேதுமில்லை.

அருணா வீட்டை அண்மித்த கனகத்தின் காதுகளில் குரலோசைகள் பலமாகக் கேட்டன. கனகத்தைக் கண்டதும் வெற்றிலைக் காவிப் பற்கள் புன்னகைத்தன.

"என்ன, மனேச்சற்றை பெடியனோடை தங்கத்தின்ரை பெட்டை ஓடீட்டாளாம்" கேள்வியை வீசிவிட்டு அமைதியானாள் கிளி.

"நேற்றுப் பின்னேரம் நடந்தது அது, பெட்டை தனியாகப் போகேக்கை நான் யோசிச்சனான் ஏதோ விஷயம் இருக்கெண்டு" தனது ஊகம் பலித்துவிட்ட முகபாவனையுடன் பூபதியின் குரல் வந்தது.

"தங்கம்மாக்கா, மாப்பிள்ளை பிடிக்கிறதில சூரி.... மூத்தவள் முகுந்தனைக் கட்டிக் கொண்டோடினாள் எல்லே, உது தெரியாதே! ஆனால் அவள் வல்லமையான பெட்டை. அவனைக் கனடாவுக்கு அனுப்பி தானும் பிறகு போய்ச் சேர்ந்திட்டாள்" வயிற்றெரிச்சல் தொனிப்புக் குரலுடன் கிளி.

"உவள் அருணா எங்கை போட்டாள்" கனகத்தின் குரல் பதிலை எதிர்பார்த்து நின்றது.

"அங்கை வாறாள்! உவளுக்கு சாவில்லை" வரவு பூபதியால் அறிவிக்கப்பட்டது.

"கடையடியிலை ஏதும் புதினமோ!" கனககத்தின் குரல், ஆவலைத் தேக்கியிருந்தது.

அருணா முகத்தை குலுக்கியபடி தனது விடையை வைத்தாள்.

"ஏதோ கொஞ்சம் பிரச்சினையாம். ஆதலால்தான் பெட்டை ஓடீட்டாளாம், பெடிச்சி உண்டாகியிருக்கிறாள் என்றும் கதை"

அமைதியாக இருந்த பூபதி வெற்றிலையைத் துப்பிவிட்டு, "எண்டாலும் உப்பிடியான கதையளைக் கண்டபடி கனக்கக் கதைக்கக் கூடாது. கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்த கதையாய்த் தான் முடியும்."

பூபதியின் பதிலைக் கேட்ட அருணாவின் முகபாவனை இறுகியது. கனகத்துக்கு சம்பாசணை சுவையாக இருந்தது. இருந்தாலும் வெளிக்காட்டவில்லை.

என்ன நினைத்தாளோ பூபதி மெல்ல எழுந்தாள்.

"வீட்டை கொஞ்சம் வேலை கிடக்கு வாறன்" நடந்தாள் பூபதி.

அருணாவின் உதடுகள் கோணலாக சுழிப்படைந்தது.

"உவ இன்னும் கொஞ்ச நேரம் உதிலை இருந்தா, என்னிட்டை நல்லா வேண்டிக் கட்டியிருப்பா"

"அங்கார தங்கம் போறாள்" திடீரென்று ஒலித்த கனகத்தின் குரலைக் கேட்டு பரபரப்படைந்தனர் எல்லோரும்.

"தங்கம், தங்கம்!" கிளி கூப்பாடு போட்டு அழைத்தாள்.

தயக்கத்துடன் மெல்ல அவர்களை நோக்கி வந்தாள் தங்கம்.

"என்ன தங்கம் யோசிச்சுக் கொண்டு வாறாய். இனி என்ன செய்யிறது...."

நடந்தது நடந்து போச்சு என்னுமாப் போல கனகத்தின் குரல் ஒலித்தது. அதில் சிறு நளினமும் தொனிக்கத்தான் செய்தது.

"சின்னஞ் சிறுசுகள் ஏதோ தெரியாத்தனமாய்ச் செய்து போட்டுதுகள். ஊருலகம் நாலு விதமாய் கதைக்கக்கிடையிலை கலியாணத்தை முடிச்சுப் போடு!" வலிந்து வரவழைத்துக் கொண்ட அனுதாபக் குரலில் அருணா.

தங்கத்தின் முகத்தில் எதுவித எதிர்க்குறியும் இல்லை.

"இப்ப உதெல்லாம் சாதாரண விஷயம். இளசுகள் தாங்கள் விரும்பிச் செய்யிற கலியாணத்தைத்தான் நல்லது எண்டு நினைக்குதுகள். கால மாற்றம்.... உதுகளை பெரிசாய் எடுக்கக் கூடாது"

கனகத்தின் குரல் அருணாவின் குரலுக்கு ஒத்து ஊதியது....

"நல்ல நாளாய்ப் பார்த்து கலியாணத்தைச் செய்து விட்டியள் எண்டால் அதோடை பிரச்சினை முடிஞ்சுது"

தங்கத்தின் அமைதியைக் கிளற அருணாவின் குரல் மீண்டும் விண்ணாணமாய் நீண்டது....

"உது கிடக்கட்டும் இவள் பூபதிக்கும் உங்களுக்கும் ஏதேனும் பிரச்சினையே? உங்களைப் பற்றி குறையாய்ச் சொன்னாள்.... 'ஆட்டக்காரிகள் மாப்பிள்ளை பிடிக்கிறவை' எண்டு! நான்தான் பிறகு சந்தர்ப்பவசமாய் நடந்து போச்சு அதைப் பெரிசு பண்ணிக் கதைக்கக் கூடாது எண்டு சொன்னனான். அவவுக்கு அது பிடிக்கேல்லை எழும்பிப் போயிட்டா" மேலும் மெருகூட்டி அருணாவின் குரல் நின்றது.

தங்கம்மாவிடமிருந்து பெருமூச்சு ஒன்று கிளம்பி அடங்கியது.

"பூபதிக்கும் எங்களுக்கும் ஒரு பிரச்சினையும் இல்லை, இப்ப கூட நான் அவளோடை கதைச்சிட்டுத் தான் வாறன்! இந்த ஊரிலை இருக்கிற வேலை வெட்டி இல்லாதவை என்னென்ன மாதிரிக் கதைக்கினம் எண்டெல்லாம் எனக்குத் தெரியும், இஞ்ச இருக்கிற சிலருக்கு மற்றவையைப் பற்றிக் கதைக்காட்டி விடியாது"

தங்கத்தின் குரல் கேட்போரின் முகத்தில் அறைந்தது. நிசப்தம் நிலவியது.... தங்கத்தின் குரல் நிசப்தத்தைக் குலைத்து மீண்டும் தொடர்ந்தது.

"சும்மா இருந்து வம்பளந்து வீணா கதைகளைக் கட்டிவிட்டு மற்றவையைக் கிண்டிப் பார்க்கிறதிலை என்ன ஆனந்தமிருக்கோ எனக்குத் தெரியாது. ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு மாதிரிக் கதைத்து தங்கடை சொந்த முகங்களை சமுதாயத்திற்கு மறைத்துக் கொண்டு வாழுகினம். உது கன நாளைக்கு நிலைக்காது. எண்டைக்காவது எல்லார்ர வண்டவாளமும் வெளிக்கத்தான் செய்யும். நாங்கள் எங்களுக்கை கிடக்கிற ஊத்தையளை அகற்றுறதை விட்டிட்டு மற்றவையின்ரை முதுகைப் பாக்கிறம்...."

ஆவேசம் வந்த பேச்சாளரின் குரலோசையாக தெறித்து விழுந்தது தங்கத்தின் குரல்.

கனகம் தனக்கு இதில் சம்பந்தமில்லைப் போல் வேறு எங்கோ பார்வையை மேய விட்டிருந்தாள். கிளியின் வாய் மூடியே இருந்தது.

தங்கம் போனபின் சற்று நேரம் மௌனம் நிலவியது. தங்கம் சொன்னதெல்லாம் இவர்களை உசுப்பி தங்கள் கேவலத்தை உணரச்செய்து விட்டதோ என்று ஒருகணம் தோன்றியது.

ஆனால் மௌனம் கலைந்து கனகம்மா மெதுவாகப் பேச்சை எடுத்தாள்.

"உவள் பூபதிதான் ஏதோ இவளுக்கு அண்டிப் போட்டாள்"

'இருக்கலாம்' என்பது போல அருணாவின் தலை தொய்வாக அசைந்தது.

அடுத்த கதைக்கு ஆயத்தப் படுத்த வெற்றிலை பாக்குகளை அள்ளி வாயில் போட்டுக்கொண்டனர் இருவரும். •

கனகலிங்கம் தர்மசேகரம்
முகமாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த நூற்றாண்டுப் புரட்சிகள்

## எழுச்சியும் வீழ்ச்சியும்

# புரட்சியால் ஏற்பட்ட தவறுகள்

கியூபா -2

தாக்குதல் நடத்துவது பற்றி கியூபப் புரட்சியாளர்கள் மிக இலகுவாகவே சிந்தித்தனர். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றினால் அதை எவ்வாறு தக்கவைத்துக் கொள்வது, நாட்டை ஆட்சி செய்வது எப்படி என்பது பற்றிய எந்த ஒரு திட்டமும் அவர்களிடமிருக்கவில்லை.

ஆனாலும் இவ்வாறான போர்க்குணாம்சம் மிக்க இளைஞர் குழுக்களிடையே எப்போதும் காணப்படுகின்ற அபரிமிதமான துணிச்சலும் அர்ப்பணிப்பும் அவர்களிடம் இருந்தது.

ஒரு சமூகத்தை விடுதலை செய்கின்ற மிக உயர்ந்த பணி தமது தோள்களின் மீதுதான் சுமத்தப்பட்டிருக்கின்றது என்கிற நெஞ்சம் நிறைந்த உணர்வும் உத்வேகமும் அவர்களிடம் நிறையவே காணப்பட்டது.

சில ஆயுதங்களும் அர்ப்பணிப்புடன் கூடிய வீரம் மிகுந்த இளைஞர்களும் இருந்து, அவர்கள் துணிவுடன் மோதக் கூடியவர்களாகவும் இருந்தால் உலகில் எந்தவொரு இராணுவ பலத்தையும் தோற்கடிக்க முடியும் என அவர்கள் நம்பினர். சரியாகச் சொல்வதானால், அமெரிக்க சினிமாக்களில் வரும் வீரம் மிகு கதைகளைப் போல தோல்வியைப் பற்றிக் கிஞ்சித்தும் சிந்திக்காத ஒரு நிலை எனக் கூறினாலும் தப்பில்லை.

எவ்வாறாயினும் சில நாட்களில், ஃபிடல் கஸ்ட்ரோவுடன் இன்னும் சில உணர்வுமிக்க இளைஞர்களும் யுவதிகளும் சேர்ந்து கொண்டனர். **ஹாடி சாந்தமரியா, மெல்பா ஹர்னான்டஸ்** என்னும் இளம் பெண்கள் உட்பட 167 பேர் கொண்ட ஒரு குழுவை அவர்கள் அமைத்துக் கொண்டனர்.

தம்மால் இயன்றவரை பணம் தேடி தேவையான ஆயுதங்களை கள்ளச் சந்தையிலே வாங்கிக் கொண்டனர். தமது தாக்குதல் திட்டம் பற்றி நூற்றுக்கு நூறு வீதம் இவர்களிடம் நம்பிக்கையிருந்தது. 167 பேரில் எவருமே 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் அல்லர். பெரும்பாலோர் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாகவும் இருந்தனர்.

அவர்களின் திட்டப்படி SEE BONG என்னும் ஒரு கோழிப் பண்ணையில் ஆயுதங்களை சேகரித்து வைத்து அங்கு ஆயுதப் பயிற்சியும் மேற்கொள்ளப்பட்டது.

அதன் பின்னர் BAYAMO என்னும் இடத்தில் அமைந்திருந்த சிறு முகாமைத் தாக்குவதற்காக 27பேரும், சிவில் வைத்தியசாலையைக் கைப்பற்றுவதற்காக **ஆபெல் சாந்த மரியா** என்பவரின் தலைமையிலான ஒரு குழுவும், நீதிமன்றக் கட்டடத்தைக் கைப்பற்றுவதற்காக **ராகுல் கஸ்ட்ரோவின்** தலைமையிலான ஒரு குழுவும் மொன்காடா என்னும் பிரதான தளத்தை தாக்குவதற்காக **பிடல் கஸ்ட்ரோவின்** தலைமையில் ஒரு குழுவும் செயற்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டு திட்டம் தீட்டப்பட்டது.

1953 ஜூலை 22ம் திகதி மிக அவசர அவசரமாக ஒரு அறிக்கை இப்புரட்சிக் குழுவினரால் வரையப்பட்டது. கியூபாவின் அதிகாரம் கைப்பற்றப்பட்டதும் உடனடியாக நாட்டு மக்களுக்கு விடுக்கப்பட வேண்டிய செய்தி அவ்வறிக்கையில் எழுதப்பட்டிருந்தது.

1953 ஜூலை 26ம் திகதி திட்டமிட்டபடி BAYAMO முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தோல்வியில் முடிவடைந்தது. அதே போல சிவில் வைத்தியசாலை, மொன்காடா, நீதிமன்றக் கட்டிடம் என்பவற்றின் மீதான தாக்குதல்களும் தோல்வி கண்டன.

புரட்சிகரத் தாக்குதல் நடத்தும் போது புறவயமாக இருக்கக்கூடிய பல்வேறு காரணிகளை கணக்கில் எடுக்காமல் திட்டம் தீட்டியதே இத்தோல்விக்குக் காரணம்.

தாக்குதல் தோல்வி கண்டால் பின்வாங்குங்கள் என கட்ஸ்ரோ கட்டளை பிறப்பித்திருந்தாலும் கூட வைத்தியசாலையைத் தாக்கச் சென்றவர்களில் 19 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

தாக்குதலின் பின்பு பல்வேறு இடங்களில் வைத்து எல்லாமாக 68 பேர் கைது செய்யப்பட்டு மிக மோசமாக சித்திரவதைக்குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். 32 பேர் சிறையில் அடைக்கப்பட்டனர். உயிர் தப்பிச் சென்றவர்கள் 50 பேர் மட்டுமே.

இவ்வேளை, சாதாரணமாக அரச இராணுவங்கள் செய்வது போல் கியூப அரசும் கண்ட கண்ட இடங்களில் எல்லாம் இளைஞர்களைக் கைது செய்தது. விசாரணையின் போது சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டவர்களின் உடல்கள் வீதிஓரங்களில் போட்டுக் கொழுத்தப்பட்டன.

இம் மோசமான சூழ்நிலைக்கெதிராக கியூப சமூகத்தில் இருந்த படித்தவர்கள் உடனடியாக குரல்கொடுக்க ஆரம்பித்தனர். **கர்ணல் ரியோ வாவியானோ** என்பவன் தலைமையில் நடந்த இவ் இளைஞர் வேட்டையை நிறுத்துவதற்காக பல நீதியரசர்களும் உயர்தொழில் வகித்தோரும் சந்தியாகோ நகரில் வாழ்ந்த **என்ரிச் பெரோஸ் ஜெருண்டஸ்** என்னும் மத குருவை சந்தித்துப் பேசினர்.


கர்ணல் வாவியானோவைச் சந்திப்பதற்கு அம் மத குருவை இணங்கச் செய்தனர். 70 வயது நிரம்பிய மிகப் பிரபலமான அம் மதகுருவின் முன்னால் கர்ணல் வாவியானோ சற்றுப் பின்வாங்க நேரிட்டது.

"நீ இங்கு இளைஞர்களைக் கொலை செய்வதை நிறுத்த வேண்டும். ஒரு இளைஞனேனும் கொல்லப்படுவதை நான் அனுமதிக்க மாட்டேன்" என மிக உறுதியாகக் கூறியதோடு, ஒரு பொது அறிக்கையையும் அவர் வெளியிட்டார். அதன் பின்பு கைது செய்யப்பட்டிருந்தவர்களின் உயிருக்கு ஒருவாறான உத்தரவாதம் கிடைத்தது.

ஃபிடல் கஸ்ட்ரோ உட்பட ஏனைய இளைஞர்கள் தலைமறைவாக இருந்த இடத்திற்கு ஒரு நீதியரசருடன் அம்மதகுருவானவர் விஜயம் செய்து அவர்களை தன்னிடம் வந்து சரணடையுமாறு கோரிக்கை விடுத்தார்.



படிஸ்டாவின் இராணுவ விசாரணையில் ஃபிடல்



சிறையிலிருந்து விடுதலை பெற்று வரும் ஃபிடலும் தோழர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் அக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்களாயினும்,.ஃபிடல் தொடர்ந்தும் தலைமறைவாக இருக்கத் தீர்மானித்தார். ஆனாலும் பின்னர் இராணுவத்தினருக்குக் கிடைத்த தகவலின்படி ஒரு கிராமத்துவீட்டில் ஒளிந்திருந்த சமயம் பிடல் கைது செய்யப்பட்டார்.

அவரைக் கைதுசெய்த 53வயது நிரம்பிய கறுப்பினத்தைச் சேர்ந்தவரான லெப்டினன் பெட்ரோ சாரியார் ஃபிடல் மீது வைத்திருந்த மரியாதை காரணமாக பிடலின் உயிர் தப்பியது.

கைது செய்யப்பட்டவர்களை வாவியானோவின் முகாமுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என கட்டளை இருந்தாலும் பெட்ரோ ஃபிடலை அங்கு அனுப்பாமல் பொனியாட்டா என்னும் சிறைச்சாலைக்கு நேராக அனுப்பி விட்டதனால் சித்திரவதைகளிலிருந்து ஃபிடல் தப்ப முடிந்தது.

ஜுலை 26ம் திகதி தாக்குதலின்போது பிடிபட்ட **மெல்பா கார்டினான்டஸ்** மற்றும் **கார்டி சாந்த மரியா** போன்றவர்களும் இந்த பொனியாட்டா முகாமிலேயே சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

ஃபிடல் கஸ்ட்ரோ மீது மிகவும் ஆத்திரமுற்றிருந்த கியூப ஆட்சியாளர்கள் உடனடியாக அவர் மீது வழக்குத் தொடர்ந்தனர். நீதிமன்றத்தில் தனக்காக தானே வாதிடப்போவதாக கஸ்ட்ரோ அறிவித்தபோது இராணுவ ஆட்சியாளர்கள் மிகவும் கலவரமடைந்தனர்.

மிகவும் கவர்ச்சியான பேச்சுத்திறன் மிக்க கஸ்ட்ரோ நீதிமன்றத்தை தன் அரசியல் மேடையாக்கிக் கொள்வார் எனும் உண்மையை அவர்கள் மிகத் தெளிவாகப் புரிந்திருந்தனர்.

எனவே கஸ்ட்ரோ சுகவீனமுற்றிருப்பதாகவும் அவரது வழக்கு விசாரணை மக்கள் கூடி நின்று பார்க்கும் நீதிமன்றத்தில் நடத்தப்பட மாட்டாது என்றும் அவரை அனுமதித்திருக்கும் வைத்தியசாலையிலேயே விசாரணை நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

அங்கு அனுமதிக்கப்பட்டிருந்த ஒரே ஒரு பத்திரிகை நிருபரான **மார்த்தா ரொஜர்ஸ் ரொட்ரிகோஸ்** என்பவர் ஃபிடலினுடைய பேச்சை அழகாகத் தொகுத்து முழு உலகிற்கும் பரப்பினார்.

மிகப் பிரபலமான, புரட்சிகர இளைஞர் இயக்கங்களால் போற்றப்படுகின்ற, புரட்சியாளர்களின் இதயங்களை சிலிர்ப்புக் கொள்ள வைக்கின்ற ஃபிடலின் **“வரலாறு என்னை விடுதலை செய்யும்”** என்னும் உரை அதுவேயாகும்.



**“போர்க் குணாம்சம் மிக்க இளைஞர் குழுக்களிடையே எப்போதும் காணப்படுகின்ற அபரிமிதமான துணிச்சலும் அர்ப்பணிப்பும் அவர்களிடம் இருந்தது. ஒரு சமூகத்தை விடுதலை செய்கின்ற மிக உயர்ந்த பணி தமது தோள்களின் மீதுதான் சுமத்தப்பட்டிருக்கின்றது என்கிற நெஞ்சம் நிறைந்த உணர்வும் உத்வேகமும் அவர்களிடம் நிறையவே காணப்பட்டது.”**

1955ம் ஆண்டு பின்சே சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்படும் வரை மிக மோசமான மன உளைச்சலுக்கு உள்ளானார். குடும்பத்தின் பொருளாதார நிலை, தனித்து விடப்பட்ட மனைவியின் நிலை அவரை மனோ ரீதியாக வாட்டியது.

1954ல் ஜுலை 31ம் திகதி அவரின் மிக நெருங்கிய நண்பரொருவருக்கு எழுதிய கடிதத்தில் - **“நான் என்னால் நிறைவேற்றப்பட வேண்டி இருக்கும் ஒரு பாரிய பணியைச் செய்வதற்காகவே உயிர் வாழ்வதாகக் கருதுகிறேன். கடந்த ஆண்டில் கைது செய்யப்படும் பொழுது நான் இறந்து போயிருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்”** என பிடல் குறிப்பிட்டுள்ளார்.






இவ்விளம் புரட்சியாளர்கள் சிறையிலிருந்து வெளிவரும்வரை இவர்கள் மிக முக்கியமான வீரர்களென எவருமே நினைத்திருக்கவில்லை. பெரிதாகக் கவனத்திலெடுக்கத் தேவையற்ற சில முட்டாள் இளைஞர்களென்றே பலரும் கருதினர்.

பின்சே தீவில் சிறை முகாமில் இருந்து விடுதலை பெற்று வருகின்ற பொழுது அத்தோணிக்குள் வைத்துத்தான் இனிமேல் என்ன செய்யப் போகிறோம் என்பதைப் பற்றிக் கூட பேசும் அளவிற்கு அவர்கள் புரட்சியைப் பற்றி மிக இலகுவாகவே சிந்தித்தனர்.

சிறையிலிருந்து வந்ததன் பின் தமது முதலாவது அறிக்கையில் **“எமது விடுதலை என்பது வெறும் விடுமுறையைக் கழிப்பதாக இருக்காது. இந்நாட்டில் அதிகாரத்துவத்தையும் வறுமையையும் ஒழிப்பதற்காக இன்றிலிருந்தே மீண்டும் எமது போராட்டம் ஆரம்பமாகும்”** என அவர்கள் அறிவித்தனர்.

இவ்விளைஞர்களின் பேரும் புகழும் பல நாடுகளுக்குப் பரவியதை தடுக்க படிஸ்டாவின் அரசாங்கம் பல முயற்சிகளை மேற்கொண்டது.

அதன்படி முதற் கட்டமாக ஃபிடல் உட்பட இவ்விளைஞர் குழு கம்யூனிஸ்ட்டுகள் என வெற்றிகரமாக கதை பரப்பத் தொடங்கியது. **எடி சிபாஸ்** அவர்களின் இடதுசாரிக் கட்சியின் அங்கத்தவராக இருந்ததோடு இக்கட்சிக்காக தேர்தலிலே ஃபிடல் போட்டியிட்டதைக் காட்டியே படிஸ்டா அரசு இக்கதையைப் பரப்பியது.

இவ்விடத்தில் தானும் தனது இயக்கமும் கம்யூனிஸ்ட் கொள்கையாளர்கள் அல்ல என்பதை உறுதிப்படுத்த ஃபிடல் கஸ்ட்ரோ **‘பொய் சொன்னது போதும்’** என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை *LA BOHEMIA* என்னும் சஞ்சிகைக்கு எழுதினார்.

தான் 1956 மார்ச் 19ம் திகதியே அக்கட்சியிலிருந்து விலகிவிட்டதாகவும் ஃபிடல் அறிவித்தார்.

கியூபாவில் இருந்து மெக்சிகோவிற்கு ஃபிடல் சென்றபோது அங்குள்ள பொலீஸ் காரியாலயத்தில் தான் கம்யூனிஸ்ட் அல்ல என நிரூபிப்பதற்கு ஃபிடல் சிரமப்படும் அளவிற்கு படிஸ்டாவின் பிரசாரம் பலமாக இருந்தது.

இக் காலகட்டமானது கியூபப் புரட்சியாளர்களுக்கு சோதனை மிக்கதாக இருந்தது. தமது நாட்டின் நிலையைப்பற்றி மெக்ஸிகோ எங்கும் கூட்டங்கள் வைத்து பணம் சேகரிக்கும் பணியில் அவர்கள் ஈடுபட்டனர்.

மிகச் சிரமப்பட்டு 18 ஆயிரம் டொலர்களை அவர்கள் சேகரித்துக் கொண்டனர். அப் பணத்தில் மெக்ஸிகோ தலைநகருக்கு வெளியேயிருந்த ஒரு கிராமத்தில் *RAM VOLA ROSA* என்னும் விவசாயப் பண்ணையை விலைக்கு வாங்கி மீண்டும் தங்கள் இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கான ஆயுதப் பயிற்சிகளை அங்கு மேற்கொள்ளத் தொடங்கினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் எதிர்பாராதவிதமாக மெக்சிகோ பொலிஸாரினால் சுற்றி வளைக்கப்பட்டு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அதன்பின் மீண்டும் ஆரம்பத்திலிருந்தே எல்லாவற்றையும் செய்ய வேண்டியிருந்தது.

புதிதாக ஒரு முகாம் அமைத்து **கேர்ணல் பாயே** என்பவரிடமிருந்து துப்பாக்கி சுடுதல், அணிவகுத்தல், ஆறுகளைக் கடத்தல், பற்றைகளுக்குள் பாம்புகளிடமிருந்து தப்புதல், அரைகுறை உணவோடு வாழ்தல், விழித்திருத்தல் போன்ற பயிற்சிகளைப் பெற்றனர்.

இக் கட்டத்தில்தான் ஆர்ஜன்டீன உயர் மத்தியதர வர்க்கத்தைச் சார்ந்த **எர்னர்ஸ்டோ சேகுவேரா** என்னும் இளம் வைத்தியர் கியூபப் புரட்சியாளர்களோடு சேர்ந்து கொண்டார்.

கியூபாவை படிஸ்டாவின் ஆட்சியிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கான போராட்டம் இலகுவானதல்ல எனப் புரிந்துகொண்டிருந்தபோதும் ஃபிடல் கஸ்ட்ரோ, '1956 டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் கியூபாவுக்குத் தன் படையோடு நுழைவேன்' என ஓர் அறிக்கையை விடுத்தார்.

கஸ்ட்ரோவின் இவ் அறிக்கையால் கேர்ணல் பாயோ கவலையடைந்தார். ஆனால் கஸ்ட்ரோ தனது அறிக்கையானது எதிரியை மனோரீதியாக வீழ்த்தும் என்று நம்பினார்.

இவ் வேளையில் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில், கியூபப் புரட்சியில் தனது பெயரை அழியாதவாறு பதித்துக் கொண்ட **பிராங் பயஸ்** என்பவர் மிக இரகசியமாக கியூபாவுக்குள் பல மக்கள் எழுச்சிப் போராட்டங்களையும் வேலை நிறுத்தங்களையும் கியூப அரசுக்கெதிராக நடத்திக் கொண்டிருந்தார்.

கஸ்ட்ரோ உட்பட அனைவரும் கியூபாவுக்குள் நுழையசிறுகப்பல் ஒன்றையேனும் வாங்க வேண்டியிருந்தபோதும் அதற்கான பணவசதி அவர்களிடம் இருக்கவில்லை. அவ்வேளை முன்னர் கியூபாவில் ஜனாதிபதியாக இருந்த **பிறியோ சொக்காரஸிடம்** கஸ்ட்ரோ நிதியுதவி கோரினார்.

அவர் வழங்கிய ஐம்பதினாயிரம் டொலர்களைக் கொண்டு ஒரு கப்பலை வாங்கி மீண்டும் கியூபாவுக்கு வருவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தபோது ஸ்தாபனத்துக்கு உள்ளேயே இருந்து கொடுக்கப்பட்ட தகவலால் ஆயுதங்களோடு மீண்டும் கஸ்ட்ரோ மெக்ஸிகோ பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் விடுதலை செய்யப்பட்டதும் உடனடியாகத் தன் போராளிகளை ஒன்று திரட்டி தான் வாங்கிய **கிரன் மா** எனும் கப்பலில் பயணஞ் செய்யத் தீர்மானித்தார்.

> "எமது விடுதலை என்பது வெறும் விடுமுறையைக் கழிப்பதாக இருக்காது. இந்நாட்டில் அதிகாரத்துவத்தையும் வறுமையையும் ஒழிப்பதற்காக இன்றிலிருந்தே மீண்டும் எமது போராட்டம் ஆரம்பமாகும்."

கஸ்ட்ரோ வந்து இறங்கும்போது நாடெங்கும் எழுச்சிப் போராட்டங்கள் இருக்க வேண்டுமென்பதற்காக அவரின் கட்டளைப்படி 1956 நவம்பர் 30ம் திகதி கியூபா எங்கும் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் பிராங்க் பயஸால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

1956 டிசம்பர் 2ம் திகதி கியூபாவின் ஓரியன்ட் பிராந்தியத்தின் மேற்குக் கடற்கரை ஓரமாக சேறும் சகதியுமாக இருந்த பிரதேசத்தில் கியூபப் புரட்சியாளர்கள் வந்திறங்கினர். அவர்கள் தரையிறங்கும் போது அவர்களை வரவேற்கத் தயாராக இருந்த படிஸ்டாவின் இராணுவம் பொழிந்த குண்டுமாரிக்கு மத்தியில், கரை தட்டுவதற்கு முன்னமே பெருந்தொகையான ஆயுதங்களுடன் கப்பல் கடலில் மூழ்க, கையில் அகப்பட்ட ஆயுதங்களை எடுத்துக் கொண்டு அச் சேற்று நிலத்தில் தவழ்ந்து உயிர் தப்பி 88 பேர் கியூபக் கிராமங்களுக்குள் புகுந்து தலைமறைவாகிக் கொண்டனர்.



பயிற்சியளித்த கேர்ணல் பாயோ, 'போய் இறங்குவதற்கு முன்னரே எதிரிக்கு அறிவித்து விட்டுப் போவது முட்டாள்தனம்' எனக் கூறிய அறிவுரையின் பெறுமதி கஸ்ட்ரோவுக்கு அப்போதுதான் ஆழமாகப் புரிந்தது.

கிராமத்து மக்கள், பசியில் வாடி வதங்கி வந்த புரட்சியாளர்களுக்கு பாதுகாப்பும் உணவும் கொடுத்து உதவினார்களாயினும் எந்நேரமும் அரச உளவாளிகள் தன்னைக் கைது செய்யக் காத்திருக்கிறார்கள் என்பதை கஸ்ட்ரோ உணர்ந்ததால் தம்மை இன்னாரென அடையாளம் கண்டுகொண்ட அக் கிராமத்தவர்களைக் கூட நிரந்தரமாக மௌனமாக்கிவிட வேண்டும் என்று ஒரு கட்டத்தில் தீர்மானித்தார். ஆனாலும் பின்னர் அவ் எண்ணத்தைக் கைவிட்டார்.

அக் கிராமத்திலிருந்து கஸ்ட்ரோவுக்கு**சியெராமகிஸ்ராமலைத் தொடருக்கு** வழிகாட்டுவதற்காக இணைந்துகொண்ட இளைஞன் **கிலர்மோ கார்ஷியா** பின்னர் மிக உறுதியான புரட்சியாளனாக மாறினான். அவன் கஸ்ட்ரோவைப் பற்றி பின்னர் இவ்வாறு எழுதுகிறான்.

"நான் ஃபிடல் கஸ்ட்ரோவை டிசம்பர் 12ம் திகதி சந்தித்தேன். அவர் கிரன்மா கப்பலிலிருந்து இறங்கி 10 நாட்களின் பின்பு எம் கிராமத்திற்கு வந்து சேர்ந்த நாட்கள் இப்போதும் எனக்குத் தெளிவாக நினைவிருக்கின்றன. நாம் வாழைத் தோட்டங்களுக்கூடாக நடந்தோம்.

காஸ்ட்ரோ என்னிடம் 'நாம் இப்போது சியெரா மலைகளை நோக்கியா செல்கிறோம்' என்று கேட்டார். நான் 'ஆம்' என்றேன்.

'அப்படியானால் நாம் புரட்சியை வெற்றி கொள்ளுவோம்' என கஸ்ட்ரோ உரத்து சத்தமிட்டுக் கூறினார்."

எது எவ்வாறிருப்பினும் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு உண்மை உள்ளது. இந்தக் கட்டம் வரை கூட புரட்சியின் பாரதூரம் பற்றி கஸ்ட்ரோவுக்கு ஆழமான புரிதல் இருக்கவில்லை என்பதே அவ் உண்மையாகும்.

ஆனாலும் அடிக்கடி கடுமையான ஆஸ்த்துமா நோயினால் பாதிக்கப்படுகின்ற, மிகவும் தீர்க்கமான போராட்ட அறிவு கொண்ட புரட்சியாளர் சேகுவெரா அப்போது படிப்படியாக சுகம்பெற்று வந்தது இங்கு ஒரு வாய்ப்பான அம்சமாக அமைந்தது.

சியெரா மகிஸ்ரா மலையுச்சியை வந்தடைந்ததும் வெற்றிக் களிப்படைந்த ஃபிடல் கஸ்ட்ரோ, சேகுவெரா உட்பட தன்னைச் சூழவிருந்த முக்கியமான தோழர்களிடம் நாம் இப் போராட்டத்தை வெற்றிகொண்டே தீருவோமென உறுதியாகக் கூறினார்.

சியெரா மலையிலும் கூட அவர்களால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அரச உளவாளிகள் அங்கும் நுழைந்து புரட்சியாளர்களைப் படாத பாடுபடுத்தினர்.

**எமிற்றியோ கூரா** என்பவன் 'கஸ்ட்ரோவைக் கொலை செய்வதற்கான ஒப்பந்தத்துடன் படிஸ்டா அரசாங்கத்தால் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் ஆனாலும் அவரைக் கொல்வதற்கான மனோ தைரியம் தனக்கு வரவில்லை'யெனவும் புரட்சியாளர்களால் விசாரணைக்குட்படுத்தப்பட்டபோது கூறியதாக கியூப வரலாற்றில் எழுதப்பட்டிருக்கிறது.

## நான் காணும் பெண்மை

நீங்கள் ஏன் உங்கள் பத்தினியுடன் இல்லற வாழ்க்கை வாழவில்லையென்று இராமகிருஷ்ண பரமஹம்சரை நோக்கி ஒருவர் கேட்டாராம். அதற்கு அவர் ஒரு கதை சொன்னார். சிவனுடைய புதல்வனான கணேசன் சிறு பிராயத்தில் ஒருமுறை விளையாடிக்கொண்டிருக்கும் போது பூனையொன்றை நகத்தால் கீறிவிட்டானாம். பின்னர் தாய் உமா தேவியிடம் சென்றபோது அவளது கன்னத்தில் ஒரு காயம் இருக்கக் கண்டு "அம்மா, யார் உன்னைக் காயப்படுத்தியது?" என்று கேட்டான். அதற்கு அவள் "நீதான்" என்றாள். கணேசன் திகைத்து "நான் எப்போது உன்னைக் கீறினேன்" என்றான். "கண்மணி, நீ பூனையைக் கீறிய காயம்தான் இது" என்றாள் அவள். "அதெப்படி பூனைக்கு ஏற்பட்ட காயம் உனக்கு வந்தது?" எனத் திகைத்தான் கணேசன். "மகனே உலகமே என் உடல்தானே, யாருக்கு ஏற்படும் காயமும் எனக்கு ஏற்பட்ட காயம் தானே!" என்றாள் உமை. அதன்பின் கணேசன் எப்படி கல்யாணம் செய்வான்? எந்தப் பெண்ணும் அவனுக்குத் தாயகவன்றோ தெரியும்? எனக்கும் அப்படித்தான் எல்லாப் பெண்களும் உமையாகத் தெரிகிறாள் என்றார் பரமஹம்சர்.

- த. க. பரீட்சித், பருத்தித்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிச்சு மாறிகளின் திருகுதாளங்கள்

நான் மட்டும் தனியாக அதிகாலை 5.45 இற்கே மாளிகாவத்தையில் ஏற்கனவே எனக்குச் சொல்லப்பட்ட இடத்திற்கு வந்து விட்டேன்.

சரியாக 6.15 இற்கு இருவர் அங்கு வந்தார்கள். இரவு ராஜா குறிப்பிட்டவர்தான் நான் என்பதை ஊகிக்க அவர்களுக்கு வெகுநேரம் எடுக்கவில்லை. ஓரமாக அமைந்த ஒரு பெட்டிக்கடைக்குச் சென்று தேநீர் ஓடர் பண்ணிவிட்டு கதைக்க ஆரம்பித்தோம்.

"நீங்கள் எப்படி உங்கள் பிரதேசத்தில் சமூகத்துக்கு முகம் கொடுக்கிறீர்கள்?" என்றேன்.

சமூகம் என்ன நினைக்கிறது என்பதைப் பற்றி எங்களுக்கு ஒரு கவலையும் இல்லை. யார் அவர்கள்? எங்களுக்கு அவர்கள் சோறு போடுகிறார்களா.... இல்லை நீங்கள்தான் போடுகிறீர்களா?

இயன்றவரை ஊருக்குத் தெரியாமல்தான் இதைச் செய்கிறோம். பொலிஸ், நீதிமன்றம் போகவேண்டிய கட்டங்களில்தான் தர்மசங்கடம். இருந்தாலும் இயன்றளவு பொலிஸ், நீதிமன்றங்களுக்கு போவதைத் தவிர்த்தே வருகிறோம். மூன்று முறை நீதிமன்றம் சென்றால் IRC சீல் குத்தப்பட்டுவிடும். அதனால் எப்படியும் நீதிமன்றுக்கு வரும் வாதிகளை வரவிடாமல் செய்வதற்கான சகல முயற்சிகளையும் செய்வோம். முடியாவிட்டால் குடும்பத்தைப் பயமுறுத்துவோம். அதையும் மீறி வழக்குத் தொடர்ந்தால்தான் சிறைவாசம்.

சரி... பயணிகளிடம் உங்கள் கைங்கரிய நுணுக்கம் என்ன என்றேன்...

அது தொழில் ரகசியம்... இருந்தாலும்... என்று கூறி இழுத்தவர் நிதானித்துக் கொண்டு தொடர்ந்தார்.

நாங்கள் மூன்று பேர் ஒரு பஸ்ஸில் ஏறுவோம். அடிக்க வேண்டிய பொக்கற்றுகளைத் தீர்மானித்து செயலில் இறங்குவோம். முன் பொக்கற்றென்றால் பின்புறமாக இருவர் அவரை நெருக்குவோம். அவரது கவனத்தைப் பின்பக்கமாகத் திருப்புவோம். முன்னாலுள்ள நண்பர் கையில் ஒரு பத்திரிகையோடிருப்பார். அடிக்கவேண்டியவற்றை அடித்தவுடன் நொடிப்பொழுதில் பத்திரிகையின் பக்கங்களுக்குள் பணமோ பொருளோ போய்விடும். அடுத்த பஸ் தரிப்பில் இறங்கி விடுவோம்....

ஆயுதம் ஏதாவது.... என்றேன்.

அப்படிப் பெரிதாக ஆயுதம் ஒன்றும் இல்லை. மூவர் சென்றால் ஒருவரிடம் மாத்திரம் சவரக் கத்தி ஒன்று இருக்கும். இயன்றவரை அதைப் பாவிக்காமலே இருப்போம். மாட்டிக் கொண்டால் வாயாலே பயங்காட்டி விடுவோம். கடைசிக் கட்ட நடவடிக்கைதான் சவரக் கத்தியால் கீறிவிடுவது.... இடுப்பிலிருந்து சவரக்கத்தியையும் எடுத்துக் காட்டினார்.

பயணிகளின் கவனத்தைத் திசைதிருப்ப மூன்று முறைகளைக் கையாள்வோம்.

ஒன்று அழகான பெண்கள் அழகாக உடுத்தி அலங்காரமாய்ச் சென்று ஆண்களின் மேல் ஆவலோடு உரசிக் கொடுப்பது போன்று நடித்து கண்ணைக் காட்டுவார்கள். அவ்வளவுதான், கச்சிதமாக காரியம் முடியும்....

இரண்டாவது, அழகாக உடுத்த



ஆண்கள் வேண்டுமென்றே பெண்கள் மீது உரசுவார்கள். அவர்கள் எரிச்சலடைந்து செருப்பைக் கழற்ற முனைவதற்குள் எமது விசயம் முடிந்து விடும்.

மூன்றாவது, கந்தலான அழுக்கு உடுப்புக்களையும் உடுத்துச் செல்வோம். சகிக்க முடியாத நாற்றமடிக்கும். அந்த நாற்றத்தைப் பொறுக்காமல் விலகிச் செல்லும் போது அருகிலிருக்கும் நண்பர் அடிக்க வேண்டியவற்றை அடித்து விடுவார்....

சில பிரதேசங்களில் கண்டக்டரின் உதவியோடும் பிக்பொக்கட்கள் நடைபெறும். தினம் தினம் செல்வதால் எங்களை அவர்களுக்கு நன்கு தெரியும். ஆனால் பயத்தின் காரணமாக காட்டிக் கொடுக்கமாட்டார்கள். பஸ்ஸில் பயணிகள் ஏறும்போதே, **"காசு கவனம் - பொக்கட்காரர்கள் இருப்பார்கள்"** என்று கண்டக்டர் சொல்வார்.

உடனே சிலர் தாங்கள் காசு வைத்திருக்குமிடத்தை தடவிப் பார்த்துக் கொள்வார்கள். அதை நாம் கவனித்துக் கொள்வோம்.

சிறிது தூரம் சென்று திரும்பவும் கண்டக்டர் அதே மாதிரி சொல்வார். முன்பு தடவிப் பார்த்த அதே நபர் திரும்பவும் காசைத் தட்டிப் பார்த்துக் கொண்டால் அவரிடம் காசு இருக்குமிடத்தை நாம் உறுதிப்படுத்துக் கொண்டு கைவரிசையைக் காட்டிவிடுவோம். மாலையில் கண்டக்டருக்கும் ஒரு சிறிய தொகை சென்றுவிடும்.

என்னிடம் தகவல்களைத் தந்த இவர் முஸ்லிம். பெயர் பாஷா.

**யார் இந்த பிக்பொக்கட்காரர்கள்?**
**எப்படி இவர்கள் தொழிற்படுகிறார்கள்?**
**இவர்களது பின்னணி என்ன?**

**கொழும்பின் பல பகுதிகளிலும் மறைவாக உள்ள அவர்களது பேட்டைகளுக்கு நேரில் சென்று, பலரை இரகசியமாகச் சந்தித்து உரையாடி நமது கட்டுரையாளர் பெற்ற தகவல்கள்..... சென்ற இதழின் தொடர்ச்சி இது.**

கொழும்பு நகருக்குள் ஊருகொடவத்த, பேலியகொட பகுதிக்கு சிங்களவர்களும், கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடைப் பகுதிக்கு தமிழர்களும், மருதானை, தெமட்டகொட பகுதிக்கு முஸ்லிம்களும் தனித்தனியாகவே பிக்பொக்கட் தொழிலில் ஈடுபடுகின்றனர். கொழும்பில் மட்டும் சுமார் 1000 பேர் இருக்கிறார்களாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தரப்பட்ட நேரம் முடிந்துவிடவே மாலை 7.00 மணிக்கு முடியுமானால் இதே இடத்திற்கு வாருங்கள் என்று சொல்லிவிட்டு இருவரும் பறந்தார்கள்.

ஆயிரக்கணக்கில் உழைத்தாலும் ஒரே நாளில் அதைச் சூதாடி, குடித்து செலவழித்து விடும் இவர்கள் நினைத்தால் வாழ்வதற்கான ஒரு வழிவகையைச் செய்து கொண்டு ஒதுங்கி விடலாம். ஆனால் இதை விட்டுவிடுவதற்கான எந்த அறிகுறியும் இவர்களிடம் இல்லை.

இன்வெஸ்டிகேஷன் பாதியில் முடிந்துவிடக் கூடாது என்பதற்காக இரவு 7.00 மணிக்குத் திரும்பவும் அதே இடத்திற்குச் சென்றேன்.



அங்கே 5 பேர் கூடி நின்றார்கள். நான் காலையில் சந்தித்த அதே நபரும் இருந்தார். அவர்தான் அந்தக் கூட்டத்திற்குத் தலைவர் என்பதுபுரிந்தது. கௌரவம் கலந்த மரியாதையோடு அவர்கள் என்னைப் பார்த்தார்கள்.

நீங்கள் இரக்கப்படவே மாட்டீர்களா? அவ்வாறான சந்தர்ப்பங்களே ஏற்பட்டதில்லையா? என்று அங்கிருந்த ஒருவரைப் பார்த்துக் கேட்டேன்.

நாங்கள் இரக்கப்படுவது யாருக்குத் தெரியப்போகிறது. ஆனாலும் நாங்கள் உதவிசெய்தபலசந்தர்ப்பங்களும் உண்டு என்றார்.

ஒரு நாள் 30 ஆயிரம் ரூபாவை அடித்துவந்தபிறகு,புறக்கோட்டை நண்பரொருவர் சோகத்தோடு கண்ணீர் வடித்த ஒருவரைக் கூட்டி வந்தார்.

தனது மகளின் திருமணத்திற்கு நகை வாங்க மனைவியின் நகையை விற்றுப் பெற்ற பணம் என்று அழுதார்.ஒருசதம்கூடஎடுக்காமல் திருப்பிக் கொடுத்தோம். குருநாகலைச் சேர்ந்த அவரின் மகளின் திருமணத்திற்குச் சென்று பரிசும் வழங்கினோம். "எமக்கும் வயிறு எரியும் நேரம் வரும் தொரே" என்றான் சற்றுத் தாழ்ந்த குரலில்.

இன்னொரு நாள் பெரியாஸ்பத்திரிக்கு வந்த ஒருவரின் 7000 ரூபா பணத்தை பேர்சுடன் அடித்து, பின்னர் அதைத் திருப்பி அவர் முகவரிக்கே அனுப்பி வைத்துள்ளேன் என்றான் ஒருவன்.

வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த மனைவியின் வைத்திய செலவுக்காக, தமது மூத்த மகளுக்கென சேர்த்து வைத்திருந்த தங்கச் சங்கிலியையும் மோதிரங்களையும் விற்று இந்தப் பணத்தைக் கொண்டு வந்தேன் என்று என்னிடமே மிக பரிதாபத்துடன் அழுதபடி கூறினார். அப்பொழுது எல்லோர் முன்னாலும் என்னால் அந்தப் பணத்தை திருப்பிக் கொடுக்க முடியவில்லை. 100 ரூபாயை பஸ் செலவுக்காக கொடுத்தனுப்பிவிட்டு வீடு திரும்பி அவரது நீர்கொழும்பு முகவரிக்கு பணத்தையும் அடையாள அட்டையையும் திருப்பிஅனுப்பினேன். நானும் இரு பிள்ளைகளுக்குத் தகப்பன் சேர்.... என்றான் பரிதாபமாக.

பொக்கட் அடிப்பதில் பெண்களும் ஈடுபடுகிறார்களா? என்று கேட்டேன்.

உடனே பாஷா, ஏன் இல்லாமல்... எங்களுடைய 3 பேரும் தெஹிவளை பன்சல விழாவுக்குச் சென்றுள்ளார்கள். கொஞ்சம் வயதான ஆட்களிடம் அவர்களது கைவரிசை அட்டகாசமாக எடுபடும். கிழடுகளின் மேல் கொஞ்சம் உரசினாலே போதும் பணத்தை மட்டுமல்ல அவர்களது உயிரையே எடுத்து வந்துவிடலாம் என்றார்.

அவர்கள் அதிக நேரம் பேசுக் கொடுக்காதுபிரிந்துசென்றார்கள்.

**"எங்களுடைய மூன்று பெண்களும் தெஹிவளை பன்சல விழாவுக்குச் சென்றுள்ளார்கள். கொஞ்சம் வயதான ஆட்களிடம் அவர்களது கைவரிசை அட்டகாசமாக எடுபடும். கிழடுகளின் மேல் கொஞ்சம் உரசினாலே போதும் பணத்தை மட்டுமல்ல அவர்களது உயிரையே எடுத்து வந்துவிடலாம்."**

நான் மருதானையிலிருந்து கொள்ளுப்பிட்டி செல்வதற்காக 140ம் இலக்க பஸ்ஸில் ஏறினேன். என்ன ஆச்சரியம்.... என்னுடன் கதைத்தவர்களுள் ஒருவன் பஸ்ஸிற்குள் இருந்தான். இரவு 8.30. அதிக சனம் பஸ்ஸிற்குள் இருக்கவில்லை.

அவனுக்கு அருகில் இருந்த இடத்தில் போய் நானும் அமர்ந்து கொண்டேன். அவனுக்கும் சேர்த்து டிக்கற் எடுத்ததும் சந்தோஷம் அவனுக்கு.

பொக்கட்காரர்களுக்கு பழக்கப்பட்ட ரூட்களில் கண்டக்டர்கள் டிக்கற் எடுப்பதில்லையாம். ஃப்ரீ பயணம். குறுகிய தூரங்களுக்கும் இன்டர்சிட்டி, செமி லக்சரி பஸ்கள் அதிகமாக இப்போ ஓடவிட்டிருப்பதால் முன்பு போல வருவாய் இல்லையாம்.

கொள்ளுப்பிட்டியில் இறங்கி ஹோட்டலொன்றுக்குள் கூட்டிச் சென்று அவனுக்கும் இரவு உணவு வாங்கிக் கொடுத்தேன். பாணந்துறைக்குச் செல்ல வேண்டிய அவன் உணவருந்திக் கொண்டே என்னுடன் கதைத்தான்.

நான் ஒரு பௌத்தன். ஆனால் இப்பொழுது இந்துவாக மாறிவிட்டேன். பாடசாலை செல்லவில்லை. ஆனால் 3 மொழிகளும் தெரியும்.

5 வயதிற்குப் பிறகு தாய், தந்தையைக் காணாத நான் வெள்ளவத்தையில் பாட்டன் வீட்டிலிருந்தேன். அப்பொழுதே களவுக்குப் பழகினேன்.

பாட்டன் வேலைக்குப்போனதும் தனியே இருக்க முடியாமல் கடற்கரைக்குச் செல்வேன். உல்லாசப் பயணிகளின் தங்குமிடங்களுக்கும் சென்றுள்ளேன். சம்திங் கிடைக்கும். அதில் ஒருபகுதி அண்ணனுக்கும் கொடுக்க வேண்டும். அவர்தான் அவர்களைப் பிடித்துத் தருவார்.

கடற்கரையில் வெள்ளையர் ஒருவரின் காற்சட்டைக்குள் கைவிட்ட குற்றத்துக்காக பொலீசில் பிடிபட்டு ஒழுக்க பள்ளிக் கூடத்திற்கு அனுப்பினார்கள்.

அங்கிருந்த சிறுவர்களோடு களவுக்குப் பழகினேன். 2 மாதங்களுக்கொரு முறை பாட்டன் வந்து பார்த்துவிட்டுப் போவார். 3 வருடங்களின் பின் பாட்டன் இறந்துவிட, புறக்கோட்டைக்கு வந்து தமிழ்க் குடும்பமொன்றுடன் சேர்ந்து அவர்களுக்கு உதவியாக இருந்தேன்.

பணம் தேட கஞ்சா விற்றேன். பேமன்டில் முட்டை தூக்கினேன். ஹோட்டலுக்கு நீர் இழுத்தேன். பீங்கான் கழுவினேன். எதனாலும் கையில் பணம் மிஞ்சவில்லை.




*2000ம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவிருக்கும் ஸ்டேடியம் இதுதான். ஒரு லட்சத்து 10 ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய விதமாக இந்த விளையாட்டரங்கை நிர்மாணித்திருக்கிறார்கள். 690 மில்லியன் டொலர் செலவில் சிட்னியில் கட்டப்பட்டிருக்கும் இதுதான் இப்போதைக்கு உலகிலேயே பெரிய ஸ்டேடியம். பூங்காக்கள் மற்றும் தங்குமிட நவீன வசதிகளோடு அமைக்கப்பட்டிருக்கும் இதனுள்ளே சும்மா சென்று பார்வையிடுவதற்கே ஒரு ஆளுக்கு சுமார் 800 ரூபாய் வசூலிக்கிறார்களாம்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்பொக்கட் நண்பர்களோடு சேர்ந்து தொழிலில் இணைந்தேன். 10000 ரூபா தேடினாலும் மிச்சம் பிடிக்க மாட்டேன். கிளப்களுக்குப் போவேன். பெண்கள் பின்னால் சுற்றுவேன். ராஜா மாதிரி இருந்தேன். எனது 16வது வயதில் ஒரு தமிழ்ப் பெண்ணை மணந்தேன். காசு கூடுதலாகக் கிடைத்தால் வேறு பெண்களையும் ஹோட்டல்களுக்குக் கூட்டிச் செல்வேன்.

பொலீசில் மாட்டி சிறை சென்றதில்லையா?

இப்போது எனக்கு 45 வயது. 6 - 7 முறை சிறை சென்று வந்துள்ளேன் என்றான்.

யாரிடம் காசு அடிக்க முடியும் என்று தெரியுமோ அவர்களைப் பின்தொடர்ந்து எப்படியோ காரியத்தை முடித்து விடுவேன். எவ்வளவு பணம் தேடினாலும் மற்றவர்களின் வயிற்றெரிச்சல் எங்களைச் சும்மா விடாது. இந்தத் தொழில் செய்த எத்தனையோ பேர் நோயாளிகளாகவும் பைத்தியக்காரர்களாகவும் இருக்கிறார்கள் என்று கூறி.... கொள்ளுப்பிட்டியில் நான் தினம் காணும் ஒருவரை பற்றி கூறிவிட்டு பஸ்ஸில் ஏறிவிட்டார்.

மறுநாள் காலை அவனைச் சந்தித்தேன். அவன் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தான். நான் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யும் நிறுவனத்திலிருந்து வந்திருக்கிறேன் என்று ஒரு பொய்யைச் சொன்னேன். அவனுக்குச் சந்தோஷம்.

ஆனால் அந்தச் சந்தோஷம் வெகு நேரம் நீடிக்கவில்லை. திடீரென்று அழ ஆரம்பித்தான்... ஏன் என்று கேட்டேன். எனது மனைவி சிறுநீரகம் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் இருக்கிறாள். சத்திர சிகிச்சைக்குத் தேவையான 40,000 ரூபா பணம் இல்லை.

நான் செய்த குற்றச் செயல்களுக்காகத்தான் இந்தப் பழியை அனுபவிக்கிறேன் என்றான்.

நான் ஒன்றும் தெரியாதவன் போல என்னதான் அப்படிச் செய்தாய் என்று கேட்டேன்.

சிறு வயதிலிருந்தே பிக்பொக்கட் தொழிலில் ஈடுபட்டேன். இப்போது 30 வயதுதான் ஆகிறது. ஆனால் 50 வயதுத் தோற்றம். கொள்ளைச் சம்பவங்களிலும் ஈடுபட்டு 2 கொலைகளிலும் நேரடியாகச் சம்பந்தப்பட்டேன். 22 வயதில் என்னைப் போல் ஒரு சண்டியன் இல்லை. கடைசியாக ஒரு பொலீஸ்காரன் பொக்கற்றுக்குள் கை விட்டபோதுதான் என் தலைவிதி மாறியது.

அவரைப் பார்த்தபோது பொலீஸ்காரர் என்பது எனக்கு விளங்கினாலும் பண ஆசை விடவில்லை. கைவைத்து மாட்டிக் கொண்டேன்.

என்னைப் பிடித்த அவர் தாறுமாறாக அடித்தார். பின் தலையில் பலமாக அடி விழ நான் மயங்கி விழுந்தேன். உடலுறுப்புகள் செயலிழந்தன. ஏற்கனவே என் குடும்பம் என்னைக் கைவிட்டு இருந்ததால் தனியாளாய் நான் பார்த்த வைத்தியங்கள் பலனளிக்கவில்லை. பாரிசவாத நோயாளியாகி விட்டேன். இப்போது பிச்சை எடுத்து எப்படியோ காலத்தை ஓட்டுகிறேன்.


எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள். அவர்களுக்கு என்னால் பெரிய அவமானம். சிறிய வயதில் நான் சிறை சென்று வரும்போதெல்லாம் என் மனைவி அவர்களிடம் ஏதோ ஒரு பொய்யை சொல்லி ஏமாற்றி வந்தாள். கடைசியில் அதுவும் வெளிப்பட்டுவிட்டது. அவர்களின் முகத்தைப் பார்க்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. இருந்தாலும் அவர்களை மட்டும் தனியாக வீட்டில் இருக்க விடுவது இந்தக் காலத்தில் பயங்கரம் என்று தெரியும்.

மாலையில் சேர்ந்த பணத்தை எனது தங்கையின் மூலமாக அவர்களது படிப்புக்கு கொடுத்து விடுவேன். பாடசாலையில் நான் இறந்து விட்டதாகவே பிள்ளைகள் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை என்று கூறி சற்று நிறுத்தியவன், "வேண்டாத தொழில் செய்யும் ஒவ்வொருவரும் இருந்தும் இறந்தது போலத்தான் இருக்கிறார்கள்" என்று தத்துவம் போன்ற ஒன்றைச் சொல்லி முடித்தான்.

மூன்று நாள் இன்வெஸ்டிகேஷனில் முழுத் திருப்தி பெற்றவனாக பஸ்ஸேறி அலுவலகம் வந்து சேர்ந்தேன்.

**- ஹிஷாம்**

> **"30 வயதுதான் ஆகிறது. ஆனால் 50 வயதுத் தோற்றம். கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு இரண்டு கொலைகளிலும் நேரடியாகச் சம்பந்தப்பட்டேன். 22 வயதில் என்னைப் போல் ஒரு சண்டியன் இல்லை. கடைசியாக ஒரு பொலீஸ்காரன் பொக்கற்றுக்குள் கை விட்ட போதுதான் என் தலைவிதி மாறியது."**




## இவரைத் தெரிகிறதா? இவர் மூளையைப் புரிகிறதா?

### இறந்தும் இறவாத மேதையின் மூளை

நவீன விஞ்ஞானத்தின் தந்தை அல்பேர்ட் ஐன்ஸ்டைனை யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது. அவர் தந்த சார்புத் தத்துவமும் சக்திக்கும் சடப்பொருளுக்கும் இடையிலான $E = mc^2$ சமன்பாடும் இன்னும் யாவரையும் பிரமிப்பில் ஆழ்த்துபவை. 1879ல் பிறந்த அவர் 1955ல் இறந்து 44 வருடங்கள் கடந்துவிட்டபின், அவரைப் பற்றி என்ன புதிதாய் அறிய இருக்கிறது என்று பார்க்கிறீர்களா? அவர் இறந்துவிட்டாரென்பது சரி, ஆனால் அந்த அபார மூளைக்கு மட்டும் இன்னும் இறப்பு நேரவில்லை. அதிசயிக்கிறீர்களா?

உண்மை என்னவென்றால், அதை ஆராய்சிக்குட்படுத்திய கனேடிய 'மெக் மாஸ்டர்' பல்கலைக்கழகம் அதில் சில அசாதாரண அம்சங்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளது. இவ் ஆராய்ச்சிக்குத் தலைமை தாங்கிய சான்டிரா எப். விட்டெல்சன் என்ற விஞ்ஞானி அந்த மூளையில் மற்றைய மூளைகளில் இல்லாத முக்கியமான சில வித்தியாசமான பகுதிகளை அவதானித்துள்ளார். ஒன்று *Sylvian Fissure* என்னும் மூளை வளர்ச்சி. மற்றையது சாதாரண மூளைகளை விட 15 சதவீதம் அகலமான, கணிதம், இசை, கட்புலப் பதிவுகள் போன்றவற்றின் விருத்திக்கு காரணமானதாகக் கருதப்படும் *Parietal Lobe* எனும் மடிப்புக்கள்.

அதேவேளை சாதாரணமாக மூளைகளில் காணப்படும் *Operculum* என்னும் பகுதி இவரது மூளையில் விருத்தி குன்றிக் காணப்பட்டது. இதுவே ஐன்ஸ்டைனின் மூளையில் *Parietal Lobe* விருத்தியடைய இடங்கொடுத்துள்ளதாக ஆய்வாளர் ஊகிக்கிறார். மேலும் ஐன்ஸ்டைனின் மூளையில் உளவியல் செயற்பாடுகளுக்கு உதவும் பகுதி வித்தியாசமானதாக இருந்ததாகவும் இதில் ஐன்ஸ்டைன் கைவரப் பெற்றவராக மிளிர்ந்தவரென்றும் விட்டெல்சன் தெரிவிக்கிறார்.

"ஓஹோ, இவைதான சார்புத் தத்துவத்தினதும் $E = mc^2$ இனதும் பிறப்பிடங்கள்...?" என்று புருவத்தை உயர்த்துகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இக் கண்டுபிடிப்புகள் ஒரு மகா மேதையின் ஆற்றலுக்கு அவரின் மூளையின் அமைப்பும் முக்கிய காரணமாக அமையலாமென்ற கருத்துக்கு வழிவிட்டுள்ளது.

இதிலிருந்து சாதாரணமானவர்களிடமும் இவ்வாறான மூளை விருத்திகளை ஏற்படுத்தலாமா, நாமே மேதைகளை உருவாக்கிக் கொள்ளலாமா என்ற ஆய்வுகளுக்கும் இது வழிவகுக்கலாம்.

"செத்தும் கொடுத்தான் சீதக்காதி" என்பார்களே, அதுபோல உயிரோடு இருந்தபோது மட்டுமல்ல இறந்தபின்பும் ஐன்ஸ்டைனின் மூளை கண்டுபிடிப்புகளைத் தந்தபடிதான் இருக்கிறது.

நன்றி : நியூஸ் வீக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JUBILEE 2000 COALITION

"2000ம் ஆண்டில் சகல வறிய நாடுகளும் பெற்றுள்ள கடன்களை இரத்துச் செய்யக் கோருவதும், இதன் பிறகுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் செல்வந்த மற்றும் வியாபாரிகளின் ஆலோசனைகளுடன் மட்டுமன்றி வறிய மக்களின் பங்குபற்றுதலுடனும் அவர்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டுமென வறிய நாடுகளின் அரசியல் தலைவர்களைக் கோருவதே இத்திட்டத்தின் நோக்கம்."

அடுத்த நூற்றாண்டிலல்ல, அடுத்த ஆயிரமாம் ஆண்டில்-மிலேனியத்தில் நாம் காலடி எடுத்து வைக்க இன்னும் சொற்ப நாட்களே உள்ளன. எனினும் புதிய ஆயிரமாம் ஆண்டை மிகவும் சுலபமாகவும், புதிய உத்வேகத்துடனும், மகிழ்ச்சியுடனும் எதிர்கொள்ளக் கூடிய வகையில் பல்வேறு பக்கங்களிலிருந்தும் தடல்புடலாக ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

புதிய நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் வர்த்தக, கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப ரீதியாகவென பல்வேறு அடிப்படைகளிலும் உற்சாகமளிக்கக் கூடிய முன்னேற்றங்கள் தற்பொழுது பெருமளவுக்குக் காணப்பட்டுவிட்டன.

2005ல் ஏற்படும் எனக் கருதப்படும் உலகப் பெரும் உணவுப் பஞ்சத்தைக் கருத்தில் கொண்டோ என்னவோ மனித சக்தியை மேலும் சேமிக்கும் வகையில் கணனித் துறையில் ஏற்பட்டுள்ள பாரிய புரட்சி, இன்ரநெட், ஈமெயில் போன்றவற்றின் அறிமுகம், கணனிகளில் 2000ம் ஆண்டில் ஏற்படப்போகும் Y2K பிரச்சினைக்குத் தீர்வு காண இடையறாத முயற்சி என்பன எல்லாம் சந்திக்கவிருக்கும் சவால்களை எதிர்க்கும் ஆயுதங்களில் ஒரு சிலவே.

இவ்வாறு 21ம் நூற்றாண்டு பற்றி உலகமே கனவு கண்டு கொண்டிருக்கும் நிலையில் வறிய நாடு, மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நிலையைத் தீர்மானிப்பதில் பெரும் சக்தியாகத் தொழிற்படும் வெளிநாட்டுக் கடன்கள் பற்றியும் அக்கடன்களிலிருந்து மீள முடியாது தத்தளித்துக் கொண்டிருக்கும் குறிப்பிட்ட நாடுகளுக்கான ஒரு நிவாரண முயற்சியிலும் சிலர் இறங்கியிருக்கிறார்கள்.

அதாவது இலங்கை உட்பட வறிய மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தமது கல்வி, சுகாதார, பொருளாதார அபிவிருத்தி, சமூகநல வசதிகள் போன்ற நோக்கங்களுக்காக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் செல்வந்த நாடுகளிடமிருந்து 1944ம் ஆண்டு முதல் பெறப்பட்ட கடன்கள் தற்போது அவற்றின் உண்மையான நோக்கங்கள் எய்தப்படாத நிலையில் அந்நாடுகளுக்கு பெரும் சோதனையாக அமைந்துள்ளதைக் காண முடிகின்றது.

இவ்வாறு பெறப்பட்ட கடன்கள் வறியவர்களை மேலும் வறுமைக் கோட்டுக்குள் தள்ளியுள்ளதுடன், தனவந்தர்களை மேலும் செல்வச் செழிப்பாக்கியும் உள்ளது.

மேற்கூறிய அமைப்புகளிடமிருந்து இந்நாடுகள் பெற்றுள்ள கடன் தொகையானது இரண்டு இலட்சம் கோடி அமெரிக்க டொலர்களையும் தாண்டியுள்ளது.

பொதுவாக இக்கடன்கள் வறிய நாடுகளுக்கு வழங்கப்படும் போது 40 வருடங்கள் வரையான சலுகைக் காலத்திலேயே வழங்கப்படுகின்றது.

எனவே பெறப்பட்ட கடன்கள் சரியான வழியில் செலவளிக்கப் படாமலும், திருப்பிச் செலுத்தத் தாமதமாகுவதால், ஆரம்பத்தில் பெற்ற தொகையைவிட வட்டித் தொகை பன்மடங்கு அதிகரித்து விடுகிறது.

உண்மையான கடன்களின் பல மடங்கு செலுத்தப்பட்ட நிலையிலும் வட்டித் தொகைப் பெருக்கம் காரணமாக கடன் இன்னும் முடிவு பெறாத வண்ணமே இருக்கிறது.

உலக சனத்தொகையில் 100 கோடி மக்கள் (1/5 பகுதியினர்) நாளொன்றுக்கு 1 அமெரிக்க டொலரைத்தானும் வருமானமாகப் பெறுவதில்லை. இந்நூறு கோடி மக்களில் 90% ஆனவர்கள் வறிய நாடுகளைச் சேர்ந்தவர்களே.

இந்நிலையிலும் செல்வந்த நாடுகள் வறிய நாடுகளுக்கு வழங்கும் 1 பவுண் கடனுக்குப் பதிலாக 4 பவுண்களை மீளப்பெறுகின்றன.

ஆபிரிக்க நாடுகள் தமது சுகாதார செலவுகளுக்குச் செலவிடும் தொகையிலும் பார்க்க நான்கு மடங்கு கூடுதலாக, கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கெனச் செலவிடுகின்றன.

சுயமாக தன்னிறைவு அடைந்து கொள்ள முடியாத வறிய நாடுகள் மேற்கூறிய கடன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பது உண்மையே. ஆனாலும் இவை தொடர்பான சட்ட வரையறைகள் இருதரப்பினருக்கும் சாதகமாக இருக்க வேண்டும்.

தற்போதுள்ள நிலைமை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் செல்வந்த நாடுகளுக்கு சாதகமாயும், வறிய கடன் பெற்ற நாடுகளுக்கு மிகவும் பாதகமாயுமே காணப்படுகின்றன.

அதுமட்டுமன்றி செல்வந்த நாடுகள் செல்வச் செழிப்பு மிக்கவையாக மாறியது, காலனித்துவ ஆட்சியமைப்பில் 500 ஆண்டுகளாக வறிய நாடுகளை பல்வேறு வகைகளிலும் சுரண்டியதன் மூலம் சம்பாதித்த செல்வங்களாலாகும்.

## பரம்பரைக்குப் பட்ட கடன்?




எனவே மேற்கூறிய சொத்துக்களின் உண்மையான உரிமையாளர்கள் வறிய நாடுகளின் பொது மக்களே என்பதில் வாத விவாதங்களுக்கு இடமில்லை.

எனவே அபிவிருத்தி என்ற போர்வையில் கடன் கொடுத்தோர்களாலும் கடன் பெற்றோர்களாலும் சில பிழைகள் ஏற்பட்டுள்ளன என்பது தெளிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்பட்டார்...


பாப்பரசர்


தற்போதைய நிலையிலிருந்து இதன் ஆரம்பத்தை திரும்பிப் பார்க்கும்போது இக் கொடுக்கல் வாங்கல்களால் அபிவிருத்தி நடைபெற்றதைக் காணமுடியவில்லை.

பெறப்பட்ட கடன்களை அவ்வக் காலத்திலிருந்தஅரசியல்வாதிகள் முறையாகவும் இதய சுத்தியுடனும் செலவு செய்யாமல் தமது சொந்த நலன்களைப் பேணிக் கொண்டதே அதிகம். காலத்துக்குக் காலம் ஆட்சிக்கு வரும் அரசியல்வாதிகள் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பமெனக் கருதி தம் பின்னைய பரம்பரைகளுக்குமென சேகரித்துக் கொண்ட சொத்துக்கள் எண்ணிலடங்கா.

எனவேமேற்கூறியதவறுகளைத் திருத்திக் கொண்டு புதியதொரு ஆரம்பத்திற்காக 2000ம் ஆண்டில் புதிய திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது. அதாவது, வறிய நாடுகள் பெற்றுள்ள கடன்களை இரத்துச் செய்து கொண்டு, கடனற்ற சுதந்திர மக்களாக புதிய நூற்றாண்டை எதிர்கொள்ளும் வகையில் ஒரு மகத்தான செயற்றிட்டம் உலகளாவிய ரீதியில் பல பெரிய மனிதர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2000ம் வருடத்தில் சகல வறிய நாடுகளையும் கடன் பளுவிலிருந்து விடுதலை செய்யக் கோரி மேற்கொள்ளப்படும் இரண்டு கோடி கையொப்பங்களுடனான சர்வதேச மனுவே இதுவாகும்.** ஜுபிளி 2000 எனும் சர்வதேச அமைப்பு ஒவ்வொரு நாடுகளிலும் பிரதிநிதிகளை நியமித்து இக் கையொப்பம் சேகரிக்கும் பேரணியை சகல நாடுகளிலும் முன்னின்று செயற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. **2000 ஆம் ஆண்டு இலங்கைப் பேரணி** என்பது இலங்கையில் இதற்கெனச் செயற்படும் குழுவாகும்.



கென்னத் கவுண்டா


முகம்மது அலி

இத்திட்டத்தின்நோக்கம்2000ம் ஆண்டில் சகல வறிய நாடுகளும் பெற்றுள்ள கடன்களை இரத்துச் செய்யக் கோருவதும், இதன் பிறகுள்ள அபிவிருத்தித் திட்டங்கள், செல்வந்த மற்றும் வியாபாரிகளின் ஆலோசனைகளை மட்டுமன்றி வறிய மக்களின் பங்குபற்றுதலுடன் அவர்களின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டுமென வறிய நாடுகளின் அரசியல் தலைவர்களைக் கோருவதுமாகும்.

இம்மனுவில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்குகின்றன.

1. 2000ம் ஆண்டு உலகம் முழுவதிலும் வசிக்கும் சகல வறிய மக்களுக்கும் ஒளிமயமான.... எதிர்காலம் பற்றிய நம்பிக்கை கொள்ளக் கூடிய ஆண்டாகமலரவேண்டும் என இதில் கையொப்பமிடும் நாம் எதிர்பார்க்கிறோம்.


பிஷப் டுட்டு

2. புதிய ஒரு ஆரம்பத்துக்காக இலங்கையுட்பட அனைத்து மூன்றாம் உலக நாடுகளும் பெற்றுள்ள கடன்களை 2000ம் ஆண்டில் முழுதாகஇரத்துச் செய்யுமாறு வேண்டி நிற்கிறோம். கடன் கொடுத்த பிரிவினரும், அதேபோல் கடன் பெற்ற பிரிவினரும் தாம் செய்த தவறைத் திருத்திக் கொள்வதற்கு மகத்தான ஒரு சந்தர்ப்பமாக இதை நாம் கருதுகிறோம்.

3. கிட்டத்தட்ட 500 ஆண்டுகாலமாக காலனித்துவ ஆட்சியின் கீழ் பாரிய கொள்ளையடிப்புகளுக்கு இரையாகியதால் இலங்கையுட்பட மூன்றாம் உலக நாடுகளின் மக்களுக்கு கிடைக்க வேண்டியது நஷ்டஈடு மட்டுமேயொழிய கடன் திருப்பிச்செலுத்தவேண்டியகட்டாயமல்ல. எனினும் அந் நஷ்ட ஈடு இதுவரையும் கிடைக்கப் பெறவில்லை. மேலும் கடந்த 50 வருடங்களாக வறிய மக்களின் பங்குபற்றுதலின்றி, அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களுக்கும் அதற்கீடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களுக்கும் பொறுப்புதாரிகள் நாமில்லை. எனவே என்ன காரணங்களைக் காட்டியும் இக் கடன்களை மீளச் செலுத்துவதற்காக வறிய மக்களானஎங்கள் மீது இப்பாரத்தை ஏற்றி வைப்பதை மக்களால் நியமிக்கப்பட்டஎந்தஅரசாங்கத்துக்கும் அனுமதியளியோம்.


ஜுலியஸ் நியரரே


மண்டேலா

4. இதன் பிறகு அபிவிருத்திக் கொள்கைகளைத் தீர்மானிக்கும் போதும், திட்டமிடும் போதும், அவற்றைச் செய்முறைப்படுத்தும்போதும் விசேடமாக பொதுமக்களினதும், அவர்களின் அமைப்புக்களதும் பங்குபற்றலைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதையும் தெளிவுபடுத்துகிறோம்.

# நெஞ்சம் ஆற....

வறிய நாடுகளில் மக்கள் அசாதாரண கடன் தொல்லைகளால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை முதன் முதலாக உலகுக்குத் தெளிவுபடுத்தியவர்கள் **கென்னத் கவுண்டா, ஜுலியஸ் நியரரே** ஆகிய ஆபிரிக்கத் தலைவர்களாவர். **ஆர்ச் பிஷப் டெஸ்மண் டுட்டு** இத் திட்டத்தின் தோற்றுவிப்பாளராவார்.


மைக்கேல் ஜாக்சன்

இச் சர்வதேச மனுவுக்குதென்னாபிரிக்க ஜனாதிபதி **நெல்சன் மண்டேலா, போப்பாண்டவர்**, குத்துச்சண்டை வல்லுநர் **முஹமட் அலி**, பொப்பிசைப் பாடகர் **மைக்கேல் ஜக்சன்** ஆகியோர் அனுசரணை வழங்குகின்றனர். இதுவரையும் பின்லாந்து நாடு இதற்கான அனுமதியை முதன்முதலில் வெளியிட்டுவிட்டது.

பிரித்தானிய ஜனாதிபதி டொனி பிளேயர் இது தொடர்பாகக் கடமையாற்ற தனது உடன்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

செல்வந்த மற்றும் தொழிநுட்ப நாடுகளின் தலைவர்களின் கூட்டங்களில் இது சம்பந்தமாக கலந்துரையாடப்படுகின்றது.

40 நாடுகளில் இம்மனுவுக்கான கையொப்பம் சேகரிக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது மேலும் 120 நாடுகளுக்கு வியாபித்துமுள்ளது.

இதன் ஆரம்ப முயற்சியாக ஜேர்மன் கோபோன் நகரில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் ('98ல்) மகாநாட்டில் 64,000 கையொப்பங்களுடனான மனுவொன்று கையளிக்கப்பட்டது.

இதுவரை 30 முதல் 40 நாடுகளின் கடன் பளுவை இரத்துச் செய்ய அபிவிருத்தியடைந்த நாடுகள் உடன்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எனினும் மீதமுள்ள நாடுகளையும் அக்குழுவில் சேர்த்துக்கொள்ளுமாறு இம்மனுவின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதில், இலங்கையின் நிலைமையைப் பார்க்கும் போது.... இலங்கை கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நாடு என்ற பட்டியலுக்குள் உள்ளடக்கப்படவில்லை. இந்நாட்டு அரசியல்வாதிகளும் அவ்வாறு கூறிக் கொள்வதில்லை. அதற்குக் காரணம் அப்படிக் கூறிவிட்டால் மீண்டும் கடன் பெற்றுக் கொள்ள முடியாமல் போகும் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இலங்கையின் கடன் பளுவைப் பார்க்கும் போது 1998ம் ஆண்டு மத்திய வங்கி ஆண்ட றிக்கையின்படி -

சிறியவர் முதல் பெரியோர் வரை ஒவ்வொருவரும் 50,000 ரூபாவுக்கு மேற்பட்ட தொகையி னைச் செலுத்த வேண்டியவர்களா கவுள்ளோம்.

தற்போது பெறப்படும் கடன்க ளில் பெரும்பகுதி கூட அபிவிருத் தித் திட்டங்களுக்குப் பயன்படுத் தப்பட முடியாமல் ஏற்கனவே பெற ப்பட்ட கடன்களை மீளக் கொடுக் கவும் அவற்றுக்கான வட்டியைத் திருப்பிச் செலுத்தவுமே பயன்படு கின்றன.

இலங்கையில் **'2000ம் ஆண்டு இலங்கைப் பேரணி'** மதத் தலை வர்கள், புத்திஜீவிகள், கலைத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள், அர சியல்வாதிகள் மற்றும் பல்வேறு பட்ட சங்கங்களின் பிரதிநிதித்து வத்துடன் மேற்கொள்ளப்படுகின் றன. இதற்காக ஒன்றுசேர்ந்த இயக்கங்களினதும், நபர்களினதும் சக்தியைக் கொண்டும் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங் களினது நிதி மற்றும் உதவிகள் எல்லாவற்றைக் கொண்டும் செயற் படுகின்றது.

இது முக்கியமாக உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், G 8 எனப்படும் உலகின் செல்வந்த நாடுகளான அமெரிக்க, ஐக்கிய இராச்சியம், இத்தாலி, ஜப்பான், ஜேர்மனி, பிரித்தானியா, பிரான்ஸ், சோவியத் ரஷ்யா போன்ற நாடு களின் தலைவர்களுக்கும் இலங் கையுட்பட வறிய நாடுகளின் அர சியல்வாதிகளுக்கும் கையளிக் கப்படும்.

இதற்கு பொதுமக்களாகிய நாம் எப்படிப் பங்களிப்புச் செய்யலாம் என நோக்கின் -

கடன்சுமை மற்றும் அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகள் பற்றி தனிப்பட்ட ரீதியில் சந்திப்பவர்க ளுடன் கலந்துரையாடல்களை நடத்துவதன் மூலமும்...

பல்வேறுபட்ட தொடர்புசாதனத் துறைகளூடாக பொதுவாகக் கலந் துரையாடுவதன் மூலமும்...


இயன்ற சகல வழிகளிலும் அனைத்துப் பொதுமக்களையும் அறிவூட்டுவதன் மூலமும்...

மனு விண்ணப்பங்களைப் பெற் றுக் கொண்டு அதில் கையொப் பங்களைச் சேகரித்து அனுப்புவ தன் மூலமும்...

மற்றும் சாத்தியமான வேறு வழிகளின் மூலமும் இதற்காக எமது பங்களிப்பைச் செய்யலாம்.

**- எம்.பீ.எம். ஃபாஸில்**






"என்னப்பா மாயாண்டி நீ குடுத்து வச்ச வன்தான்தாப்பா... உன்னோட மூத்த மகனைப் போலவே ரெண்டாவது மகனுக்கும் யூனிவர் சிட்டியிலஇடம்கிடைச்சிருச்சாமே...அள்ளப் போனாலும் அதிர்ஷ்டம் வேணும்னுற மாதிரி நீ அதிர்ஷ்டசாலிதான்யா..."

"ம்... நீ நல்லாத்தான் சொன்னே போ... நாய் குப்பை மேட்டிலே பேய் புளிய மரத்தி லேன்னுற மாதிரி நாங்க இங்க தோட்டத்துல ஒரு வாய் சோறு ஒழுங்கா இல்லாம நாய் மாதிரி கஷ்டப்பட்டு இவனுங்களை படிக்க வச்சா இவ னுங்க எல்லா முடிஞ்சதும் எங்களை தூக்கி எறிஞ் சிட்டுப் போயிடுறானுங்க. உடைந்த சட்டி உலைக்கு உதவாதுன்னுறது நம்பளைப் பொறுத்த வரையில சரியாத்தான் இருக்கு...."

"என்னப்பா நீ பேசுறே.... எருக்கு இலைக்கு மருக் கொழுந்து வாசனையான்னு உன் மகன்களைப் பத்தி அவனவன் வாய் நிறைய பாராட்டுறானுக... நீ என்ன டான்னா மாங்கா புளிச்சதோ வாய் புளிச்சதோன்னு இல்ல பேசுற...."

"உனக்குத் தெரியாது மணி... நான் நினைச்சது எதுவுமே நடக்கலை. நெல்லுன்னு நினைச்சித்தான் விதைச்சேன்-ஆனாஅதுபுல்லாபோயிடுச்சி-கையால பிடிக்கப் போய் பொய்யாய் போயிடுச்சி..."

"சும்மா புதிர் போடாம என்ன நடந்ததுன்னுதான் சொல்லேன்...."

"தோட்டத்துல புல்லு வெட்டுறவங்களுக்கு படிப்பு எதுக்குன்னு ஏளனம் செஞ்சவங்க வாயை அடக்குற துக்காக மூத்தவனை யூனிவர்சிட்டி வரை படிக்க வச் சேன். செல்லரிச்ச காதுக்கு எதுக்கு வெள்ளைக் கம் மல்னுநம்மஆளுங்களேகேலிபேசினாங்க....அவனும் படிச்சி பட்டமும் வாங்கினான் - அதோட எங்களோட நம்பிக்கைக்கு பட்டை நாமமும் போட்டுட்டான்..."

"ஏன்... என்ன ஆச்சு...?"

"எல்லாமே ஆயிடுச்சி. அவன் தலையெடுத்து தன் சகோதரிங்களுக்கு நல்ல வாழ்க்கையை ஏற்படுத் திக் குடுப்பான். என்னோட சுமைகளை குறைப்பான்னு கனவு கண்டேன். ஆனா அது கனவாவே போயிடுச்சி. அங்கே படிக்கிறப்பவே எவளையோ விரும்பியிருக் கான். அது பணக்கார வீட்டுப் பெண்ணாம். படிப்பு முடிஞ்சதும் வீட்டுக்கு மாப்பிள்ளையா போய் சேர்ந் துட்டான். பார்க்கப் போனப்போ என்னை எடுத்தெறி ஞ்சி பேசினான் - அடிக்கடி அங்க வர வேணாமாம். அவனோட கௌரவம் கெட்டுடுமாம். வேணும்னா அவ னுக்கு செலவழிச்ச பணத்தையெல்லாம் தந்துடுறா னாம். எனக்கு செருப்பால அடிச்சி பருப்பு சோறு போட்ட மாதிரி இருந்திச்சி. படுவதும் பட்டுத்தானே இழிய வேணும். பாடுபட்டு குத்தினாலும் பதரில் அரிசி வருமா சொல்லு...."

"சரி மாயாண்டி, மூத்தவன்தான் ஏதோ புத்திக் கெட்டு நடந்துட்டான்னுறதுக்காக இளையவனும் அப் படித்தான் இருப்பான்னு நீ ஏன் நினைக்கிறே... ஐந்து விரலும் ஒண்ணாவா இருக்கும்...?"

"ம்.... எல்லாமே ஒரே குட்டையில ஊறின மட்டைங் கதானே... குத்திக் கெட்டது பல - குடைந்து கெட்டது காதுன்னுற மாதிரி இனியும் நான் ஏமாற தயாரில்லை. இப்புடியே ஒவ்வொருத்தனையும் பெரிய படிப்பு படிக்க வைக்கிறதுக்கு நாங்க உடம்பு நோக உழைக்க, இவ னுங்களோ எல்லாம் முடிஞ்சதும் உனக்கும் பெப்பே.... உங்கப்பனுக்கும் பெப்பேன்னு டாடா காட்டிட்டு போயிடுவானுங்க..."

"இல்ல மாயாண்டி.... அப்புடியெல லாம் நீ பேசக்கூடாது. ஆயிரம் தான் இருந்தாலும் பெத்த பிள் ளைங்களுக்கு கல்விக் கண் குடுக்குறது அவசியம். வயித் துப் பசியை விட அறிவுப் பசியை ஊட்டுறதுதான் ஒரு நல்ல தகப்பனோட கடமை. இவனும்அப்புடித்தான்செய் வான்னு மனசைக் குழப்பிக் கிறதை விட உன்னோட கட மையை செய்யிறதுதான் முக் கியம்..."

"என்ன மணி என்னை ரொம்ப குழப்புறியே...."

"குழப்பல்ல... உண்மையத்தான் சொல்லுறேன் - படிப்பு விஷயத்துல எல்லாம் அசல், வட்டின்னு கண க்குப் போடக் கூடாது. கல்லை விதைச்சி நெல்லை அறுவடை செய்ய முடியுமா... எதிலேயும் ஒரு நம்பிக் கை வேணும். மூத்த மகனைப் படிக்க வைக்க பட்ட பாட்டை இளையவன் பார்த்துக்கிட்டுத்தானே இருந் திருப்பான். அது அவன் மனசுல நிச்சயமா ஒரு தாக் கத்தை ஏற்படுத்தியிருக்கும். - அண்ணன் போகட்டும் நாமாவது படிச்சி அப்பாவுக்கு உதவி செய்வோம்னு அவன் மனசுல ஒரு வைராக்கியம் வந்திருக்கும்... அதுனாலத்தான் சொல்றேன்....

"என்னமோ மணி.. நீ சொல்றதும் ஒரு வகையில நியாயமாத்தான் இருக்கு - ஆனா....

"இந்த ஆனா... ஆவன்னா எல்லாம் வேணாம். நின்ற வரைக்கும் நெடுஞ்சுவர் விழுந்தால் குட்டிச் சுவர்னு உன் இளைய மகனோட எதிர்காலம் பாழாகணுமா... நீ உன் கடமையை செய்.. பலனை எதிர்பார்க்காதே - கற்றதெல்லாம் வித்தையல்ல - பெற்றதெல்லாம் பிள் ளையில்லை. அதுனால வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காம ஆக வேண்டியதை பாரு.... அப்ப நான் வரட்டுமா"

**- பாலா சங்குபிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம்

பிரெஞ்சு மூலம் : Charles Baudelaire
தமிழில் : சோ. ப.




அந்தி மாலையை நம் இலக்கியங்கள் புனைந்து பாடும். தம் காதலரைப் பிரிந்த தலைவியரை அந்தி மாலை வருத்துவதாகக் கவிஞர்கள் வருணிப்பர்.

இதற்கு அப்பால், அந்திக்கும் - இரவுக்கும் - ஒரு பரிமாணம் உண்டு. பகலெல்லாம் ஓடி. ஆடி, உழைத்துக் களைத்த மனிதர்களுக்கு ஆறுதல் தருவது அந்திப் பொழுதும் அதைத் தொடர்ந்து வரும் இரவும்.

ஆனால் எல்லோருக்கும் இந்த ஆறுதல் கிடைக்கிறதா? இரவிலும் கூட, துயரம் பலரைத் தொடர்வதில்லையா? எல்லையில்லாத் துன்பத்தில் இருந்து விடுதலை பெற முடியாமல் இரவும் பகலும் சிலர் தவிப்பதில்லையா? அவர்களுக்கு அந்தி மாலை தரும் ஆறுதல்தான் என்ன? French கவிஞன் Charles Baudelaire (தன்) துயரத்தை உருவகப்படுத்தி - விளித்துப் பேசுகிறான்.

**என் துயரமே, அமைதியடைக!**
**நீ அந்தி மாலையை அழைத்தாய்**
**இதோ, அது இறங்கி வருகிறது**
**சிலருக்கு ஆறுதலையும்**
**சிலருக்கு தவிப்பையும் கொணரும்**
**கருக்கற் பொழுது**
**நகர்மீது கவிகிறது...**

சரி, இரவு இன்பமயமானது என மயங்கும் எல்லோரும் உண்மையில் இன்பமடைகிறார்களா? அவர்கள் உல்லாசமாக களியாட்டங்களும் கேளிக்கைகளும், உண்மையில் அவர்களைச் சீரழிப்பதைக் காண்கிறோமே. சந்தை அழுக்கில் இவர்கள் கழிவிரக்கத்தைப் பொறுக்குகிறார்கள். இன்பத்தைத் தேடி மந்தைகள் போல ஓடும் இவர்கள் சவுக்கடி படுவதாக கவிஞனுக்குப் படுகிறது. அவன் கேட்கிறான்: "என் துயரமே, இவர்களை விட்டு விலகி வா!"

**இன்பமென்னும்**
**ஈவிரக்கமற்ற கொலையாளியின்**
**சவுக்கால் அடிபட்ட**
**கோடானுகோடி மனித மந்தைகள்**
**அழுக்கு நிறைந்த சந்தையில்**
**கழிவிரக்கத்தைப்பொறுக்கச்செல்கையில்**
**என் துயரமே, கையைக் கொடு**
**அவர்களை விட்டு விலகி**
**இப்படி வா!**

அந்தி வானத்தை அண்ணாந்து பார்க்கிறான் கவிஞன். இறந்த காலம் பழைய காலத்து உடையை அணிந்து வானமாகிய மாடத்தில் சாய்ந்து நிற்கக் காண்கிறான். மேலைக் கடலிலிருந்து இழப்பு புன்னகையோடு எழுந்து வருகிறது. சூரியன் நோயால் நலிந்து தூங்குகிறான். மேலே இருளாகிய விதானம் கட்டப்பட்டுள்ளது. இரவு நடந்து வரும் காலடியோசை கேட்கிறது:

**காலங்கடந்த மோஸ்தரில் உடையணிந்த**
**இறந்துபோன வருடங்கள்**
**வானத்து மாடங்களில்**
**சாய்ந்து நிற்பதைப் பார்!**
**ஆழ்கடலிலிருந்து**
**இழப்பு**
**புன்னகையோடு எழுந்து வருவதைப் பார்!**
**நோயுற்ற சூரியன்**
**வளைந்த முகட்டின் கீழ்**
**கண்ணயர்வதைப் பார்!**

**கிழக்கிலிருந்து மேற்கு வரை**
**இழுத்துக் கட்டப்பட்ட விதானம் போல**
**இனிய இரவு நடந்துவரும்**
**காலடியோசையை**
**அன்பே,**
**காது கொடுத்துக் கேள்!**

இறந்து போன வருடங்கள், பழைய பாணி உடைகள், சந்தை அழுக்கு, நோயுற்ற சூரியன் முதலியவை மனித அவலத்தைச் சுட்டி நிற்கும் படிமங்கள்.

இந்த நூற்றாண்டில், வியத்தகு சாதனைகளை ஈட்டிய மனிதன், முந்தைய நூற்றாண்டில் அனுபவித்திராத துன்ப துயரங்களையும் இழப்புக்களையும் அனுபவிக்கிறான். - அவன் வாழ்வேஓர் அவலமாகிவிட்டதுஎன்ற நிதர்சனத்தை Baudilare இன் **"தியானம்"** என்ற இக்கவிதை உணர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தைக் கைப்பற்ற...



**பாரபட்சமற்ற ஒரு செல்வம்... ஏழை பணக்காரன் எல்லோருக்கும் ஒரேயளவான, ஒரே மாதிரியான செல்வம்... அப்படி ஏதும் உண்டா என்று பார்க்கிறீர்களா? உண்டு! அது உங்கள் நேரம்தான்.**

எல்லோருக்கும் சமமாகக் கிடைத்த இந்த 24 மணித்தியாலத் துளிகளை சரிவரப் பயன்படுத்துபவர்கள் உண்மையில் எத்தன்னை பேர்? மிக... இல்லை மிகமிகச் சிலரே. அதில் நிச்சயமாக நீங்களும் சேர்மதியா என்பது உங்களுக்கே தெரிந்தும் இருக்காது. நேர விரயம் என்பது இலங்கை போன்ற நாடுகளில் ஒரு கலாசாரமாகவே ஆகிப்போய்விட்டது. இதைவென்று நேரக் குதிரையை அடக்கி எம் வாழ்க்கை வண்டிலில் பூட்டி சரியாகச் செலுத்துவது எப்படி என்பதுதான் நாம் அறியாத கலை.

நேரத்தைமட்டும்கட்டுப்படுத்திப் பாருங்கள். முன்னேற்றம் தானாக வரும்.

நேரம் என்பது ஒரு மயக்கம் தரும் கருத்து. நேரம் என்றால் என்ன என்பது உங்களுக்குத் தெரியும். அதேவேளை, யாரும் அது என்ன என்று உங்களிடம் கேட்கும்போது நீங்கள் உணர்வீர்கள் அது என்னவென்று உங்களுக்கே தெரியாதிருப்பதை.

ஆனால் நேரம் உங்களிடம் எப்போதும் இருந்துகொண்டே இருக்கிறது.

அது உங்களிடமுள்ள சொத்து. அதை உங்களால் மட்டுமே செலவிட முடியும்.

இங்கே நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டிய முரண்பாடான உண்மையொன்று யாதெனில் நேரத்தைச் செலவிட்டாலும் நேரத்தை மிச்சப்படுத்த முடியும்.

உங்களை அறியாமலேயே ஒரு அதிசயம் தினமும் நடந்துவருகிறது. என்ன தெரியுமா? உங்கள் பேர்ஸ் தினமும் காலையில் செல்வத்தால் நிறைக்கப் பட்டிருக்கும். நீங்கள் கவனிப்பதேயில்லையா? இனியாவது கவனியுங்கள்.

அது 24 மணித்தியாலங்களால் தினமும் நிரப்பப்படுகிறது.

இது உங்களுக்குக் கிடைத்த விலை மதிக்க முடியாத செல்வம். அதுமட்டுமல்ல, இந்த அதிசயச் செல்வத்தை யாரும் உங்களிடமிருந்து திருடிவிட முடியாது. உங்களால் மட்டுமே அதைத் தொலைக்க முடியும்.

மற்றொரு உண்மை! எல்லோருக்கும் தினமும் 24 மணித்தியாலங்களே! எவருக்கும் கூடிக் குறைவதில்லை.

புத்திசாலிகளுக்கும் முட்டாள்களுக்கும் ஒரே அளவுதான்.

ஆனால் இன்றையநேரத்தை நீங்கள் நாளைக்குப் பாவிக்க இயலாது.

நாளைய நேரத்தை அல்லது நேற்றைய நேரத்தை இன்றைக்கும் பாவிக்க முடியாது. இன்றையதை இன்றே பாவித்தாக வேண்டும். இதுதான் இவ்வினோத செல்வத்தின் சூட்சுமம்.

'நேரம் என்பது பணம்' என்றார் ஆர்னல்ட் பென்னட்.

உங்கள் பேர்ஸுக்குள் தினந்தினம் போடப்படும் பணத்தைக் கொண்டு எப்படி வாழ்வது என்று நாம் சிந்திப்பதுதான் முன்னேற்றத்துக்கான வழி.

சிலர் பொழுது போகவில்லை என எண்ணுகிறார்கள். சிலர் நேரம் போதவில்லையெனத் தவிக்கிறார்கள்.

ஆனால் உங்களில் யார் இந்த 24 மணித்தியாலத்தையும் சரியாகச் செலவழிக்கிறார்கள்?

விஷயம் என்னவென்றால் யார், யார் அதிகம் பிஸியாக இருப்பதாக எண்ணுகிறார்களோ அவர்களில் பல பேர் உண்மையிலேயே நேரத்தை வீணடிக்கிறார்கள். ஏனெனில் நேரத்தைச் சரிவரக் கையாளத் தெரியவில்லை.

நேரத்தைக் கையாளுவதில் யாவருக்கும் பொதுவாக இருக்கின்ற பிரச்சினைகள் சில உண்டு. அவற்றில் உங்கள் பிரச்சினை என்னவென்று அடையாளம் கண்டுகொள்ள முடியுமானாலே அதைத்தீர்ப்பது எப்படியென்று நீங்கள் புரிந்து கொள்ள முடியும்.

எனவே, சில பொதுவான நேரப் பிரச்சினைகளைப் பற்றி இம்முறை சற்று விளங்கிக் கொள்வோம்.

**1. ஒத்திப்போடுதல்**

"நாளை செய்வேன்" என்று சுவரில் எழுதி வைப்பவன் ஒருநாளும் செய்யமாட்டான். ஏனெனில் தினமும் எழுந்துபார்க்கையில் அடுத்த நாள் செய்யலாம் என்றே அது அவனுக்குச் சொல்லும்.

நாம் ஒரு விடயத்தை ஒத்திப் போடும்போது அதை ஏன் இன்று செய்ய முடியாது என்ற கேள்வியைக் கேட்டு முறையான காரணங்கள் இருந்தால் மட்டுமே ஒத்திப்போடத் தீர்மானிக்க வேண்டும்.

காரணமென்பது நிச்சயமாக ஒரு காரணமா அல்லது வெறும் சாக்குப் போக்கா என்பதையும் நீங்களேஒருமுறைகேட்டுப்பார்த்து நிச்சயமாக அது சாக்குப் போக்கு அல்ல என்று உறுதி செய்தால் மட்டுமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆனால் பலர் பழக்கத்தினாலும் மனவுறுதி இன்மையாலும் அவசியமற்று வேலைகளை ஒத்திப் போடுகின்றனர்.

இப்படி ஒத்திப் போடுவதன் மூலம் இன்றைய காரியத்துக்கு நாளைய நேரத்தையும் வீணடித்து நாளைய காரியத்தையும் ஒத்தி வைக்கத் தூண்டி அதற்கு இன்னொரு நாளின் நேரத்தைப் பலியிடச் செய்கிறார்கள் என்பதைப் பாரதூரமான விடயமாக அவர்கள் உணர்வதில்லை.

அறிவாளி எவனும் உண்மையிலேயே தேவை இருக்கும்போது மட்டுந்தான் ஒத்திப்போடுவான். அதற்குச் சரியான ஒரு காரணமும் இருக்கும். அவனது வாழ்வில் நாளை என்பதே கிடையாது.

**2. முறையற்ற பிரதிநிதித்துவம்**

ஒரு காரியத்துக்கான பொறுப்பை நாம் எவ்வாறு பிரதிநிதித்துவம் செய்கிறோம் என்பதும் நேரத்தை கையாளுவதில் எம்மிடமுள்ள பிசகுகளில் முக்கியமானது....

அக்காரியத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு அதில் எமக்குரிய பங்கைச் செயற்படுத்த வல்லவராக இருக்கிறோமா என்பதே விடயம்.

**இந்த அதிசயச் செல்வத்தை யாரும் உங்களிடமிருந்து திருடிவிட முடியாது. உங்களால் மட்டுமே அதைத் தொலைக்க முடியும். மற்றொரு உண்மை! எல்லோருக்கும் தினமும் 24 மணித்தியாலங்களே! எவருக்கும் கூடிக் குறைவதில்லை. புத்திசாலிகளுக்கும் முட்டாள்களுக்கும் ஒரே அளவுதான். ஆனால் இன்றைய நேரத்தை நீங்கள் நாளைக்குப் பாவிக்க இயலாது. நாளைய நேரத்தை அல்லது நேற்றைய நேரத்தை இன்றைக்கும் பாவிக்க முடியாது. இன்றையதை இன்றே பாவித்தாக வேண்டும். இதுதான் இவ் வினோத செல்வத்தின் சூட்சுமம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதனால்தான்

நாங்கள்
கடவுளின் குழந்தைகள்
அதனால்தான்
இன்றும் கருவறைக்குள்
நுழைய முடியவில்லை.

☆ ☆ ☆ ☆

அசுத்தம் என்னும்
சொல்லுக்கு சொந்தக்காரர்கள்
அதனால்தான்
தெருக்களைச்
சுத்தம் செய்கிறோம்

☆ ☆ ☆ ☆

உழைப்பு எங்களுக்கு
ஊதியம் அவர்களுக்கு
அதனால்தான்
வறுமையில் வாடுகின்றோம்

☆ ☆ ☆ ☆

மண்ணின் மைந்தர்கள்
நாங்கள்
அதனால்தான்
தெருக்களில்
வாழ்ந்து கொண்டிருக்கிறோம்

☆ ☆ ☆ ☆

தொலைந்த முகவரியைத்
தேடுகிறவர்கள் நாங்கள்
அதனால்தான்
இன்றும் தீவிரவாதிகள்

☆ ☆ ☆ ☆

இரத்தத்தை
வேர்வையாக்கினோம் நாங்கள்
அதனால்தான்
அவர்கள் அகராதியில்
காட்டுமிராண்டிகள்

☆ ☆ ☆ ☆

தேசப்பற்று எங்களுக்கு
உரிமை மட்டும் அவர்களுக்கு
அதனால்தான்
தியாகிகளானோம்

☆ ☆ ☆ ☆


சகிப்புத்தன்மைக்காரர்கள்
நாங்கள்
அதனால்தான்
இன்னும் ஒடுக்கப்பட்டுள்ளோம்


☆ ☆ ☆ ☆

மற்றவர்கள் உயர
பாடுபட்டோம் நாங்கள்
அதனால்தான்
இன்றும் தாழ்த்தப்பட்டோர்.....

**ஆக்கம் : சேரிமின்னல்**

**நன்றி : தோற்றுத்தான் போவோமா**





அதனால் உங்கள் நேரம் மிச்சமாவதுடன் மற்றவர்களும் அதே போல் நேரத்தை மிச்சப்படுத்துவதில் கைவரப்பெற நீங்கள் வகை செய்பவராகிறீர்கள்.

இதை சரிவரச் செய்ய முடியாதவர்கள் தாமே முழு வேலையையும் இறுதிவரை செய்து முடிக்கவேண்டியவர்களாகி நேரத்தை விரயம் செய்வர். அல்லது மற்றவர்களிடமே தங்கள் நேரத்தையும் ஒப்படைத்துவிட்டு தம் காரியத்தை ஒப்பேற்ற முடியாமல் தவிப்பர்.

வேலையை மற்றவர்களுக்குப் பாரப்படுத்திக் கொண்டே அதன் கட்டுப்பாட்டைத் தன்னகத்தே வைத்துக்கொண்டு செயற்படுத்துவது எப்படி என்ற புரிதலே எமக்கு இங்கு முக்கியமாகத் தேவைப்படுகிறது.

ஏனெனில், இதில் நாம் விடும் தவறுகள் நேரத்தை அள்ளிக் கொண்டு போய்விடுகிறது.

### 3. முறையற்ற மேற்பார்வை

நாம் எம் அலுவலகங்களுக்குள் நிறைய வேலைகளை இன்று செய்ய வேண்டுமென எண்ணிக் கொண்டு நுழைந்தாலும் இறுதியாக வெளியேறும்போது ஒன்றுமே உருப்படியாகச் செய்யவில்லையென்று சலித்துக் கொள்வதுண்டு.

ஆனால் நாம் வீணாகப் பொழுதைப் போக்கினோமாவென்றால் அதுவுமில்லை. தொடர்ந்து முழு நேரமும் வேலை செய்தபடிதான் இருந்திருப்போம்.

அப்படியானால், எப்படிக் காரியம் தவறிப் போகிறது?

காரணம் என்னவென்றால் எமது அலுவலக நேரம் பல துண்டுகளாக உடைக்கப்படுகிறது. அது பணியில் ஊன்றிக் கவனம் செலுத்தவும் பணியாற்றும் வேகத்தைப் பெருக்கிச் செல்லவும் தடை செய்கிறது.

உங்கள் வேலை நேரத்தில் பலர் அடிக்கடி குறுக்கிடுவதாலோ, பல தொலைபேசி அழைப்புகளுக்கு செவிகொடுக்க நேர்வதாலோ, பலர் சந்தித்துப் பேச வருவதாலோ, அல்லது உங்கள் காரியத்தில் மற்றவர்கள் ஆற்றவேண்டிய பகுதிகளுக்காக காத்திருப்பதாலோ, நீங்கள் பல காரியங்களுக்குத் தாவுவதாலோ இவ்வாறு உங்கள் நேரம் தொடர்ச்சியற்றுக் குழப்பப்படுகிறது.

இதை ஒழுங்குபடுத்துவதே நீங்கள் செய்ய வேண்டிய உடனடிக் காரியம்.

அவசியமானவர்களை மட்டுமே சந்தியுங்கள்.

முக்கியமான தொலைபேசி அழைப்புகளுக்கு மட்டுமே செவி கொடுங்கள்.

இதற்கு ஏற்ப உங்கள் உதவியாளருக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

விடயத்தை மட்டும் பேசுங்கள்.

வீணாகப் பேசுபவர்களை அந்நேரத்தில் தவிருங்கள்.

மற்றவர்கள் செய்ய வேண்டியவற்றை நேரகாலத்தில் செய்து தரும்படி முன்கூட்டியயே ஒழுங்கமையுங்கள்.

### 4. செயலூக்கமற்ற நிலைமை

தலைமைத்துவப் பண்புகள் சரிவரப் பெறாவிடின் அனைவரையும் ஒருங்கிணைத்துப் பணியாற்றுவதென்பது கடினம். இப்படியான நிலையில் வேலைகள் இழுபட்டுச் செல்லவே செய்யும்.

எம்மிடம் செயலூக்கமுள்ள தலைமைப் பண்பு இல்லாதவிடத்து மற்றவர்கள் எமது நேரத்தை வீணடித்துவிடுவார்கள். அதே வேளை நாமும் வேறு பலரது நேரத்தை வீணடிப்பவர்களாகிறோம்.

### 5. குறிக்கோளற்ற செய்கை

என்ன காரணத்துக்காக, எந்தக் குறிக்கோளுடன் ஒரு காரியத்தைச் செய்கிறோம் என்ற தெளிவில்லாவிடில் நேரத்தைக் கையாளுவதில் பிரச்சினைகள் எழும்.

அத்தோடு பல பணிகள் மத்தியில் முக்கியமான பணி எது, முதலில் செய்ய வேண்டியது எது என்ற தெளிவின்மையும் குழப்பத்திலாழ்த்தும்.

> **வாழ்வின் இறுதிக் கட்டத்தில் நாம் பயன்படுத்திய நேரத்தை விட வீணடித்ததே அதிகம் என்று உணர்வதை விடப் பெரிய துன்பம் எதுவும் இருக்க முடியாது.**


இருக்கும் ஏராளமான பணிகளில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவற்றை முதலில் அடையாளம் காணல் வேண்டும். அடுத்து அவற்றை வரிசைக்கிரமப்படுத்திக் கொண்டு செயற்பட வேண்டும்.

இவ்வாறான நேரத்தை வீணடிக்கும் விடயங்களில் உங்களிடம் உள்ளவை எவையென அடையாளம் கண்டுகொள்வது பாதிப் பிரச்சினை தீர்வதற்கு முதற் படி.

இதைக் கடந்துவிட்டால் சரி. இந்த நேர விரயத்தைக் கட்டுப்படுத்த என்ன செய்யலாமென சில வழிகளைப் பற்றிச் சிந்திக்கலாம்.

அதை நாம் அடுத்த இதழில் சிந்திப்போமா?

**- லாவண்யா**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைபெறும் புரூஸ்-லீ

நினைத்துப் பார்க்க முடியவில்லை. எவராலும் கற்பனை செய்ய முடியவில்லை. அப்படியொரு மரணம் - அதிர்ச்சியூட்டிய மரணம்.

அது வேறு யாராக இருந்தாலும் நம்பலாம். ஆனால்...

ஆனால்...

துள்ளும் இளமையும் பளிச்சிடும் கண்களும் வசீகரப் புன்னகையுமாக மின்னலை மிஞ்சிய வேகத்தில் யாவரையும் கிறங்கடித்த சண்டை வீரன்....

அன்றைய திரையுலகில் தன்னிகரற்ற குங்ஃபூ நாயகன் புரூஸ்லீதான் மரணித்தார் என்ற செய்தி.... எந்தச் செவிகளையும் நம்பவைக்க முடியவில்லை. ஏன், புரூஸ் லீயேகூட தனது மரணத்தை நம்பவில்லை.

1971ம் ஆண்டு அவரது முதலாவது சர்வதேசத் திரைப்படம் **'THE BIG BOSS'** வெளியிடப்பட்டபோது புரூஸ் லீ என்ன சொன்னார் தெரியுமா?

"1980ல் நான் புகழின் அதி உச்சத்தில் இருப்பேன். மிகப்பெரும் பணக்காரர்களில் ஒருவராகியிருப்பேன். அமெரிக்கா முழுவதும் எனது குங்ஃபூ பள்ளிகள், 6-7 அடுக்கு மாடிகளுடன் இயங்கும். எனது 'கொன்கோர்ட்' சினிமா கம்பனி உலகம் முழுக்க இயங்கும்..."

இத்தனை நம்பிக்கையும் ஆவலும் தொனிக்கப் பேசிய புரூஸ் லீயா..., தான் இன்னும் இரண்டே வருடங்கள் வரைதான் வாழப் போவதாக நம்பியிருப்பார்?

ஆனால் புரூஸ்லீ அப்படிச் சொன்னபோது அப்போதிருந்த புகழ்பெற்ற சீனச் சோதிட நிபுணரான சூயின் ஃபொங், 1973க்குப் பின் புரூஸ் லீ இருப்பது சாத்தியமில்லை என்று. சொல்லியிருந்தார்.




சீனர்களிடையே **ஜீ ஜிம்** என்னும் பழைய சாத்திர முறையொன்று உண்டு. அதில் அடங்கியிருக்கும் **ஃபுங் சோயி** எனும் சாத்திர சோதிடத்தில் சீனர்களுக்கு பெரும் நம்பிக்கை. புரூஸ்லீ அண்ணன் ஒருவர் முன்னர் மரணமாகியிருந்தார். அவரது ஆவி அக் குடும்பத்திலிருக்கும் மூத்த ஆண்மகனைத் தன்னோடு கொண்டு போய்விடும் என்பதே சோதிடர் கூறிய எச்சரிக்கை.

அது புரூஸ்லீக்கு மட்டுமன்றி புரூஸ்லீயின் மூத்த மகனுக்கும் ஆபத்தென எச்சரித்து இதற்குப் பரிகாரமாக சில சாஸ்திர சடங்குகளைச் செய்யும்படி கூறியிருந்தார். ஆனால் புரூஸ்லீ அதனை மதிக்கவில்லை.

சோதிடர் கூறியதுபோல் தனது இடது காதைக் குத்திக்கொள்ள மறுத்துவிட்டார். புரூஸ்லீயின் தாயார் வாசற் கதவில் சோதிடர்களைக் கொண்டு எழுதிப் பொறித்து வைத்த காவல் வாக்கியங்களையும் அகற்றி தனது கழுத்தில் தொங்கப் போட்ட மந்திரித்த பதக்கத்தையும் கழற்றி வீசிவிட்டார். ஆனால் சோதிடர் எச்சரித்ததுபோல் புரூஸ்லீ மரணித்தது மட்டுமல்ல அவரது மகனான பிரண்டன் லீயும் 28 வயதில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதனால் பழமையில் நம்பிக்கை கொண்ட முதியவர்களின் கருத்து புரூஸ்லீ ஃபுங்சோயி சாத்திரத்திற்கு எதிராய்ப் போனதால் தான் மரணித்தார் என்பதே.



அமெரிக்காவில் சியாட் நகரிலுள்ள புரூஸ் லீயின் சமாதி

புரூஸ்லீயின் மரணத்தில் ஆச்சரியம் என்னவென்றால் மனைவி லின்டா லீயிடம் சொல்லிக்கொண்டு தயாரிப்பாளர் ரோ மன் சோவுடன் *The Game of Death* திரைப்படம் பற்றி ஆலோசிக்க நடிகை பெட்டி டிங் பீ வீட்டுக்குச் சென்றவர், ரோமன் சோ ஏதோ அலுவலாக வெளியே சென்றிருந்த சமயம் தனக்கு மயக்கமாக இருப்பதாகச் சொல்லி படுக்கைக்குச் சென்றாராம்.

பின்னர் மற்றவர்கள் திரும்பி வந்து தட்டி எழுப்புகையில் இறந்தவர்போல் கிடந்தார். உடனே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அவர் இறந்துவிட்டதாகத் தெரிவித்தார்கள். இப்படியாக எப்படி இறந்தார் என்று தெரியாமல் சம்பவித்த மரணம் அது.

ஆனால் இதில் ஒரு பெரும் சர்ச்சையே கிளம்பிவிட்டது. காரணம், புரூஸ்லீ நடிகை பெட்டி டிங் பீ வீட்டில் இறந்திருக்க, புரூஸ்லீயின் மனைவி லின்டா லீயோ அவர் தமது வீட்டில்தான் இறந்ததாகத் தெரிவித்து விட்டார்.

புரூஸ்லீ நடிகை வீட்டில் இறந்ததை ஹொங்கொங் பத்திரிகைகள் எப்படியோ மோப்பம் பிடித்து விட்டன. அது மட்டுமல்ல, புரூஸ்லீயைச் சுமந்துகொண்டு நடிகையின் வீட்டிலிருந்து அம்புலன்ஸ் புறப்பட்டதையும் படம்பிடித்து விட்டன.

புரூஸ்லீயின் மரணம் பற்றிய வினாக்கள் அவரது *Fist of fury* திரைப்படத்தில் அவரே கேட்கும் கேள்விகளுடன் அச்சொட்டாகப் பொருந்தியது இன்னொரு விநோதம். திரைப்படத்தில் புரூஸ்லீயின் குரு திடீரென இறந்துவிடுகிறார். உடலைச் சுற்றி மௌனமாக இருக்கும் ஏனைய சீடர்களைப் பார்த்து அங்கு வந்த புரூஸ்லீ கேட்கிறார், "எப்படி இறந்தார் எனது குரு...?"

எவருக்கும் பதில் தெரியவில்லை. அமைதியின்றித் திரும்பத் திரும்பக் கேட்கிறார். **"ஒரு திடகாத்திரமான மனிதன் எப்படித் திடீரென்று இறக்க முடியும்...? அவர் நஞ்சூட்டப்பட்டிருக்கிறர், நான் சந்தேகிக்கிறேன். நீங்கள் நம்புகிறீர்களா...?"**

அத் திரைப்படத்தில் அவர் கேட்ட அதே மூன்று கேள்விகளையும் அவரது ரசிகர்கள் இப்போதுதிரும்பத் திரும்பக் கேட்கத் தொடங்கி விட்டனர். எப்படி புரூஸ் லீ இறந்தார்? எப்படி ஒரு திடகாத்திரமான ஆள் திடீரென இறக்க முடியும்? அவர் நஞ்சூட்டப்பட்டிருக்கிறாரா.?

**புரூஸ்லீயின் வாரிசாக அவரது மகள் ஷெனொன் (Shanon) மட்டுமே எஞ்சியிருக்கிறார். அவர் ஹொலிவூட் திரையுலகில் புகழ்பெற்ற குங்ஃபூ வீராங்கனையாக உயர்ந்து வருகிறார். அவர் அண்மையில் நடித்த Enter the Eagle என்ற புதிய படம் அவருக்கு நல்ல புகழைத் தேடித் தந்துள்ளது. புரூஸ்லீயின் மனைவி லின்டா லீ அமெரிக்க எழுத்தாளர் ஒருவரை மறுமணம் செய்துகொண்டு இருவருமாக புரூஸ்லீயின் சிந்தனைகளையும் தகவல்களையும் புத்தகங்களாக வெளியிட்டு வருகிறார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புரூஸ் லீயின் மரணச் சடங்கில்...
(வலமிருந்து இடமாக) புரூஸ் லீயின் தாய் கிரேஸ் லீ, மனைவி, சகோதரிகள்.

திக்குமுக்காடிப்போன லின்டா லீ இறுதியில் உண்மையைச் சொன்னார். - தயாரிப்பாளர் ராமன்ட் சோ தான் அவ்வாறு சொல்லச் சொன்னதாக.

புரூஸ் லீயின் மரணமடைந்த இடத்தையிட்டு ராமன்ட் சோ ஏன் லின்டா லீயை பொய் கூறச் சொன்னார் என்பதால் ராமன்ட் சோதான் திட்டமிட்டுக் கொலை செய்திருக்கலாம் என்று ஒரு வதந்தி பலமாகப் பரவியது.

புரூஸ்லீ 'கொன்கோர்ட்' என்ற பெயரில் தனக்கென புதிதாக ஒரு திரைப்படக் கம்பனியை ஆரம்பத்ததில் கோல்டன் ஹார்வெஸ்ட் கொம்பனியின் உரிமையாளரான அவருக்கு அதிகம் விருப்பம் இருக்கவில்லை என்பது அதற்கு மற்றொரு காரணமாக அமைந்தது.

எனினும்,

வீண் வதந்திகள் உருவாகுவதைத் தவிர்க்கவே தான் லின்டா லீயிடம், புரூஸ் லீ வீட்டில் இறந்தாரெனக் கூறும்படி கேட்டுக்கொண்டதாக ராமன்ட் சோ காரணம் கூறினார்.

இதேவேளை புரூஸ்லீ இறந்த வீட்டின் உரிமையாளரான நடிகை பெட்டி டிங் பீதான் புரூஸ்லீயைக் கொன்றிருக்கக்கூடும் என்று மற்றொரு சந்தேகமும் கிளர்ந்தது. புரூஸ் லீ இறக்கும் தறுவாயில் அவரோடு இருந்தவர் அவர்தான்.

அத்தோடு டிங் பீ பற்றிய, போதை வஸ்து பாவனைக் கதைகளும் இருந்தன. அதனால் புரூஸ் லீக்கும் அவர் அத்தகைய வஸ்து எதையும் அளவுக்கதிகமாகக் கொடுத்துவிட்டாரோ என்பதும் ஒரு சந்தேகம்.

புரூஸ்லீ இறப்பதற்கு 3 மாதங்களுக்கு முன் ஒரு முறை இதே நடிகையின் அறையில் மயங்கிக் கிடந்தார். அது இச்சந்தேகத்தை வலுப்படுத்தியது.

சீன குங்.:.பூ கலையில் ஒன்றான தாய்சீயில் "சீ" எனும் உட்சக்தியைக் கட்டுப்படுத்தும் உயர்நிலை பெண்களுக்கு தடை செய்யப்பட்டது. அப்பயிற்சியில் தேறிய பெண்ணொருத்தியால் உடலுறவின்போது ஆணொருவனைச் சக்தியிழக்கச் செய்து கொல்லவும் முடியும். புரூஸ்லீக்கு அப்படி ஏதும் நேர்ந்ததா என்றும் இன்னொரு சந்தேகம் நிலவியது.

இதே வேளை முன்னர் ஒரு முறை புருஸ்லீ 120 றாத்தல் நிறையை கழுத்தில் தாங்கியபடி குனிந்து எழும்பும் ஆபத்தான உடற்பயிற்சியொன்றில் ஈடுபட்டிருக்கையில் திடீரென நாரி முள்ளந்தண்டு எலும்பில் பெரும் வலி ஏற்பட்டது. பரிசோதித்த மருத்துவர்கள் முள்ளந்தண்டு எலும்பில் வெடிப்பு ஏற்பட்டுவிட்டதெனவும் நீண்ட நாட்கள் ஓய்வெடுக்கவும் கூறினர். புரூஸ்லி அதன் பின் திடகாத்திரமாகத் தேறிவிட்டார்.

ஆனாலும் அதன் தாக்கம் ஏதும் இருந்திருக்குமோ எனவும் கருதினர். ஆனால் புரூஸ்லீ இறந்தபின் வழங்கப்பட்ட வைத்திய அறிக்கையிலும் இதன் அறிகுறிகள் எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. அதில் புரூஸ்லீயின் மூளை வீங்கியதால் மரணம் சம்பவித்தாகவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

புரூஸ்லீயின் திறமையை முதன் முதலில் அமெரிக்காவில் அறிமுகப்படுத்திய எட்பாக்கர் வேறொரு சந்தேகத்தை வெளியிட்டிருந்தார். புரூஸ் லீ விசேட ஆரோக்கிய பானம் ஒன்றை அருந்துவதுண்டு. சரியான அளவுப் பிரகாரத்தில் தயாரிக்கப்படும் இப்பானம் ஆரோக்கியத்துக்கு உகந்ததாக இருக்க, அதைச் சற்று மாற்றியமைத்தால் நாளடைவில் உயிரையே போக்கிவிடவும் செய்யலாம். இது வைத்திய அறிக்கையிலும் கண்டு பிடிக்க இயலாதது.

இவ்வகைப் பானமொன்றால் தான் விரோதிகள் யாராவது அவரைக் கொன்றிருக்கக் கூடும் என்று எட்பாக்கர் கருதினார்.

புரூஸ்லீக்கு ஏராளமான ரசிகர்கள் இருந்ததைப் போலவே எதிரிகள் பலரும் இருந்தனர். புரூஸ்லீ குங்.:.பூ கலையை வெளிநாட்டவருக்குப் பயிற்றுவிப்பதை விரும்பாத பல பழைமைவாதிகளும் இருந்தார்கள்.

ஆனாலும் என்ன காரணத்தால் புரூஸ் லீ மரணமானார் என்பதற்கு கதைகள் வெவ்வேறு புறங்களில் இருந்தாலும் அவற்றில் எது உண்மை என்று எவராலும் கூற முடியாத நிலையில் **"மரணித்து விட்டார்"** என்ற ஒரேயொரு உண்மையுடன் மட்டும் புரூஸ் லீ அடக்கம் செய்யப்பட்டார்.

புரூஸ்லீ அதிகம் நேசித்தது அமெரிக்காவில் அவர் வசித்த **சியாட்டில்** என்ற இடமே. அதனால் ஹொங்கொங்கில் சம்பிரதாயபூர்வ மரணச் சடங்குகளை முடித்துக் கொண்டு இறுதியில் அவரது உடல் சியாட்டிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு 1973 ஜுலை 30ம் திகதி அடக்கம் செய்யப்பட்டது.

**- பில்லி வொங்**



மரணச்சடங்கில் புரூஸ் லீயின் சகோதரர் றொபேட் லீ (வலது), நடிகர்கள் ஜேம்ஸ் கோபன் (கண்ணாடியுடன்), ஸ்டீவ் மக்குயின் (இடது ஓரம்)



**புரூஸ்லீயின் மரணத்தால் ஏற்பட்ட பெரும் சர்ச்சையையடுத்து மனைவி லிண்டா லீ விடுத்த உருக்கமான வேண்டுகோள்:**

எனது கணவரின் மரணம் தொடர்பான விவாதங்களை நிறுத்திக் கொள்ளும்படி நான் பத்திரிகைகளையும் ஹொங்கொங் மக்களையும் வேண்டிக் கொள்கிறேன்.

எமக்கு இன்னும் வைத்திய அறிக்கையின் இறுதி முடிவுகள் கிடைக்காத போதும் கூட எனது கணவரின் மரணத்தின் பின்னால் ஏதும் மர்மம் இருக்குமென்று நான் சந்தேகிக்கவில்லை. அவரது மரணத்திற்கு காரணமென எவரையும் நான் குற்றஞ்சாட்டவில்லை.

விதி எனக்குத் தந்த தண்டனையை மாற்றியமைக்க முடியாது. இங்கு உணரப்படக்கூடிய ஒரேயொரு முக்கியமான விடயம் புரூஸ்லீ போய்விட்டார். இனித் திரும்பி வரமாட்டார் என்பது மட்டுமே. ஆனால் எமது ஞாபகங்களிலும், சிந்தனைகளிலும், அவரது திரைப்படங்களிலும் அவர் வாழ்கிறார்.

தயவு செய்து அவரது தாராள மனப்பாங்கிற்கும் அவர் எம் ஒவ்வொருவருக்கும் தந்த அற்புதக் கலைக்குமாக அவரை ஞாபகம் கொள்ளுங்கள். அவரைப் பற்றி நன்றாக அறிந்தவர்களுக்கு அவரது வார்த்தைகளும் எண்ணங்களும் வாழ்நாள் முழுவதும் நினைவிலிருக்கும்.

ஹொங்கொங் மக்கள் புரூஸ்லீயை நேசித்தார்கள் என்பதும் அவர் தனது தாயகத்திற்குக் கொணர்ந்த புகழால் பெருமையடைந்தார்கள் என்பதையும் நான் அறிவேன்.

எனவே அவரை அமைதியில் ஓய்வெடுக்க விடும்படியும் அவரது ஆன்மாவைத் தொல்லை செய்ய வேண்டாமென்றும் அனைவரையும் மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

புரூஸ் லீயின் நெருங்கிய நண்பர்களினதும் எனதும் இந்த விருப்பத்தை நீங்கள் செவிமடுத்தால் மகிழ்ச்சியடைவோம்.

**அன்புடன்,**
**லிண்டா லீ - ஜுலை 26, 1973**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உன்னால் என்ன செய்ய முடியும்?


பேராசையின் பெருஉருவமே!
உன் செயல்கள் ஒவ்வொன்றும்
ஆதிக்க அருவருப்பை
உந்தன் அறியாமையை
ஆணியடித்துச் சொல்கின்றன.
பழிவாங்கி விட்டதாய்
கல்லறைகளை எண்ணி
கர்வப்படாதே.
கல்லறைகளே
எங்கள் கருவறைகள்
நாங்கள் உயிரணுக்கள் என்றுமே!
உருக்குலைக்க முடியாது.
உன்னால் என்ன செய்ய முடியும்?
உயிரைப் பறிக்கும் நீ
உணர்வைப் பறிக்க முடியுமா?
யாதென் ஊர்? யாவர் கேளிர்? என
அகதியாக்கலாம் அநாதையாக்கலாம்
ஒருபோதும் அடிமையாக்க முடியாது.
தண்ணீர் பிரித்தாலும்
செந்நீர் இணைக்கும்
தன்மான நெஞ்சங்களை....
தரம் தாழ்ந்து விடவில்லை
இன்றைய இழப்புக்கள்
நாளை உயிர்ப்புக்களாகுமென
உரமேற்றிக் கொள்கிறோம்.
நீயும் மனிதகுலம் என்பதையும்
மறந்தால்....
உன்னை இனி
நாங்கள் மறக்கவேண்டி வரும்.
உன்னைப்போல வெடிகுண்டல்ல
எரிமலை நாங்கள்
எச்சரிக்கையாய் இரு....


**- செந்திரு**

(நன்றி : 'தோற்றுத்தான் போவோமா?')







**தோற்றுத்தான் போவோமா...**
**சபாலிங்கம் நண்பர் வட்டம்**
**தொடர்பு: எஸ். புஸ்பராஜா**
**7, Rue Racine**
**95140 Garges Les Gonesse**
**France.**

ஐந்து ஆண்டுகளுக்கு முன் பிரான்ஸில் ஆயுத கலாச்சாரத் துக்குப் பலியாகிப்போன தமிழ் ஆய்வாளரும் ஆவணக் காப்பாள ருமான திரு. சபாலிங்கத்திற்கு சமர்ப்பணமாக, சபாலிங்கம் நண்பர் வட்டம் வெளிநாடுகளிலுள்ள பல்வேறு தமிழ் எழுத்தாளர்களது படைப்புக்களையும் தொகுத்து இவ் வருடம் மே மாதம் வெளியிட் டுள்ள 'தோற்றுத்தான் போவோமா...' என்ற இந்த நூல் பயனுள்ள தொகுதியாக உருவாகியுள்ளது.

இதில் நோர்வே, பிரான்ஸ், கனடா, ஜேர்மனி, இலங்கை, சுவிஸ், இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து சுமார் 70 ஆக் கங்கள் தொகுக்கப்பட்டுள்ளமை கரிசனை மிக்க ஒரு இலக்கியப் பணியாகக் கொள்ளத் தக்கது. புலம் பெயர்ந்த எம் மக்கள் மத்தி யில் சமூகப் பிரக்ஞையுடன் மேற்கொள்ளப்படும் இத்தகைய அர்த்தபூர்வமான முயற்சிகள் பாராட்டுதற்குரியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரகபலன் : கணித்துச் சொல்பவர்



**மேஷம்:** மழைக்கு குடை மட்டும் போதாது. அடுப்படியும் வேண்டும். உடல் நிலை சுமாராக இருக்கும். குடும்பத்தில் அமைதியும் சந்தோஷமும் நிலவும். வியாபாரிகள் நற்பயன்கள் பெறும் காலம். உத்தியோகஸ்தர்கள் சாந்தமாக சமாளிக்க வேண்டிவரும். குடும்பப் பெண்களுக்கு குழப்பங்கள் குறையும். தொழில் புரிவோர் சமபலமடைவீர்கள். குழந்தைகள் தண்ணீரால் பாதிப்புற வாய்ப்புண்டு. மாணவ மாணவியர்க்கு உற்சாகமான காலம். வாழ்த்துக்கள்.

Be part of something you understand.



**ரிஷபம்:** மற்றவர்கள் சொல்லாத விஷயத்தை சொன்னதாகச் சொல்வதுதான் அயோக்கியத்தனமென்பது. உடல் நிலை சுமுகமாக இருக்கும். குடும்பத்தில் சஞ்சலம் தோன்றலாம். கவனம். வியாபாரிகள் சிறிது லாபம் பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் குழப்பங்களால் தடுமாற நேரிடும். குடும்பப் பெண்களை வீண் வம்புகள் தொல்லைப்படுத்தும். தொழில் புரிவோர், செய்தொழிலில் அவதானம். குழந்தைகளுக்கு தொண்டை நோய்கள் ஏற்படலாம். மாணவ, மாணவியருக்கு மந்த கதி உணர்வு தோன்றும். இடம் தரவேண்டாம்.

We dont't live all kinds of Years and lives.



**மிதுனம்:** ஒருவனிடம் பணம் வருகிறதா? அவன் பகைவனல்ல! நம்மைவிட பலசாலி. குடும்ப நிலை சஞ்சலமடைய வாய்ப்புண்டு. உடல் நிலை தேறிவரும் அறிகுறி. வியாபாரிகளின் தொல்லை தொடரும். உத்தியோகஸ்தர்களின் அசிரத்தைப் போக்கு மாற்றிக்கொள்ள வேண்டியது. குடும்பப் பெண்களுக்கு சுமார் பலன். தொழில் புரிவோருக்கு மேலிட பகைமை ஏற்படலாம். குழந்தைகள் பிடிவாதப் போக்கில் இருப்பார்கள். மாணவ குழாம் புத்துணர்ச்சியுடன் செயற்படும் தருணம்.

Are we always going to be alright?



**கடகம்:** கேட்டுப் படிப்பதைவிட பார்த்துப் படிக்க முடியுமாயின் நிறையத் தெரிந்துகொள்ளலாம். உடல் நிலையில் முன்னேற்றம் தெரிகிறது. குடும்ப நிலை சுமார். வியாபாரிகளுக்கு அதிர்ஷ்ட காலம். தொழில் புரிவோருக்கும் நற்பலன்களுண்டு. குடும்பப் பெண்கள் பாராட்டு, பணம் இரண்டும் பெறுவீர்கள். தொழில் புரிவோர் சிறிது இளைப்பாறலாம். குழந்தைகள் வழமைபோல. பெரிதான மாற்றங்களில்லை. மாணவ மாணவியர், படித்தவைகளை மீள் பரிசீலனை செய்யவேண்டிய தருணம்.

Good, bad, right, wrong were divided - not in the middle.



**சிம்மம்:** கதவைத் தட்டும்போது யாரெனக் கேட்பதுபோல - மனதைத் தட்டும்போதும் கேட்கத்தானே வேண்டும்? உடல் நலத்தில் அதிக சிரத்தை அவசியம். குடும்பத்தில் சிறிய விடயங்களும் பிரச்சினையாகக் கூடிய டென்ஷன் நிலை. வியாபாரிகள் புதிய முதலீடுகளைப் பின்போடவும். உத்தியோகஸ்தர்கள் நல்ல மாற்றங்களை எதிர்பார்க்கலாம். குடும்பப் பெண்களுக்கு இருந்த சிரமங்கள் குறையும். தொழில் புரிவோர் இடமாற்றமடைய அறிகுறி. குழந்தைகள் துடுக்குத்தனம் அதிகமாகக் காட்டுவார்கள். மாணவ சமூகம், கூட்டுப் படிப்பில் நலன் பெறலாம் தனியாகப் படிக்கையில் சோர்வடைந்தால்.

Sometimes we can't resist a narrow line.



**கன்னி:** அட, நாம்தான் இப்படியென்றால், கூடப் பழகுபவர்களும்கூட அப்படியேயா? உடல்நிலை - நோய்கள் சிரமப்படுத்தும் அறிகுறி. குடும்ப நிலவரம் சுமார். வியாபாரிகளுக்கு அதிக லாபங்கள் இல்லை. தொழில் புரிவோர், சாதாரண பெறுபேறுகளோடு அமைதியடையலாம். குடும்பப் பெண்களுக்கு அபசெய்திகள் கிட்டும். தொழில் புரிவோர், அந்நிய சக தொழிலாளர்களால் கஷ்டப்படுவீர்கள். குழந்தைகள் சளி, ஜலதோஷம் என்று பீடிக்கப்படுவார்கள். மாணவ குழாம், விரும்பாவிட்டாலும் கட்டாயப்படிப்பில் கவனம் செலுத்தவேண்டும்.

Nobody wanted to be told that they're not wanted.



**துலாம்:** இரவு மாற சூரியன் உதவுவதுபோல பழக்கங்கள் மாற சிலநேரம் புத்தகங்கள் உதவலாம். உடல் நலம் தேற உங்கள் அக்கறை முக்கியம். குடும்பம் உறவினர் பிரச்சினைகளால் சஞ்சலப்படும். வியாபாரிகள் போட்ட முதலில் சிறு லாபம் மட்டுமே! தொழில் புரிவோர் அலைச்சல் பட நேரிடும். குடும்பப் பெண்களுக்கு பெரிய லாப நஷ்டம் என்றில்லை. சமபலன். தொழில் புரிவோர் வார்த்தைப் பிரயோகத்தில் கவனம் செலுத்த வேண்டும். சிறார்கள் குறும்புத்தனத்தில் - விபத்துகளை ஏற்படுத்தும் அறிகுறி. மாணவ மாணவியர் அதிக நேரம் விழிப்பதால் மட்டும் ஞாபகம் வருவதில்லை என்பதை உணரவேண்டும்.

Try your talents with wise - not with fools. You loose.



**விருச்சிகம்:** திருடனின் வீட்டிற்குள்ளே வேத நூல்களைத் தேடினால் கிடைக்குமா? உடல் நலம் - பூரண ஓய்வு தேவை. குடும்ப நிலை சுமார். பிரச்சினைகள் இருக்காது. வியாபாரிகள், பழைய கடன்கள் சரிசெய்யவேண்டும். தொழில் புரிவோருக்கு மேலிட அனுசரணை கிட்டும். குடும்பப் பெண்கள் கோபத்தை அடக்கவேண்டும். தொழில் புரிவோர் சேமிப்பை மீண்டும் தொடங்க வேண்டும். குழந்தைகள் தோல் சம்பந்தப்பட்ட நோய்களால் பீடிக்கப்படுவார்கள். மாணவ மாணவியர் கலைத்துறை சம்பந்தமான விடயங்களில் பிரகாசிக்கக்கூடிய அறிகுறி.

Build defenses against hurt.



**தனுசு:** கொடுக்கும்போதுசந்தோஷமாகஇருக்கும்.நம்மிடம் அதற்குமேல் இருந்தால் மட்டும். உடல் நலம் - நலமா? கிரகங்கள் கைவிடுமுன் டாக்டரைப் பார்க்கலாம். குடும்ப நிலவரம்பிள்ளைகளைப்பிள்ளைகளாகப்பாருங்கள். அவர்கள் பிள்ளைகள்! கவனம். வியாபாரிகள் வியாபாரம் செய்யாமல் சுற்றுலா போகலாம். நிலைமை அப்படி. தொழில் செய்வோர் - தொழிலையே இழக்க நேரிடலாம். (வசதிப்படி!) குடும்பப் பெண்கள் - அனேகமாகப் பலன்கள் குறைவு. தொழில் புரிவோர் தொழிலைப் பற்றி எண்ணவேண்டியது அவசியம். குழந்தைகள் அடங்காத அடாவடித்தனம் காட்டுவார்கள். மாணாக்கர் குழாம் குருவை மிஞ்சும் கோமாளித்தனம் தெரிகிறது. அவதானம். Oh hee!? - Why pretend?



**மகரம்:** இரண்டு கால்களில் நிற்கவே இயலாதபோது - போட்டிக்கு நொண்டி விளையாட்டா? ஆ! உடல் நிலை கவனிக்கப்பட வேண்டிய தருணம். குடும்பச் சூழல் சந்தோஷமாக இருக்கும். வியாபாரிகள் கடன் தொல்லைப்பட நேரிடும். தொழில் புரிவோர் அசிரத்தை காரணமாக அல்லலுறுவீர்கள். குடும்பப் பெண்களுக்கு சுப செய்தி, காரியங்கள் கைகூடும். தொழில் புரிவோர் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். குழந்தைகள் காயம், தீப்புண்கள் ஏற்படுத்திக்கொள்ள இடமுண்டு. மாணவ மாணவியர் பெரியோருடன் அனுசரித்து, அறிவுரைகளை செவிமடுக்க வேண்டிய காலம். Look only at what you wanted to see.



**கும்பம்:** ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தால் புதுக்கதை தெரியாதென்றுதானே அர்த்தம். உடல் நிலையில் மாறுதல்கள் இருக்காது. குடும்பச் சூழல் சஞ்சலப்பட அறிகுறியுண்டு. வியாபாரிகள் தெளிவுடன் முடிவெடுக்கவேண்டும். தொழில் புரிவோருக்கு பதவி, சம்பள உயர்வு கிடைக்கும். குடும்பப் பெண்கள் உறவினர், அயலாரின் தலையீடுகளைத் தவிர்க்கவேண்டும். தொழில் புரியும் பெண்கள் சக ஊழியர்களின் விரோதத்தைச் சம்பாதிக்கும் அறிகுறி. குழந்தைகள், தொல்லை இருக்காது. மாணவர்கள் விளையாட்டுடன் படிப்பையும் கவனிக்க வேண்டும். Everything always shades into something else.




**மீனம்:** பாட்டுக்குள்ளே போய் வேட்டையாடலாம், உறங்கலாம், தவம்கூடச் செய்யலாம். திரும்பிவந்து சொல்வதை நம்பத்தானே வேண்டும்! - காடு தெரியாதவரை! உடல் நிலை கட்டுப்பாட்டை மீறுமுன் கையாளுங்கள். குடும்ப நிலை மந்த கதியில் ஓடும். வியாபாரிகள் போட்ட முதலீடு காரணமாக தொய்வுறுவீர்கள். தொழில் செய்வோர் நல்ல மாற்றத்தினை எதிர்பார்க்கலாம். குடும்பப் பெண்கள் நற்செய்திகள் கேட்க வாய்ப்புண்டு. தொழில்புரியும் பெண்கள் அருமையான திருப்பங்களை எதிர்நோக்கலாம். சிறார்கள் சுட்டித்தனத்தின் எல்லையிலிருப்பார்கள். மாணவர்கள் இந்த காலகட்டத்தை சிறப்புறப் பயன்படுத்துங்கள். வெற்றி நிச்சயம். A good bank balance gives undisturbed conseeince.

கிரகாச்சாரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயற்ற



# நீரிழிவிந்கு இரத்தப் பரிசோதனைகள்

## எந்த முறை சிறந்தது?

டொக்டர் எம். கே. முருகானந்தன் எம்.பி.பி.எஸ்.

நீங்கள் ஒரு நீரிழிவு நோயாளராக இருந்தால் அதன் நிலையை அறிய அடிக்கடி இரத்தப் பரிசோதனை செய்ய நேரிடும். அதாவது இரத்தக் குளுக்கோஸ் அளவை (Blood glucose) பரிசோதிக்க வேண்டி நேரிடும்.

அதுவும் நீங்கள் தினமும் இன்சுலின் ஏற்றுபவராக இருந்தால் தினமும் இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டி நேரிடலாம். அப்படியாயின் நீங்கள் இரத்த குளுக்கோஸ் அளவிடும் கருவியான குளுக்கோ மீட்டரை வாங்கி வீட்டிலேயே செய்து கொள்ளக் கூடும்.

**குளுக்கோ மீட்டரா? ஆய்வுகூடப் பரிசோதனையா?**

வீட்டில் குளுக்கோ மீட்டர் செய்யும் போதும், மருத்துவ ஆய்வுகூடத்தில் செய்யும்போதும் கிடைக்கும் குருதி குளுக்கோஸ் அளவுகளில் வேறுபாடுகள் இருப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள்.

எது சரி எது பிழை என்ற சந்தேகத்தைத் தீர்ப்பதற்காக இரு ஆய்வு கூடங்களில் இரத்தத்தைப் பரிசோதித்துப் பார்க்கிறீர்கள்.

இப்பொழுது உங்கள் மனம் மேலும் குழப்பமடைகிறது. இப்பொழுதும் முடிவுகளில் வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. ஏன் இப்படி நிகழ்கிறது?

**காரணங்கள் பல:**

வேறுபாடுகளுக்குக் காரணங்கள் பல. கடைசியாக நீங்கள் சாப்பிட்ட நேரத்திற்கும் இரத்தம் எடுத்த நேரத்திற்கும் உள்ள தொடர்பு நீங்கள் அறிந்ததே.

உணவு ஏதும் எடுக்காமல் காலையில் வெறும் வயிற்றில் சோதிக்கும் இரத்தம் (Fasting Blood Sugar) 60 - 110 mg/dl அளவில் இருக்கும்.

இடை நேரத்தில் எடுப்பது (Rendom Blood Suger) 140/mg/dl அளவிற்குள் இருக்க வேண்டும். சாப்பிட்ட இரண்டு மணித்தியாலத்திற்குள் எடுப்பது 160mg/dl அளவைத் தாண்டக் கூடாது.

எனவே நீங்கள் கடைசியாகச் சாப்பிட்ட பின் கழிந்த நேரத்திற்கு ஏற்ப இரத்த குளுக்கோசின் அளவு மாறவே செய்யும்.

**ஒரே நேரத்தில் எடுத்த இரத்த அளவுகளிலும் மாற்றம் ஏற்படலாமா?**

அது சரி, ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் எடுத்தாலும் வேறுபாடுகள் இருக்கின்றனவே என நீங்கள் கேட்கக் கூடும்.

உண்மைதான். ஒரே நேரத்தில் இரு வெவ்வேறு இடங்களில் எடுத்த இரத்த குளுக்கோஸ் அளவுகளில் வேறுபாடுகள் இருக்கலாம். இதற்கு, இரத்தத்தை எவ்வாறு எடுத்தார்கள் என்பது காரணமாக இருக்கலாம். பரிசோதனைகளுக்காக இரத்தம் பெரும்பாலும் இரண்டு முறைகளில் எடுக்கப்படுகிறது.

1. பெரும்பாலான ஆய்வுகளில் இரத்தம் நாளங்களில் இருந்து எடுக்கப்படுகிறது.

புஜங்களில்(Tournique) இறுக்கக் கட்டி மணிக்கட்டு நாளத்திலிருந்து ஊசிக்குழாய்(Syringe) எடுப்பார்கள். இது நாள இரத்தம் (Venous blood).

இந்த இரத்தத்திலிருந்து கலங்களை நீக்கிவிட்டு இரத்தப் பாயத்தை (plasma) மட்டும் எடுத்து அதிலிருந்துதான் இரத்தக் குளுக்கோஸ் அளவை மருத்துவ ஆய்வுகூடங்களில் கணிப்பார்கள். ஆய்வுகூடப் பரிசோதனைகள் பெரும்பாலும் முழுமையான இரத்தத்தைக் (Wole blood) கணிக்க முடிவதில்லை.

2. வீடுகளிலும், பெரும்பாலான டிஸ்பென்சரிகளிலும், சிறிய ஆய்வு கூடங்களிலும் விரல் நுனியில் சிறு ஊசியால் அல்லது லன்செற்றினால் குத்தி ஒரு துளி இரத்தத்தை எடுத்து குளுக்கோ மீட்டரில் பரிசோதிப்பார்கள். இதில் எடுக்கப்படுவது மயிர்த் துளைக் குழாய், இரத்தம் (Capillary) இது நாடி இரத்தத்தை ஒத்தது.

இங்கு பாயம், கலங்கள் இரண்டும் சேர்ந்த முழு இரத்தத்தையும் சோதிப்பார்கள்.

எனவே வேறுபாடுகளுக்கான காரணத்தைப் புரிந்திருப்பீர்கள்.

நாள இரத்தமா, நாடி இரத்தமா என்பது முதற் காரணம். முழு இரத்தமா, பாயமா என்பது இரண்டாவது காரணம்.

நாள இரத்தம் கலங்களுக்கு ஒட்சிசனையும், உணவுப் பொருட்களையும் கொடுத்துவிட்டு கழிவுப் பொருட்களையும் காபனீரொட்சைட்டையும் சுமந்து வருவதால் கரும் சிவப்பாக இருக்கும். ஆனால் நாடி இரத்தம் ஒட்சிசனையும், உணவுப் பொருட்களையும் சுமந்து வருவாதல் இளம் சிவப்பாக இருக்கும்.

எனவே நாடி இரத்தத்தை ஒத்த மயிர்த்துளைக் குழாய் இரத்தத்தை உபயோகித்துக் கணிக்கப்படும் குளுக்கோ மீட்டர் மூலம் பெறப்படும் அளவு சற்று அதிகமாக இருக்கும் என்பது வெளிப்படை.

அதே நேரத்தில் முழுமையான இரத்தத்தை பரிசீலிக்கும் குளுக்கோ மீட்டரின் அளவு பாயத்தை மட்டும் உபயோகிக்கும் ஆய்வுகூட பரிசோதனையை விட 10 - 15 mmol/L அளவில் குறைவாகும்.

ஆயினும் தற்போதைய புது வகை குளுக்கோ மீட்டர்கள் இத்தகைய வேறுபாடுகளை நிவர்த்தித்துக் கணிக்கப்படுகின்றன.

மேற்கூறிய இத்தகைய வேறுபாடுகள் சாதாரண மனிதர்களின் இரத்த குளுக்கோஸ் அளவுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தாது.

ஆயினும் நீரிழிவு நோயாளர்களில் உணவு உட்கொண்ட 30 முதல் 60 நிமிடங்களில் செய்யப்படும் குளுக்கோமீட்டரின் பரிசோதனை முடிவுகள் 5 - 8 mmoi/L அளவு அதிகமாகக் காட்டக்கூடும்.

**எது சரி? எது பிழை?**

இதில் எது சரி, எது பிழை என நீங்கள் கேட்கக்கூடும். இரண்டுமே சரிதான். எடுக்கப்படும் முறைதான் வித்தியாசம்.

ஆயினும் இந்தக் குழப்பம் வேண்டாம் எனில், குளுக்கோ மீட்டரில் இரத்தம் பரிசோதிப்பதாயின் வெறும் வயிற்றில் பரிசோதியுங்கள். அல்லாவிட்டால் சாப்பிட்ட அல்லது நீராகாரம் அருந்திய ஒரு மணித்தியாலத்தின் பின் செய்யுங்கள்.

இரத்தம் எடுக்கும் நேரத்திற்கும் அதனைப் பரிசோதிப்பதற்கும் இடைப்பட்ட கால இடைவெளியும் முக்கியமானது. குளுக்கோ மீட்டரில் உடனடியாகவேசெய்யப்படுகிறது. ஆயினும் ஆய்வுகூடங்களில் சற்று இடைவெளி நேரிடலாம். ஒரு மணித்தியால தாமதத்திற்கு 1 mmol/L அளவு குறையக்கூடும் என்பதும் நினைவில் வைத்திருக்க வேண்டியது.

**நீங்கள் செய்ய வேண்டியது என்ன?**

1. குளுக்கோமீட்டரில் செய்வதாயின் சாப்பிட்ட, நீராகாரம் அருந்திய ஒரு மணி நேரத்திற்குள் அளவிட வேண்டாம்.

2. ஆய்வுகூடத்தில் செய்வதாயின் இரத்தம் எடுக்கப்பட்ட உடனேயே பரிசோதிக்கப்படுவதை நிச்சயப்படுத்துங்கள்.

3. வெவ்வேறு முறைகளில் சோதிக்கப்பட்ட இரத்தப் பரிசோதனை முடிவுகளை ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். எந்த முறையில் எடுக்கப்பட்டதென வைத்தியரிடம் கூறுங்கள். அவர் முடிவெடுக்கட்டும்.

**நுணுக்கமான முறை**

இவற்றைத் தவிர எடுக்கப்படும் முறையிலோ, நேரத்திலோ, எந்த இரத்தமோ என்பவற்றில் தங்கியிராத நுணுக்கமான முறையொன்றும் இருக்கிறது.

Glycosulated Haemoglobin (Hb Alc) என்பதே அது. இம்மட்டத்தை அளப்பதன் மூலம் கடந்த 2-3 மாதங்களிற்கான சராசரி இரத்தச் சீனி மட்டம் பற்றிய தகவல்களைப் பெற முடியும். ஆயினும் இதனை சிறுநீர் சீனிப் பரிசோதனைக்கோ இரத்த சீனிப் பரிசோதனைக்கோ மாற்றீடாகப் பாவிக்க முடியாது.

இரத்தத்தில் உள்ள சீனி உங்கள் செங்குருதிக் கலங்களுடன் சேரும் போது கிளைகோசிலேட்டட் ஹீமோகுளோபின் உருவாகும். இவ்வாறு செங்குருதிக் கலங்களுடன் சேரும் சீனி அவற்றிலிருந்து பிரிந்து செல்லாது. இதனை செங்குருதிக் கலங்களின் வாழ்க்கை காலமாகிய 3 மாதங்களிற்குள் எந்த நேரத்திலும் அளவிடலாம். Hb Alc யை இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அளவிடுவது நல்லது. •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த முகம் இழந்து இரவல் முகமும் பொருந்தாமல்....




புலம்பெயர்ந்து சென்று வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கும் நம்மவர்களுக்கு பிறந்த நாட்டின் நினைவுகளின்.... இழந்த இயல்பு வாழ்க்கையின் ஏக்கம் ஒரு புறம் அவர்களை வாட்டினாலும், மறுபுறம் பிறந்தகத்திலுள்ளோரால் தாங்கள் சரிவரப் புரிந்துகொள்ளப் படுவதில்லை என்ற ஆதங்கமும் அவர்களை உருக்குகிறது.

தங்கைச்சிமாரின் கல்யாணத்திற்கும் ஊரிலுள்ள கோயில் திருவிழாக்களுக்கும் கொழும்பில் வீடு வாங்குவதற்கும் அல்லது லொட்ஜுக்குக் காசு கட்டுவதற்கும் இன்னபிற செலவுகளுக்குமாக.... வேண்டியபோதெல்லாம் உலுப்பக்கூடிய காசு காய்க்கும் மரமாகத் தாம் மாறிவிட்டதாக ஊரிலுள்ளவர்கள் நினைத்துக் கொண்டுவிட்டார்களே என்ற கவலையும் அவர்களுக்கு.

எனவே, புலம்பெயர் இலக்கியங்கள் - சொந்த முகத்தை இழந்து இரவல் முகமும் பொருந்தாது இரண்டும் கெட்டான் நிலையில் அவலப்படும் அடையாளச் சிக்கல்களைப் பேசுவதோடு, தாங்கள் தவறாகப் புரிந்து கொள்ளப் படுவது பற்றிய ஆதங்கத்தையும் பதிவு செய்கின்றன.

இரண்டு வேலை, மூன்று வேலை என்று பகலிரவாகத் தும்படி அடித்துஉடல் நலிந்து போவதையும், தலையில் மொட்டைவிழுந்துவிட்ட பிறகும் "கடைசித் தங்கையும் கரை யேறவேணும் காசனுப்பு மோனை" என்ற தொலைபேசி மணி அலறல்களையும் கேட்டு நொந்து.... "அப்பு, ஆச்சி... எனக்கொரு கல்யாணம் பேசுங்கோ" என்று நேரடியாகவே கேட்கின்ற நையாண்டிப் பாடல்களும் இதைத்தான் பேசுகின்றன.

மாதாமாதம் உண்டியலில் வருகிற காசின் அளவு பார்த்து, இங்குள்ள இளையவர்களுக்கும் வெளிநாடு என்பது கற்பகத்தருக்கள் நிறைந்த கனவு லோகமாகக் கவர்ச்சியூட்டுகிறது.

ஆனால், "காலம் எம் கனவுகளை மிதித்துக்கொண்டு இறக்கை கட்டிப் பறக்க நாங்கள் வேர்களை இழந்தோம், வேற்று மண்ணில் பதியம் வைத்தோம். இதில் முளை விட்டவைகள் தவிர கருகிப்போனவைகளே ஏராளம்" என்று தங்கள் அவலத்தைச் சொல்ல.... பிரான்ஸிலிருந்து அருந்ததி தந்திருக்கும் திரைப்படம் **'முகம்'**.

இந்த நூற்றாண்டு தந்த மிகச் சக்தி வாய்ந்த கலைச் சாதனமான சினிமா மூலம் எங்கள் வாழ்வின் ஒரு முகத்தைப் பதிவுசெய்து கொள்ள எடுத்திருக்கும் முயற்சி என்ற வகையில் இது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

**சமாதானத்தின் பகைவர்கள்** (1987), **இரண்டாவதுபிறப்பு** (1990) ஆகிய கவிதைத் தொகுதிகள் மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர் அருந்ததி. ஈழத்துத் தமிழ் சினிமாவின் திசை வழிக்கும் வேறொரு பரிமாணத்தை வழங்கியிருக்கிறார்.

புலம்பெயர்வின் அவலங்கள் ஒருபுறமிருக்க, பெயர நேர்ந்ததால் கிடைத்த அந்தவசதி வாய்ப்புக்களும் உலகளாவிய அனுபவங்களை உள்வாங்கிக் கொள்ளக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பமும் இதுபோன்ற நவ கலைச் சாதனங்களினூடான படைப்புக்களைத் தமிழுக்கு நிறையவே தரமுடியும் என்பது மகிழ்ச்சிக்குரியதுதான்.


எப்படி தமிழகத்தில் அசுரத்தனமான வணிக எழுத்துக்களுக்குள் இலக்கியங்கள் அமிழ்ந்து போயுள்ளனவோ, அதுபோலவே சினிமாவிலும் அங்கே வியாபாரப் படங்களின் வீச்சால் நல்ல படங்களுக்கான ரசனையை வளர்த்தெடுக்க முடியவில்லை.

ஆனால் நம் நாட்டில் இலக்கியத்தைப் பொறுத்தவரை, வணிக எழுத்துக்களின் தாக்குதல், அத்தனை வலிமையானதாக இல்லாதிருப்பது, நல்ல எழுத்திற்கு வாய்ப்பான சூழலைத் தந்திருக்கிறது. அதுபோலவே, சினிமாவிலும் சிறந்த படைப்புகளை உருவாக்கக் களம் இங்கே இருக்கிறது.

நம் நாட்டுக் கலைஞர்களால் முழுக்க முழுக்க பிரான்ஸிலேயே தயாரான **'முகம்'** என்னும் இந்த 2 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் கொண்ட திரைப் படத்தை இலங்கை ரசிகர்களுக்குத் திரையிட்டுக் காட்டவென, அதன்தயாரிப்பாளரான **நவரட்ணம் சிவஜோதி** தம்பதியினர் கொண்டுவந்திருந்தார்கள். சென்றமாதம் 15ம் திகதி மாலை 6 மணிக்கு கொழும்பு சுகததாஸ விளையாட்டு விடுதி அரங்கில் ஊடகத்துறையைச் சேர்ந்தவர்களுக்கென நடைபெற்ற 'முகம்' அறிமுக விழாவில் படம் காண்பிக்கப்பட்டது.

அதற்கு முன்பே பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிகளிலெல்லாம் இதுபற்றிய அறிமுகமும் கலந்துரையாடல்களும் நடைபெற்றிருந்தன.

படம் திரையிட்டு முடிந்தபின் அங்கேயே பார்வையாளர்களால் விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன.



## முகங்களும் திரைகளும்

இன்னும் என்ன இருக்கு,

கனவுகளைச் சேகரித்து வைத்திருந்த
பொக்கிஷங்களும் காலியாகின

இலைகளையுதிர்க்கும் போதே
இங்கே துளிர்க்கும் நம்பிக்கையோடு
மரங்கள்,
ஒவ்வொரு பருவகாலங்களிலும்
ஒவ்வோர் உயிர்ப்பு.

எல்லாக் காலங்களையும் தொலைத்து
'நம்பிக்கை' மீதே நம்பிக்கையிழந்து போக
சாகாவரம் பெற்றுவிட்டதாய்
கவலைகளும் கண்ணீரும்....

காலியாகிப்போன
எல்லா இதயங்களிலும் போர்வைகள்,
நிழல்கள்கூட வெறுப்பை உமிழும்.
'ஈபிள்' கோபுரம் மாத்திரமல்ல
இங்கே எல்லாமே
கூனிக்குறுகிப் போய்விட்ட எமக்கு முன்னால்
மிக உயரம்தான்.

ஆணிவேர் தறித்து அலங்காரம் செய்து
எங்கெங்கோ மரம் நாட்டினோம்.

முளைவிட்டவைகள் தவிர
கருகிப் போனவைகளும்
இவைகளில் அதிகம்.
சூரியன் இடம்பெயர்ந்துவிட்ட பின்னரும்
எம் தேசத்தில் முளைவிடும் விதைகள்,
இன்னும் எந்தக் காற்று
எங்கெல்லாம் அவைகளை
எடுத்துச் சென்று புதைக்குமோ,

கால்களை இழுக்கும் பாரத்தினூடு
நாட்கள் அறுபடும்.

முகமூடி தொலைய
எல்லா மனிதரும் நிர்வாணமாயினர்.

இன்னும் என்ன?

கல்லறைகளுக்குப்
பூச்சுப் பூசுவதற்கும்
வர்ணங்களைத் தொலைத்துவிட்டு
விழிகள் இமைக்க மறுக்கின்றன.

எல்லா முகங்களும்
எல்லாத் திரைகளும்
நாட்கணக்காக அழுக்கேறி....

எந்த உலகம் உன்னதமானது?
எந்த வாழ்க்கை உயர்ந்தது?

கேள்விகள் அனைத்தும்
அர்த்தங்கள் இழந்து போக
புத்தகங்களை
நெருப்புத் தின்கிறது.

- அருந்ததியின் 'இரண்டாவது பிறப்பு' கவிதைத் தொகுதியிலிருந்து...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதனையான புள்ளிவிபரம்

10231/2 கண்களின் அலட்சியப் பார்வை
29 மூஞ்சியப் பாரு குரங்கு....
431 ஆங்கில கெட்ட வார்த்தை (பெரும்பாலும் புரியாதவை)
14 செருப்பு பிஞ்சிடும்
1 புன்னகை (அதுவும் எனக்குப் பின்னால் பைக்கில் வந்தவனுக்கு)

எனக்கும் பெண்களுக்குமான உறவு இந்த கதியில் போனாலும்
எதிரில் வரும் பெண்களைப் பார்த்து மீண்டும் மீண்டும் ஆவலோடு
கண்களை நீட்டச் சொல்லும் இதயம் எனக்கு வந்து வாய்த்திருக்கிறது

**- தபூ சங்கர்**

அங்கேயும் அதன் பிறகான உரையாடல்களிலும் 'முகம்' பற்றிக் கூறப்பட்ட சில அபிப்பிராயங்களை இங்கே தொகுத்துக் கொள்ளலாம்.

முதலில், இது விவரணப் படத்தின் (*Doc-umentary Film*) சாயலைக் கொண்டிருக்கிறது என்பது.

புலம்பெயர்ந்த இளைஞன் ஒருவனின் அனுபவக் கடலில் ஒரு சிறு துளிதான் இது என்று படத்தின் ஆரம்பத்தில் இயக்குனர் குறிப்பிட்டாலும் பல விபரங்களைச் சொல்லிவிடவேண்டும் என்ற முனைப்பில் காட்சிகள் திணிக்கப்பட்டிருப்பதால் விவரணப் படமாக உணர வைக்கிறது. என்பது சிலர் அபிப்பிராயம்.

சினிமா என்பது உலகப் பொதுவான ஒரு மொழி என்றால், 'முகம்' திரைப்படம் ஈழத்தமிழர்களிடத்தில் மட்டுமே சலனங்களை ஏற்படுத்தும் வலிமையைக் கொண்டிருக்கிறது. சினிமா என்கிற மொழியைப் பயன்படுத்தியிருப்பதில் பல வீனம்தான் தெரிகிறது.

**கலை ஒருவனின் உணர்ச்சிகளையே பாதிக்கிறது, அறிவையல்ல. கலையின் பணி நன்மையை ஏற்குமாறு மனித ஆன்மாவைத் திருப்புவது. சினிமா ஒரு உன்னதமான கலைவடிவம்.**

**- ரஷ்ய இயக்குனர் தார்க்கோவ்ஸ்கி**

இசை, குறிப்பாக பிரான்ஸ் காட்சிகளைக் காட்டும்போதும் யாழ்ப்பாணக் கிராமத்தை காட்டும் போதும் வேறுபாடு கண்டுகொள்ள முடியாமல் ஒலிக்கிறது. அதாவது, இசையால் இந்தக் காட்சிகளின் மாறுபாட்டையும் வித்தியாசப்படுத்தியிருக்க முடியும். அது முகத்தில் சரியாக அமையவில்லை என்று சிலர் குறிப்பிட்டார்கள்.

நம்மவர்கள் பிரான்ஸில் படும் அவலங்களைச் சொல்லவேண்டும் என்பதற்காக, பிரான்ஸ் தேசத்தவர்களின் முகம் மறைக்கப்பட்டிருக்கிறது. அதாவது படத்தில் அவர்கள் வில்லன்களாக மட்டுமே வருகிறார்கள். அதன் மறுபக்கத்தைக் காட்டியிருக்கக்கூடிய இடங்களிலும் அது தவறவிடப்பட்டுள்ளது.



ஞான ராஜசேகரன்

இப்படி ஆங்காங்கே நெருடல்கள் இருந்தாலும் நம்மவர்களின் புகலிடத் துயரங்களில் சிலவற்றை மனதைத் தாக்கும்படி சொல்லியிருப்பதில் முகம் வெற்றி பெறுகிறது.


எங்கள் சினிமா, சரியான ஒரு பாதையைத் தெரிவு செய்துகொண்டுவிடும் என்பதற்கான நம்பிக்கையைத் தந்திருப்பதற்காக அருந்ததியையும் தயாரிப்பாளர்கள் நவா-ஜோதியையும் நிறையவே பாராட்டலாம்.

**த**மிழ்ப் படவுலகின் 'கொலிவுட்'டான கோடம்பாக்கத்திலிருந்தும் மற்றொரு 'முகம்' திரைக்கு வரவிருக்கிறது.

'மோகமுள்' திரைப்படத்தைத் தந்த ஞானராஜசேகரன் எடுத்துக்கொண்டிருக்கும் புதிய படத்தின் பெயரும் 'முகம்'.

அருவருப்பான, பார்வைக்குக் குரூரமான முகத்தையும் அதே சமயம் தன்னகத்தே பல்வேறு திறன்களையும் கொண்ட ஒரு மனிதனை இந்த சமூகம் எப்படி மதிக்கிறது... எப்படியெல்லாம் அலைக்கழிக்கிறது என்பதைச் சொல்ல வருகிறதாம் ஞானராஜசேகரனின் 'முகம்'.

அவர் சொல்கிறார்: "இந்த உலகத்தில் *Face value*வை வைத்துத்தான் பெரும்பாலான அபிப்பிராயங்கள் உருவாகின்றன. ஒரு மனிதனை அவனுடைய முகத்தை வைத்தே 90 சதவீத முடிவுக்கு வந்துவிடுகிறோம். ஆனால் அவனுக்குள்ளே புதைந்திருக்கும் உண்மையான முகம் பற்றி ஆராய்வதைத்தான் என் படத்தில் செய்திருக்கிறேன். படத்தின் ஹீரோ நாஸருக்கு இரண்டு முகங்கள். இரண்டுக்கும் இரண்டு விதமான அனுபவங்கள், சூழ்நிலைகள். நாஸருடைய உண்மையான முகம் எது என்பதை ஆராய்கிறது இப்படம். இதுவரை தமிழ் சினிமாவில் யாரும் கையாளாத புதுவகையான பாணியில் கதை சொல்லியிருக்கிறேன்..." என பெருமிதத்தோடு சொல்கிறார் இயக்குனர் ஞானராஜசேகரன்.



நாஸர்

முகம் அசிங்கமாகவும், அகம் எதிர்பார்ப்புகள் நிறைந்ததாகவும் சமூகத்தில் உள்ள பலரது மனப் புழுக்கத்தைச் சொல்லப்போகிறது படம்.

வடுக்களும் அசிங்கமாக, பார்க்கச் சகிக்காத கொடூர முகத்துடன் நடிக்கிறார் நாஸர். *Computer* உதவியோடு நாஸரின் இந்தக் குரூர முகத்தை வடிவமைத்திருப்பவர் பிரபல ஓவியர் மருது. மேக்கப் டிசைனர் - புதியவர் - பெண் - பெயர் பானு. ஒளிப்பதிவு பி.சி.ஸ்ரீராம். இசை இளையராஜா. நாஸருடன் ரோஜா, மணிவண்ணன் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

**கொசுறுச் செய்தி:**

நாஸர் தன் அடுத்த சொந்தப் படத்திற்கும் ரெடியாகிவிட்டார். அவதாரம், தேவதை ஆகியவற்றைத் தொடர்ந்து அவரது இயக்கத்தில் வெளியாகப் போகும் மூன்றாவது படம் **'மாயன்'** ●



சினிமா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நடிகைகளில் முதலில் இராணுவ **மேஜர் கேளுண்ணி** என்பவரது மகளாக இருந்த ரேவதி திரைக்கு வந்தார். இப்போது **கேர்ணல் குனா** என்பவரின் மகள் பெங்களூரிலிருந்து வந்திருக்கிறார். அவர், 'உன்னைத் தேடி' புகழ் மாளவிகா.

இதற்கிடையில் நடிகை ஒருவரே இராணுவ கொமாண்டராகும் படம் 'பாரத ரத்னா' திரைக்கு வருகிறது. கொமாண்டருக்குத் தகுதியுள்ள நடிகை வேறு யார்? விஜயசாந்திதான்!





**நீ அழகாய் முறித்த**
**சோம்பலில் ஒடிந்தவன்**
**நான்.**

அறிவுமதியின் அந்தக் கவிதையைச் சொல்லியபடி உலகை மறந்த உற்சாகத்தில் இருப்பவர் அஜீத் குமார். காரணம் முன்னாள் பேபி நடிகையும் இந்நாள் முன்னணி நடிகையுமான ஷாலினி.

வாலி படத்தின் வெற்றிக்குப் பிறகு படத்திற்கு ஐம்பது லட்சம் வாங்குகிற சந்தோஷமெல்லாம் ஒருபக்கமிருந்தாலும், அஜீத்தின் இப்போதைய சந்தோஷம் ஷாலினி ஷாலினி ஷாலினிதான்!

எப்போதும் பேசிக்கொண்டே இருப்பதற்காக செல் ஃபோன் பரிசளித்திருக்கிறார். **"தன் நிழலைத் தானே சுமக்கிற தஞ்சை கோபுரம் போல உன்னை நான் சுமப்பேன்"** கவிதை மழை பொழிகிறார்.

ஷாலினியின் தந்தையும் சம்மதம் சொல்லிவிட்டார். விரைவில் 'டும் டும்'தான் என்று சந்தோஷமாய் வெட்கப்படுகிறார் ஷாலினி.

அஜீத்திடம், ஹீரா பற்றிக் கேள்வி கேட்க விரும்புகிறவர்களெல்லாம் நரகத்திற்குப் போங்கள்!

**சற்றுமுன் அவள் நடந்து போன தடயம் எதுவுமின்றி**
**அமைதியாகக் கிடக்கிறது வீதி**
**ஆனால்**
**அதிவேக ரயிலென்று கடந்து போன தண்டவாளம் போல**
**ஏன் இன்னும் அதிர்கிறது என் இதயம்?**

**- தபூ சங்கர்**

"எனது 18 வருட சினிமா வாழ்க்கை எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்துவிட்டது. ஒவ்வொரு விஷயத்தையும் நேற்று, இன்று, நாளை என்று பிரித்துப் பார்த்து யோசிக்க முடிகிறது. ஆரம்ப காலத்தில் என்னுடன் ஜோடியாக நடித்த பல ஹீரோயின்கள் இப்போது ஃபீல்டில் இல்லை. சில பேர் அக்கா, அம்மா என்று நடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எனக்கு ரொம்ப முக்கியமானவர்கள். என் படங்களின் வெற்றி மூலமாக என் வளர்ச்சிக்கு அவர்களின் இளமைத் துள்ளல் பயன்பட்டிருக்கிறது. அவர்களை நான் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்."

மேற்கண்டவாறு வாக்குமூலம் தந்திருப்பவர் நடிகர் கார்த்திக்.

அதாவது, நடிகைகள் மட்டும் இளமைத் துள்ளலோடு இருக்கவேண்டும், நடிகர்கள் தொந்தி விழுந்து, தலையில் சொட்டை விழுந்து, முகம் நட்டுவாக்காலியாகச் சதை தொங்கிய பிறகும் பாடப் புத்தகங்களைக் காவிக்கொண்டு பள்ளிக்கூடம் போகும் மாணவனாக வருவதையும், பேத்தி வயதில் இருப்பவர்களைக் கட்டிப் பிடித்துக் காதல் செய்வதையும் நம்மவர்கள் சகிப்பார்கள் என்பதைச் சொல்கிறார் அவர்.



வாழ்வின் பிற்பகல் வயதுக்கு வந்துவிட்ட கார்த்திக்கிற்கு தனது முன்னாள் ஹீரோயின்களாகவும், இந்நாள் அக்கா அம்மாக்களாகவும் நடிக்கும் நடிகைகள் பற்றி வலு கூலாக 'கொமென்ட்' அடிக்க முடிகிறது. பாவம்! அம்பிகா, வடிவுக்கரசி, ராதிகா, ரேவதி, ஐஸ்வர்யா.... மற்றும் இன்னோரன்ன இன்றைய அம்மா அக்காக்கள்.

அது ஒருபுறமிருக்க, தனது புதிய படமான **ரோஜாவனத்**திற்கு இன்றைய இளமைத் துள்ளல்களான மாளவிகாவையும், லைலாவையும் சிபார்சு செய்திருக்கிறார் கார்த்திக்.

இங்கே அவருடன் படத்திலிருக்கும் **லைலா** பற்றி....

விஜயகாந்துடன் கள்ளழகர் படத்தில் அறிமுகம். லண்டனில் உள்ள *Royal Academy of Dancing* ல் ஐந்து வயதிலிருந்தே 'பாலே' பயின்றிருக்கிறார். பம்பரமாய்ச் சுழன்று ஆடத் தெரிந்தவர். இன்னும் இருபது வயதைத் தாண்டவில்லை. பிறகென்ன, கார்த்திக் போன்ற முன்னணித் தமிழ்க் கதாநாயகர்களுக்கு ஜோடியாவதில் என்ன தடை?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் நடிப்பை உலகத் தரத்திற்கு உயர்த்தியவர்

தமிழ்த் திரைப்படவுலகில் ஒரு மாற்றமும் எழுச்சியும் ஆரம்பிக்கத் தொடங்கியது. 1952ம் ஆண்டில் "பராசக்தி" வெளிவந்த பின்புதான் என்று சொல்வதில் மிகையில்லை.

தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி கலைஞர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த தமிழ்ப்படவுலகம் தஞ்சாவூர்க் கிராமம் ஒன்றிலிருந்து வந்து தமிழ் வசனங்களுக்கு உயிரையும் வலுவையும் ஊட்டிய சிவாஜி கணேசனின் வருகையோடு புதுப் பரிமாணத்தை அடைந்தது.

காலப்போக்கில் தமிழ்ப்படவுலகத்தை சர்வதேச ரீதியிலான கண்பட வைத்தது. அதன் முதல் கட்டம்தான் "வீரபாண்டிய கட்டபொம்மன்". ஆசிய ஆபிரிக்க திரைப்பட விழாவில் சிறந்த படம். அதில் சிறப்பாக நடித்த நடிகர் திலகத்திற்கு சிறந்த நடிகர் ஆக இரண்டு விருதுகள் வழங்கப் பட்டது. (இந்தியாவிலேயே நடிப்புக்கென்று வெளிநாட்டில் விருது பெற்ற முதல் நடிகன் என்ற சிறப்பைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது)



இதன் விளைவாக அமெரிக்கா அரசாங்கமே அழைப்பு விடுத்து வோஷிங்டனில் ஒரு நாள் மேயர் பதவி கொடுத்து கௌரவித்தார்கள். இதே கௌரவம் முன்பு மறைந்த பாரதப் பிரதமர் நேருவுக்கும் வழங்கப்பட்டிருந்தது.

பிரான்ஸ் நாட்டு **செவாலியர்** விருது. இந்தியாவின் மிகச் சிறப்பான **தாதா சாகிப் பால்கே** (தமிழ்த் திரைப்பட உலகுக்கு முதல் முதல் சிவாஜி கணேசனால் இப் பெருமை கிடைத்தது.) போன்ற உயர் விருதுகள் அனைத்தும் சிவாஜியைத் தேடி வந்தன.

ஒஸ்கார் விருதை பல முறை பெற்ற **மார்லண்ட் பிராண்டோ** என்ற அமெரிக்க ஆங்கில நடிகர் கூட ஒரு முறை சிவாஜியின் நடிப்பைப் பார்த்து "இவர் நம்மிடையே பிறக்காதது நான் செய்த பாக்கியம்" என்று வியந்ததோடு சிவாஜியை நேரில் வரவழைத்துப் புகழாரம் சூட்டினார்.

தமிழ்த் திரைப்படவுலகில் மத்திய அரசின் விருதுகளான பத்மஸ்ரீ, பத்மபூஷண் மற்றும் பல்கலைக் கழகத்தின் டாக்டர் பட்டமும் பெற்ற முதல் தமிழ்ப் படக் கலைஞனாக நடிகர் திலகம் விளங்குகிறார்.

இன்று அவரது நடிப்பை விமர்சிப்பவர்கள் மிகை நடிப்பு என்று குறைப்பட்டுக் கொண்டாலும், ஒரு அரசன் எப்படி நடப்பான் என்பதற்கும், பல நூறு கேள்விகளை ஒரு புருவ உயர்த்தலில் எப்படிக் காட்டலாம் என்பதற்கும், சமூகத்தின் பல்வேறு மனிதர்களையும் பாத்திரமாக்கி அவர்களது நடவடிக்கைகளை, சேட்டைகளை வெளிக்கொணர்வதிலும், வசனங்களைப் பேசும் முறையிலும் இலக்கணத்தை வகுத்துவிட்டவர் சிவாஜி.

இன்றைய நடிகர்கள் பலரிடமும் ஏதோ ஒரு இடத்திலாவது அவரின் நடிப்புச் சாயலைக் காணமுடிவது இதனால்தான்.

சிவாஜி திரைக்கு வருவதற்கு முன்பு நாடக மேடைகளில் பெண் வேடத்தின் மூலமே பிரபலமானவர்.

நாடகஉலகத்தில் பெண் வேடமிட்டுச் சரித்திரம் படைத்த சிவாஜி, அதை நினைவூட்டிக் கொள்வது போல் **குங்குமம்** படத்தில் நடித்திருந்தார். உடையலங்காரம், நடையலங்காரம், பெண்மையை நடிப்பில் வெளிப்படுத்திய விதம், குரலை மாற்றிப் பேசுவது என்று காட்சிகளில் ரிதம் காட்டியிருப்பார்.

தமிழ் சினிமாவைப் பொறுத்தவரையில் சிவாஜி ஒரு சகாப்தமேதான்.

**பொ. லெய்ரன்**
**யாழ்ப்பாணம்.**





**கண்களால் என்னை வீழ்த்தினாய்**
**பட்டப்பகலில் இதயத்தைக் கொள்ளையடித்தாய்**
**முத்தம் என்கிற பெயரில் முழுவதும் என்னை சூறையாடினாய்**
**ஆனால்**
**உலகம் உன்னை விட்டு விட்டு**
**யார் யாரையோ தீவிரவாதியென**
**கைது செய்து அழைத்துப் போகிறது.**
**- தபூ சங்கர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## காணாமல் போனவர்கள்

**அஷ்ர.்.ப் சிஹாப்தீன்**

**யாத்ரா வெளியீடு**

**37, தங்கனத்த வீதி, மாபொல, வத்தளை.**

**விலை : 100 ரூபா  பக்கம் : 142**



கவிதைகள் ஒருவரை எவ்விதம் பாதிக்கின்றன? எழுத்துக்கு இருக்கும் வலிமை பற்றிச் சொல்லப்படுவதெல்லாம் மிகைப்படுத்தல்கள் தானா? இல்லை. எழுத்துக்கு உள்ள மந்திரத் தன்மை என்பது முற்றிலும் மிகை இலலை.

தனித்தனியாக ஒவ்வொருவரையும் பாதிக்கும் எழுத்து சமூகத்தின் கூட்டு மனநிலையிலும் மாற்றத்தை உண்டுபண்ணுகிறது. அது சமூகத்தைப் புரட்டிப் போடுகிறது.

ஒருவனைச் செயற்படவும் தூண்டுகிற கிரியா சக்தியாக எழுத்து இவ்விதம் மந்திரத் தன்மை பெறுகிறது.

அஷ்ர.்.ப் சிஹாப்தீனின் 'செய்த்தூன்' கவிதை 1985ல் கிழக்கு மாகாணம் முழுவதும் ஏற்படுத்திய பாதிப்பும் இதையே உணர்த்துகிறது. பேரினவாதத்திற்கெதிராக கிளர்ந்தெழுந்த தமிழ் இளைஞர்களின் எழுத்தில் விளைந்த வேகமும் துடிப்பும் பின்னர் அவர்கள் காரணமாக முஸ்லீம் இளைஞர்களிடமும் அதே வேகமும் துடிப்பும் உருவாகுமாறு ஏற்படுத்திவிட்டது வரலாற்றின் வேதனையான முரண். தமிழ்ச் சமூகம் இதற்காக தனித்த சிலரிடம் பழிபோட்டு விட்டுத் தப்பித்துக் கொள்ள நினைப்பதும் அதன் மொத்த நபும்சகத் தனத்தைக் காட்டுவதாகவே இருக்கும்.


அது ஒருபுறமிருக்க, சமூகத்தின் கூட்டு மனத்தை ஆவேசப்படுத்துவதாக எழுதப்படும் கவிதைகள் எங்கிருந்து வருகிற போதும், பின்விளைவாக அதன் நியாயத் தன்மைகளை எல்லாம் சாகடித்து விட்டு மானுடத்தை விழுங்கி அரைப்பதையே வரலாறாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். பழி அஷ்ர.்.பிடம் மட்டும் இல்லை.

## ஈழத்து தமிழ் நாவல்களிற் சில திறனாய்வுக் குறிப்புகள்

**கே.எஸ். சிவகுமாரன்**

**21, முருகன் இடம், கொழும்பு 06**

**விலை : 190 ரூபா  பக்கம் : 176**



நான்கு தசாப்தங்களுக்குமேலாகதமிழிலும் ஆங்கிலத்திலும் பல்வேறுபட்ட திறனாய்வுகளைத் தொடர்ந்து செய்து வரும் கே.எஸ். சிவகுமாரன் தந்துள்ள மற்றுமொரு படைப்பு இது. ஈழத்து நாவல்களையிட்டு பல்வேறு மதிப்பீடுகள் அவரவர் கருத்து நிலைப்பாடுகளுக்கு ஏற்ப வெளிவந்து இருக்கின்றன. இதில் நடுநிலை என்ற ஒரு நிலை எது என்று தேடுவது கடினமான காரியம்தான். வஞ்சகமில்லாமல், முகஸ்துதியில்லாமல் தமது மனதில் படுவதை எழுதிவைப்பதையே ஓரளவு நேர்மையான எழுத்தெனக் கொள்ளவேண்டி இருக்கிறது.

எனினும் ஈழத்து நாவல்களை கரிசனையோடு ஆய்வுக்குட்படுத்துவது என்பதே இன்று மெச்சத்தக்க பணிதான். இந்தவகையில் கே.எஸ். சிவகுமாரனின் இடையறாத திறனாய்வு முயற்சி தமிழ் இலக்கியத்துறைக்கு உறுதுணையான செயற்பாடே.

நூலின் ஆரம்பத்தில் நாவல் இலக்கியம் பற்றித் தனக்குள்ள கருத்துக்களைத் தெரிவித்துள்ளமை அவரது விமர்சனக் கண்ணோட்டத்தைப் புரிந்துகொள்ள வகை செய்வதாய் உள்ளது.

இன்று 'நாவல்' என்றால் என்ன என்று எழுப்பப்படும் புதிய கேள்விகள் விவாதங்கள் அவரையும் சற்றுப் பாதித்துள்ளதை உணர முடிகிறது. இதுவே கூட மகிழ்ச்சிக்குரியதுதான். ஏனெனில், பழைய தலைமுறை ஆய்வாளர்கள் எனப்படுவோரில் பலர் - அதிலும் அக்காலத்துப் புதிய சிந்தனைகளை இறக்குவதற்கு முனைப்போடு செயற்பட்ட பலர் - இன்றைய புதிய விஷயங்களைக் காணவே கூசிக்கொண்டு தீட்டு மனப்பான்மையோடு நடந்து கொள்வதைப் புரிந்துகொள்ள முடியாமல் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திறனாய்வுப் பார்வைகளில் தனக்கென ஒரு பாணியையும் மரபையும் பேணிவரும் சிவகுமாரனிடமுள்ள குறிப்பிடத்தக்க அம்சம் அவர் தனது திறனாய்வுகளில் சிறிது பெரிது, அல்லது தகுந்தது தகாதது என்று எந்தப் படைப்பையும் புறந்தள்ளுவதில்லையென்பதுடன் ஒரு படைப்பிற்கூட எந்த அம்சங்களையும் ஆய்வுக்குரியதல்லவென விட்டுவிடுவதில்லை. இத்தொகுதியில் 32படைப்புகளை எடுத்தாராய்ந்துள்ளதுடன் மேலும் சில படைப்புகளைப் பற்றி சிறு குறிப்புகளும் வழங்கியுள்ளார்.


## நீதிபதியின் மகன்

**ஆங்கில மூலம் : அழகு சுப்பிரமணியம்**

**தமிழில் : ராஜ ஸ்ரீகாந்தன்**

**76/35, பரமானந்த மாவத்தை, கொழும்பு 13.**

**விலை : 100 ரூபா  பக்கம் : 140**



ஆங்கில இலக்கியத்துறையில் மிகுந்த உலகப் புகழ் பெற்ற இலங்கை எழுத்தாளராகிய அழகு சுப்பிரமணியத்தின் சிறுகதைகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடும் நல்லதோர் முயற்சியை மேற்கொண்டு, அவரது 12 தேர்ந்தெடுத்தசிறுகதைகளை உள்ளடக்கி **நீதிபதியின் மகன்** என்ற பெயரில் முதலாவது சிறுகதைத் தொகுதியை வெளியிட்டுள்ளார் பத்திரிகை ஆசிரியரும் எழுத்தாளருமான திரு. ராஜ ஸ்ரீகாந்தன். தொடர்ந்தும் அவரது ஏனைய சிறுகதைகளையும் மொழிபெயர்த்து வெளியிடவுள்ளார்.

1915ல் தோன்றி 1973 ல் மறைந்த சட்டத்தரணியும் முற்போக்கு இலக்கியவாதியுமான அழகு சுப்பிரமணியத்தின் சிறுகதைகள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இத் தொகுதியில் இடம்பெறும் முதலாவது கதையாகிய "கணிதவியலாளன்"என்றசிறுகதை அது வெளிவந்த அக்காலத்திலேயே மிகவும் சிலாகித்துப் பேசப்பட்டது. **"உலக இலக்கியத்தின் உன்னதச் சிறுகதைகள்"** என்ற சிறுகதைத் தொகுப்பிலும் இடம் பெற்றது.

பிற மொழி இலக்கியங்களின் செழுமைகள் பலவும் இன்று புலம்பெயர்ந்த தமிழர்கள் மூலம் தமிழ் இலக்கியப் பரப்புக்கு நேரடியாக வந்துகொண்டிருக்கின்ற ஒரு சந்தியில் திரும்பி நிற்கிறோம்.

இச்சந்தர்ப்பத்தில் எமது அன்றைய இலக்கியவாதி ஒருவரின் பிறமொழிப் படைப்புகளை தமிழாக்கம் செய்து வழங்கும் ராஜ ஸ்ரீகாந்தனின் இந்த முயற்சியும் நமது இலக்கியச் சூழலுக்கு வளம் சேர்ப்பதாகவுள்ளது.

## பொன்னாலைக் கிருஷ்ணபிள்ளையின் கவிதைகள் ஓர் ஆய்வு

**மாதவி சுந்தரம்பிள்ளை**

**பாரதி பதிப்பகம் 430, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.**

**விலை : 150 ரூபா  பக்கம் : 118**



1898ல் பிறந்து இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் தனது இலக்கியத் தடம் பதித்த வரகவி பொன்னாலைக் கிருஷ்ணபிள்ளையின் கவிதைகளை ஆய்வுப் பொருளாக்கி, யாழ். பல்கலை. விரிவுரையாளர் செல்வி மாதவி சுந்தரம்பிள்ளை வெளியிட்டுள்ள இந்நூல் இலக்கிய மற்றும் திறனாய்வுத் துறையில் ஈடுபாடு கொண்டவர்களுக்கும், கலைத்துறை மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

"பொது ஸ்தாபனமாகிய கோவில்களை வியாபார ஸ்தலமாக்கி வைத்துக்கொண்டு உண்மையில் தேசநன்மைக்காகப் பாடுபட்டுழைக்கும் உழுதுண்போரை எளிய சாதியரென்றும் தொழுதுண்போர்கள் தாங்கள் பெரிய சாதியென்றும் பேசிக் கொண்டும் நாய் பூனை எலி காகங்கள் குருவிகள் எச்சமிடுங் கோயில்களுக்குள் அரிதான மானிடப்பிறவி எடுத்தவர்களை நுழைய அருகதையற்றவர்களென்று பேசி அக்கிரமம் செய்வதைப் பார்த்தால் எங்கள் சமயத்திற்கே பெரும் இழுக்காக ஏற்படுகின்றது."

என்று 1949 ல் எழுதியிருக்கிறார் புத்துலகு காண விழைந்த பொன்னாலைக் கிருஷ்ணபிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹற்றன் நஷனல் வங்கியிடமிருந்து
பாதுகாப்பையும் உயர்ந்த வருவாயையும் வழங்கும்

# நீண்டகால வைப்புச் சான்றிதழ்கள்

**4 வருடகால** வைப்பிற்கு வருடாந்தம் **15%**

**5 வருடகால** வைப்பிற்கு வருடாந்தம் **16%**

(வருடாந்த வட்டி வீதம் 12.5%)

**பெறும் நன்மைகள்:**

- நிறுத்தி வைக்கும் வரி இல்லை.
- முத்திரை வரி இல்லை.
- உயர்ந்த வட்டி வீதம்
- படிவங்கள் நிரப்புவதற்கில்லை. எனவே முற்றிலும் இரகசியமானது.
- முதலீட்டுக் கடன்களுக்குப் பிணையாகப் பயன்படுத்தலாம்.

| காலம் | 4 வருடங்கள் | 5 வருடங்கள் |
|---|---|---|
| வட்டி வீதம் | 15% வருடாந்த வட்டி | 16% வருடாந்த வட்டி |
| தொகை | ரூ. 62,500/- | ரூ. 55,555/- |

**முதிர்வு நிலையில் பெறுமானம் : ரூபாய் 100,000/-**

இவை அனைத்தும், இன்னும் நூறு வருட வரலாற்றுறுதியும் பாரம்பரியமும் மிக்க ஹற்றன் நஷனல் வங்கியின் வாடிக்கையாளர் சேவையும் உங்களுக்காக காத்திருக்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு முகாமையாளருடன்
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

**ஹற்றன் நஷனல் வங்கி**
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

தலைமை அலுவலகம் : 10, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
தொலைபேசி: 421885-7, 337501-5 பக்ஸ்: 320745

SOMAHANGAMA ASSOCIATES (PVT) LTD.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூத்துச் சிரித்திடும் ரண்கெகுளு அதிர்ஷ்டம்

உங்களது ரண்கெகுளு சேமிப்புக் கணக்கின் மூலம் பெறுமதியான ஏராளம் பரிசுகளை வெல்ல இப்பொழுது அரியதொரு வாய்ப்பு.

**முதலாம் பரிசு**

10 மல்டி மீடியா கொம்பியூட்டர்கள்

**இரண்டாம் பரிசு**

100 மௌண்டன் பைசிக்கிள்கள்

**மூன்றாம் பரிசு**

10,000 ரண்கெகுளு பாடசாலைப் பைகள்



FIRST & FORWARD

ரண்கெகுளு கணக்கொன்றை ஆரம்பிப்பதன் மூலமோ அல்லது தற்போதுள்ள ரண்கெகுளு கணக்கில் 1999 ஜூன் மாதம் 30ந் திகதியன்று ஆகக்குறைந்த கணக்கு மீதியாக 3,000 ரூபாவை பேணுங்கள். நீங்களும் ரண்கெகுளு அதிர்ஷ்டச் சீட்டிழுப்பிற்குத் தகுதி பெறுவீர்கள்.

இனியுமென்ன தாமதம். உங்கள் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இன்றே நீங்களும் இலங்கை வங்கியில் ரண்கெகுளு கணக்கொன்றை ஆரம்பித்து சேமிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

ஏற்கெனவே ரண்கெகுளு கணக்கொன்று உங்களிடமிருந்தால் மேலும் மேலும் சேமியுங்கள்.

ஞாபகமிருக்கட்டும். சேமிப்பதால் உங்களுக்கும் வெற்றி. நாட்டுக்கும் வெற்றி.

இலங்கை வங்கி

ලංකා බැංකුව Bank of Ceylon

புதிய நூற்றாண்டின் - தேசத்தின் ஒளிவிளக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org